

திருக்கோயில்

ஏப்ரல் 1978 ரூ 1-25

சென்னைப் பல்லாவரத்திற்கு அடுத்த அனகாபுத்தூரில் நிகழ்ந்த, தமிழ்நாடு தேவார ஓதுவார்கள் சங்க மாநாட்டில், தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், அறநிலைய ஆணையர் திரு எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., அவர்களும் கலந்துகொண்டு சிறப்பிக்க, சட்ட மன்றத் தலைவர் மாண்புமிகு திரு முனுஆதி அவர்கள் உரை நிகழ்த்துதல்.

முகப்பு:

அருள்மிகு இராமநாத சுவாமியும்,
அருள்மிகு பர்வத வர்த்தனி
அம்மையும்—இராமேசுவரம்.

திருக்கோயில்

மாலை : 20 | காளயுக்தி ஆண்டு—சித்திரைத் திங்கள் ஏப்ரல்—1978 | மணி : 7

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் - திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப் பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன்,. இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங் களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொரு வரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடு மாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் *[PINCODE]* எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறை யாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற் பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொரு வருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளி நாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ. 25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொருளடக்கம்

இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகம்
—மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள்

திருநாவுக்கரசர்
—திரு எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,

சிவஞான போதத் தெளிபொருட் சுருக்கம்
—திரு ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,

திருத்தொண்டர் புராணம்
—'சிலம்புச் செல்வர்' திரு ம. பொ. சிவஞானம்

திருப்பாவையில் திருக்குறள்
—திரு ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,

திருஅருட்பாவில் சொல் ஓவியங்கள்
—தவத்திரு ஊரன் அடிகள்

மாறன் அடிபணிந்து உய்ந்த இராமாநுசர்
—திரு ஏ. ஆர். பார்த்தசாரதி நாயுடு.

திருமால் நெறி —திரு சே. இராமாநுஜாசாரியார்

தேவார திருவாசகத் திருமுறைகளின் சிறப்பு
—ஆசிரியர்

சங்கு சுவாமிகள்
—திருமுருக கிருபானந்த வாரியார்

பன்னிரு திருமுறைகள்
—ஆசிரியர்.

கந்தபுராணக் காப்பிய நலம்
—திரு க. த. திருநாவுக்கரசு, எம்.ஏ., எம்.லிட்.,

சேக்கிழார் எடுத்த செஞ்சொற்கோயில்
—திரு. சி. சு. கண்ணயிரம்.

செங்கற்பட்டு மாவட்டக் கோயில்கள் பற்றிய குறிப்புகள்
—ஆசிரியர்.

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகம்



மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள்

(தமிழக முதல்வர் & அறநிலைய அமைச்சர்)

முகவுரை

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959), 1960-ம் ஆண்டு ஜனவரி 1-ஆம் நாள் முதற்கொண்டு செயலுக்கு வந்தது. இச் சட்டம் அரசுத்துறை ஒன்றினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்துறைக்கு ஆணையாளர் சட்டப்படிக்கான தலைவராவார். இச் சட்டத்தின் பற்பல விதித்துறைகளையும், விதிகளையும் சரிவரச் செயலுக்குக் கொண்டு வருவதில் அவருக்கு துணை ஆணையாளர்கள் எழுவரும், உதவி ஆணையாளர்கள் பதினாறு பேரும் உதவி புரிந்து வருகின்றனர். இதைத் தவிர இச்சட்டத்தின்கீழ் அவர்களுக்கே உரிய சட்ட பூர்வமான சில கடமைகளையும் நிறைவேற்றி வருகிறார்கள். இத்துடன் ஆணையாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில், பின் வரும் பிரிவுகள் இத்துறையில் இயங்கி வருகின்றன:—

(1) வருவாய்ப் பிரிவு.—கோயில் நிலங்களை ஆய்வு செய்து அவற்றைச் சரிவர நிர்வகிப்பதற்காக மாவட்ட வருவாய் அதிகாரியின் தரத்தில் ஒரு தனி அதிகாரியும், தேவையான பணியாளர்களும் இப்பிரிவில் பணியாற்றி வருகின்றனர்.

(2) தணிக்கைப் பிரிவு.—சமய நிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காக, மாநிலக் கணக்காய்வாளர் அலுவலகத்திலிருந்து பெறப்பெற்ற தலைமைத் தணிக்கை அலுவலர் ஒருவர், தேவையான பணியாளர்களுடன் இப்பிரிவிற்குத் தலைவராக இருந்து பணியாற்றி வருகிறார்.

(3) பொறியியற் பிரிவு.—சமய நிறுவனங்களின் திருப்பணி மதிப்பீடுகளைத் தயாரித்துப் பரிசீலனை செய்வதையும், அத்திருப்பணிகளை மேற்பார்வையிடுவதையும் இப்பிரிவு கவனித்து வருகிறது. இது ஒரு மேற்பார்வைப் பொறியாளரின் தலைமையில் தேவையான பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

இவை தவிர, சமய நிறுவனங்களின் திருவாபரணங்கள், விலையுயர்ந்த பிற உடைமைகள் ஆகியவற்றிற்கு விலை மதிப்பிட்டுச் சரி பார்ப்பதற்கும் உதவி ஆணையாளர்கள் தரத்தில் சரி பார்க்கும் அலுவலர்கள் எட்டு பேரும், அவர்களுக்குத் தேவையான உதவியாளர்களும் உள்ளனர். வட்டாரத் துணை ஆணையாளர்களிடம் நீண்ட காலமாக நிலுவையிலுள்ள நீதியியல் விசாரணைகளை விரைவில் விசாரணை செய்து முடிப்பதற்காகத் தனியாக ஒரு துணை ஆணையாளர் இயங்கி வருகிறார். சமய நிறுவனங்களுக்குச் சொந்தமாயுள்ள கட்டிடங்களுக்கு நியாய வாடகை நிச்சயிப்பதற்காக, நிர்வாகப் பொறியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஒவ்வொரு கட்டிடத்திற்காகவும் விதிக்கப்படத் தக்க நியாய வாடகையை நிர்ணயிப்பதில் ஆங்காங்குள்ள வாடகை நிர்ணயக் குழுக்களுக்கு இவர் ஆய்வுரை வழங்குவார்.

நமது மாநிலத்தில் 51,833 இந்து சமய நிறுவனங்கள் உள்ளன என்றும், அவற்றிற்குச் சொந்தமாக நன்செய், புன்செய் நிலங்கள் 6,10,741 ஏக்கர் உள்ளன என்றும் மதிப்பிடப் பட்டுள்ளது. இவற்றில் 24,605 சமய நிறுவனங்கள் இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்த நிறுவனங்களுக்கு 5,70,304 ஏக்கர் நிலங்கள் சொந்தமாக உள்ளன. எஞ்சிய சமய நிறுவனங்களைப் பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

சமய நிறுவனங்களைத் தரம் பிரித்தலும் அறங்காவலர்களின் நியமனமும்

இந்து சமய அறநிலைய மூலச்சட்டமானது குடியரசுத் தலைவரின் 24/1976 ஆம் சட்டத்தினால் திருத்தப் பெற்றது. 1976 ஜூன் 1 ஆம் நாளன்று இத்திருத்தம் செயலுக்கு வந்தது. இச்சட்டத்தின் விதித்துறைகளின்படி, இந்து சமய பொது நிறுவனங்கள் அவற்றின் ஆண்டு வருவாயையொட்டி (சகாயத் தொகை விதிப்பிற்குரிய) பின்வரும் நான்கு தரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன:—

(1) ரூபாய் 10,000-க்குக் குறைந்த ஆண்டு வருவாய் உள்ள நிறுவனங்கள்;

(2) ரூபாய் 10,000-க்குக் குறையாமலும் ரூபாய் 20,000-க்கு மேற்படாமலும் ஆண்டு வருவாய் உள்ள நிறுவனங்கள் ;

(3) ரூபாய் 20,000-க்கு குறையாமலும் ரூபாய் 1 இலட்சத்திற்கு மேற்படாமலும் ஆண்டு வருவாய் உள்ள நிறுவனங்கள்;

(4) ரூபாய் 1 இலட்சத்திற்குக் குறையாமல் ஆண்டு வருவாய் உள்ள நிறுவனங்கள்.

1976 ஆம் ஆண்டின் திருத்தச் சட்டத்தின் படி சமய நிறுவனங்களில் பரம்பரை முறை உரிமையில்லாத அறங்காவலர்கள், 1976, ஜுன் 1-ஆம் நாள் முதற்கொண்டு பதவியிலிருந்து நீங்கினார்கள். அவர்களுக்குப் பதிலாக, மூலச்சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் அறங்காவலர் குழுக்கள் மீண்டும் நியமிக்கப்படுகிற வரையில் 'தக்கார்கள்' நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் அந்நிறுவனங்களின் நிர்வாக அலுவலர்களாகவோ, இந்து சமய அறக்கட்டளைத் துறையின் ஆய்வாளர்களாகவோ பிற துறைகளின் அலுவலர்களாகவோ இருப்பவர்கள். ரூ. 10,000-மும் அதற்கு மேற்பட்டும் ஆண்டு வருமானம் உள்ள ஒவ்வொரு கோயிலுக்கும், ஒரு நிர்வாக அதிகாரியின் பணிகள் கிடைக்கும் வகையில் நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். சமய நிறுவனங்களுக்குப் பரம்பரை முறையில் வராத அறங்காவலர்களை நியமிப்பதென அரசு தற்போது முடிவு செய்துள்ளது. இது குறித்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாநில ஆலோசனைக் குழு

1976 ஆம் ஆண்டு 24-வது திருத்தச்சட்டத்தின் விதித்துறைகளின் கீழ், மாநில அளவிலான ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கோயில்களின் நிர்வாகம் சம்பந்தமான பல்வேறு கூறுகள் குறித்த ஆலோசனைகளை ஆணையாளருக்கு அளிப்பதே இக்குழுவின் பணியாகும். இந்து சமய அறக்கட்டளைகளின் ஆணையாளர் அலுவல் முறையில் அதன் தலைவராவார். அரசு சார்பற்ற 12 உறுப்பினர்கள் அதில் அங்கம் வகிப்பார்கள்.

சிறப்பு விசாரணைக் குழு

முன்னாள் அறங்காவலர்களும் ஏனையோரும், சமய நிறுவனங்களை முறை கேடான வகையில் நிர்வகித்ததாகப் பொதுமக்களின் பல்வேறு பிரிவினர்களிடமிருந்து பல குற்றச்சாட்டுகள் பெறப்பட்டதன் மேல், 1976-ஆம் ஆண்டில் அந்தக் குற்றச் சாட்டுகளை விசாரணை செய்வதற்காகச் சிறப்பு விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழு ஓர் அறிக்கையைக் கொடுத்துள்ளது. இக்குழு சுட்டிக்காட்டிய முறைகேடுகளையும் ஒழுங்கீனங்களையும் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்திக் கூறலாம்:—

(1) கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள், கட்டிடங்கள், மனைகள் முதலியவற்றை முறைகேடான வகையில் நிர்வகித்தல், நிலங்கள் முதலியவற்றைக் குத்தகைக்கு விடுவதில் அல்லது விற்பனை செய்வதில் ஒழுங்கீனங்கள், வேண்டியவர்களுக்குத் தனிச் சலுகை காட்டுதல், பினாமி குத்தகை, குத்தகைப் பத்திரங்களை எழுதிக் கொடுக்காமை, குறைந்த வாடகைகளுக்குக் குத்தகை விடுதல் முதலியன;

(2) ஒப்பந்தங்கள் வழங்குவதிலும், திருமண மண்டபங்கள் கட்டுவதிலும், இராச கோபுரம் கட்டுதல், கோயில் குளங்களைத் தூரெடுத்தல் உட்படக் கோயில்களுக்கு திருப்பணிகள் செய்வதிலும், சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான ஏனைய கட்டிடங்களைப் பழுது பார்ப்பதிலும் முறைகேடுகள், ஒழுங்கீனங்கள்;

(3) பல்வேறு காரியங்களுக்காகக் கோயில் நிதிகளைப் பயன்படுத்துவதிலும் ஆணையாளரின் பொதுநல நிதியிலிருந்து நிதிகளை அனுமதிப்பதிலும் முறைகேடுகள்:

(4) சில தனி நபர்கள் வெளியிட்ட புத்தகங்களையும், வெளியீடுகளையும் வாங்குவதற்குக் கோயில் நிதிகளைப் பயன்படுத்துதல், கட்சிப் பத்திரிகைகளில் வகை தொகையின்றி விளம்பரங்களைக் கொடுத்தல்.

முறைகேடுகள், சம்பந்தப்பட்ட குறிப்பான வழக்குகள் பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு, அவசியமானவற்றில் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நிதிப் பிரச்சினைகள்

குடிவார முறை தொடர்பான பல்வேறு சட்டங்களும், கடன் தவணை ஒத்திவைப்புச் சட்டம், பொதுப் பொறுப்புக் கழகங்கள் சட்டம் போன்ற சட்டங்களும் இயற்றப்பட்டதனால், நிலங்கள் மூலம் கிடைக்கும் வருவாயையே முக்கிய வருமானமாகக் கொண்டுள்ள சமய நிறுவனங்களின் வருவாய் பாதிக்கப்பட்டுள்ளது. நிலங்கள்தான் கோயில்களின் முக்கிய வருமான வாயில்களாகும். குறிப்பாகத் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மாவட்டங்களில் சமய நிறுவனங்களுக்கு நிலங்கள் மூலம் தான் வருமானம் முதன்மையாகக் கிடைக்க வாய்ப்புள்ளது. இந்தச் சட்டங்கள் இயற்றப்பட்டதன் விளைவாகச் சமய நிறுவனங்களின் வருமானம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. நிலவரி மாநகராட்சி வரி, நகராட்சி, ஊராட்சி வரிகள், துறைக்குச் செலுத்த வேண்டிய பங்குத் தொகை, தணிக்கைக் கட்டணங்கள் போன்ற பல பொறுப்புகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு இயலாத நிலையிலுள்ளன. பல கோயில்கள் தினசரி பூசைகள் நடத்துவதற்கான செலவைச் செய்யவும், கோயில் பணியாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கவும் இயலாத நிலையில் உள்ளன. கோயில்களின் நலனையும் சம்பந்தப்பட்ட ஏனையோரின் நலனையும் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சினையை எந்த அளவுக்குச் சிறந்த முறையில் தீர்க்கலாம் என்று அரசு ஆலோசித்து வருகிறது.

சட்டம், விதிகளுக்குத் திருத்தங்கள்

மூலச் சட்டத்தை இதுவரையில் செயல்படுத்தியதில் பெறப்பட்ட அனுபவத்தையொட்டியும், சிறப்பு விசாரணைக் குழு தனது அறிக்கையில் சுட்டிக் காட்டிய விஷயங்களைக் கருத்திற்கொண்டும், மூலச் சட்டத்திற்கு விரிவான திருத்தங்கள் கொண்டுவர அரசு ஆலோசித்து வருகிறது.

கோயில் திருப்பணிகள்

1,000-க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் சுமார் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டுச் செலவில் திருப்பணிகள் படிப்படியாக நிறைவேற்றப்

பட்டு வருகின்றன. கீழ்க்கண்ட திருப்பணிகள் பற்றிச் சிறப்பாகக் கூறலாம்:—

	(ரூபாய் இலட்சத் தில்)
1. அருள்மிகு சுப்பிரமணியசாமி கோயில், மருதமலை	20
2. அருள்மிகு காமாட்சியம்மன் கோயில், காஞ்சிபுரம்	50
3. அருள்மிகு சபாநாயகர் கோயில் சிதம்பரம்	45
4. அருள்மிகு அரங்கநாதசாமி கோயில், ஸ்ரீரங்கம்	45
5. அருள்மிகு தேவி கருமாரியம்மன் கோயில், திருவேற்காடு சென்னை	26
6. அருள்மிகு சுப்பிரமணியசாமி கோயில், திருச்செந்தூர்	18
7. அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் கோயில், காஞ்சிபுரம்	18
8. அருள்மிகு மங்களநாதர் கோயில் உத்தரகோச மங்கை	12
9. அருள்மிகு இராமநாதசாமி கோயில், இராமேசுவரம்	9
10. அருள்மிகு அருணசலேசுவரர் கோயில், திருவண்ணமலை	5
11. அருள்மிகு பவானி அம்மன் கோயில், பெரிய பாளையம்	3
12. அருள்மிகு வரதராஜப் பெருமாள் கோயில், காஞ்சிபுரம்	4
13. அருள்மிகு அறப்பளீசுவரர் கோயில், கொல்லிமலை	4
14. அருள்மிகு வெள்ளியங்கிரி கோயில், பூண்டி	3
15. அருள்மிகு அவிநாசிலிங் கேசுவரர் கோயில், அவிநாசி	3

1977-78 ஆம் ஆண்டில், ரூ. 164.46 இலட்சம் அளவிற்கு 348 மதிப்பீடுகளுக்கு ஏற்பளிக்கப்பட்டது.

நிதி பற்ருக்குறையாயுள்ள கோயில்களின் திருப்பணி வேலைகட்கும், கோயில்களிலிருந்து சிலைகள் மற்றும் விலை மதிப்புள்ள பொருள்கள் திருடு போகாமல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதற்கும், பொதுமக்களின் முயற்சிக்குத் துணையாக, கணிசமான ஒரு தொகையை அரசு மானியமாக ஒவ்வோர் ஆண்டும் அனுமதித்து வந்துள்ளது.

நடப்பாண்டில் (1977-78) இது குறித்து ரூ. 17 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இந்தப் பணிகளுக்காக 1978-79 ஆம் ஆண்டிற்கு, ரூ. 17 இலட்சம் வழங்கக் கருதப்பட்டுள்ளது. நிதி பற்ருக்குறை காரணமாக பாதியிலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் திருமண மண்டபங்களைக் கட்டி முடிப்பதற்காக ரூ. 3 இலட்சம் கடன் உதவி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனல், இந்தப் பணிகள் விரைவாக முடிக்கப்படுவதுடன், இந்தக் கோயில்கள் தங்கள் முதலீடுகளிலிருந்து ஓரளவு ஆதாயம் ஈட்ட இயலும்.

பிற்பட்ட பகுதிகளிலும், அரிசனக் குடியிருப்புக்களிலும் அமைந்துள்ள சிறு கோயில்களைப் புதுப்பித்துத் திருப்பணி செய்வதற்காக, ஒவ்வொரு கோயிலுக்கும் ரூ. 1,000 வீதம் 33 கோயில்களுக்கு இதுவரை ரூ. 33,000 வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மலைக்கோயில்களுக்கு மின்சார இழுவைப் பொறிகள்

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி மலைக் கோயிலுக்கு மின்சார இழுவைப் பொறி வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வழிபடும் பொதுமக்களின் பெருகிவரும் தேவையினை ஈடு செய்யும் பொருட்டு, மேலும், இழுவைப் பொறி ஒன்று அனுமதிக்கப்பட்டுப் பணிகள் நடந்தேறி வருகின்றன.

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை அருள்மிகு தாயுமான சுவாமி கோயிலிலும், திருச்சிராப்பள்ளி திருவாளர்கள் பாரத் கனரக என்ஜினீயரிங் (BHEL) நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடன் ஒரு மின்சார இழுவைப் பொறி அமைக்கும் திட்டம் செயல்பட இருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத தேவஸ்வம்களும் புதுக்கோட்டைக் கோயில்களும்

1974 ஆம் ஆண்டு 50 ஆவது சட்டத்தின் கீழ், திருவிதாங்கூர் அரசர்களின் நிர்வாகத்தின் கீழ் முன்பு இருந்த கோயில்கள், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு 22 ஆவது சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்கள் இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகத் துறையின் உதவி ஆணையாளர் பதவித்தரத்தில் உள்ள ஒரு நிர்வாக அதிகாரியால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிறுவனங்களைப் பராமரிப்பதற்காக ஆண்டு மானியமாக 13,70,000 ரூபாயினை அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது.

இதைப் போலவே முன்னுள் புதுக்கோட்டை அரசின் நிர்வாகத்தின் கீழ் இருந்த 136 கோயில்களை பராமரிப்பதற்காக 1976-77-லிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் 5,00,000 ரூபாயினை அரசு அனுமதித்து வந்துள்ளது. இந்த மானியத்தைத் தவிர, முன்னுள் புதுக்கோட்டை அரசரின் ''பூஜை வீட்டினை'' பராமரிப்பதற்காக ரூ. 6,000 அளிக்க அரசு அனுமதியளித்துள்ளது.

''திருக்கோயில்'' திங்கள் இதழ்

''திருக்கோயில்'' என்ற வெளியீடு மாதந்தோறும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. சமயம், தத்துவம், தமிழ் நாட்டிலுள்ள தொல் பொருள்கள், கோயில்களின் வரலாறு பற்றிப் புகழ் பெற்ற அறிஞர்கள் தங்களுடைய கட்டுரைகளை இந்த இதழுக்கு வழங்கி வருகின்றனர். தற்சமயம் வெளி நாட்டுச் சந்தாதாரர்கள் உட்பட, சுமார் 13,000 சந்தாதாரர்கள் உள்ளனர்.

விலைமதிப்புள்ள பொருட்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள்

கோயில்களிலுள்ள தொல் பொருள்களை 1972 ஆம் ஆண்டின் தொல் பொருள்கள் புதையல்கள் பதிவு செய்யும் சட்டத்தின்கீழ் தொடர்ந்து பதிவு செய்யப்பட்டு வருகின்றன. பழங்கால விக்கிரகங்கள் ஏனைய மதிப்பு மிக்க தொல் பொருள்கள் ஆகியவற்றின் பாதுகாப்பிற்காக, வலிமையான இரும்புக் கதவுகள், இரும்புக் கம்பிகள் முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்து பாதுகாப்பிற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. அன்றாட வழிபாட்டில் இல்லாத செப்புத் திருமேனிகளைப் பொறுத்த வரையில், அருகிலுள்ள எந்தக் கோயில்களில் பாதுகாப்பான இடங்கள் உள்ளனவோ, அந்தக் கோயில்களுக்குக் கொண்டு சேர்க்கப்பட்டு, பத்திரமாக வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கோயில் பணியாளர்கள்

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள கோயில்களில் சுமார் 51,000 பணியாளர்கள் உள்ளனர். இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 5 லிருந்து ரூ. 15 வரை அகவிலைப்படி உயர்வு, 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து கொடுக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து இடைக்கால நிவாரணமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 5 லிருந்து ரூ. 10 வரை கொடுக்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

சமுதாய் நலப் பணிகள்

சமய நிறுவனங்களின் உபரி நிதியிலிருந்து மேற் கொள்ளப்பட்ட சமூக நலப் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றன. செவிடர், ஊமையர் பள்ளிகள்-2, அன்பு இல்லங்கள் 3, நூலகங்கள்-204, சித்த மருத்துவ மனைகள் 24; ஆங்கில மருத்துவ மனை-1, சுமார் 2,770 குழந்தைகளைக் கொண்ட 36 கருணை இல்லங்கள் உட்பட, பல அனாதை இல்லங்கள் ஆகியவை கோயில் நிதியிலிருந்து செயல்பட்டு வருகின்றன. 7 கல்லூரிகள், தொடக்க நிலைப்பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் உட்பட மொத்தம் 33 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. நாதஸ்வரம் பயில்வதற்காக 2 பள்ளிகளும், ஓதுவார்களுக்கு 7 பள்ளிகளும், 4 வேத ஆகம பாடசாலைகளும் செயல்பட்டு வருகின்றன.

திருத்தணியில் ''முதியோர் இல்லம்'' ஒன்றும், திருவானைக்காவலில் தேவாரப் பாடசாலை ஒன்றும், ஸ்ரீரங்கத்தில் திவ்யப் பிரபந்த பாடசாலை ஒன்றும் திறக்கச் செயற்குறிப்பு ஒன்று உள்ளது. இந்துப் கலைப் பண்பாட்டில் மூன்று ஆண்டு பட்டப் படிப்புப் பிரிவு ஒன்று இராமேஸ்வரத்தில் 1977-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் தேதியிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ் இசையின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு, நாதஸ்வரம், தவில் ஆகிய கலைகளை மாணவர்கள் பயின்று வல்லுநராவதற்கு இக்கலைகள் பயிலும் மாணவர்களுக்கு, உதவித் தொகை அளிக்கும் திட்டம் ஒன்றினை அண்மையில் அரசு கொணர்ந்துள்ளது. மாநிலத்திலுள்ள நாதஸ்வரப் பள்ளியில் மாணவர் தங்களுடைய படிப்பினை முடித்த பிறகு, புகழ் பெற்ற வித்வான்களிடம் மேல்பயிற்சி பெறச் செல்வார்கள். இந்த உதவித் தொகை ''காலஞ் சென்ற வித்வான் டி. என். இராஜரத்தினம் பிள்ளை நினைவு உதவித் தொகை'' என்று அழைக்கப் பெறுகிறது. இந்த உதவித் தொகை அதிக பட்சம் ஐந்து ஆண்டு காலத்திற்கு நாதஸ்வரம் பயிலும் மாணவர்கள் ஐந்து பேருக்கு ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு 500 ரூபாயும், தவில் கலை பயிலும் மாணவர்கள் 5 பேருக்கு ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு 300 ரூபாயும் அளிக்கப்படுகிறது. இந்த உதவித் தொகை பெறும் மாணவர்கள் புகழ் பெற்ற வித்வான்கள் மூவர் அடங்கிய குழுவினால் தெரிந்தெடுக்கப்படுவர்.

இந்து சமய அறநிலையத் துறையின் கீழ்ப் பல்வேறு சமய நிறுவனங்களால் நடத்தப்படும் தேவார பாடசாலைகளில் பயிலும் மாணவர்களில், அவர்களின் படிப்புத் தரத்தில் முதல் மூன்று இடங்கள் பெற்ற மாணவர்களுக்கு அவர்கள் வேலை பெறும்வரை உதவியாக இருக்கும் பொருட்டு, ஒவ்வொருவருக்கும் 1,000 ரூபாய் ரொக்கமாக வழங்கவும் அரசு அனுமதியளித்துள்ளது.

நிர்வாகத்தை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள்

துறையின் நிர்வாகத்தையும் சமய நிறுவனங்களின் நிர்வாகத்தையும் ஒழுங்குபடுத்தவும், மேம்படுத்தவும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக வருவாயில் இழப்பு ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டும், சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களுக்குரிய நியாய வாடகைகளை நிர்ணயம் செய்வதன் மூலம் வருவாயினைப் பெருக்கும் பொருட்டும், தக்க நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக சம்பந்தப்பட்ட வட்டாரத் துணை ஆணையாளர்கள், துறையின் நிர்வாகப் பொறியாளர், கோயில்களின் நிர்வாக அதிகாரிகள் ஆகியோர் கொண்ட நியாய வாடகை நிர்ணயக் குழுக்கள், ஒவ்வொரு கோயிலுக்கும் அமைக்கப்பட்டுள்ளன. பொதுப்பணித்துறை விதிமுறைகளில், விதிக்கப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு இணங்கக் கோயில் கட்டிடங்களுக்கான வாடகை வீதங்களை மாற்றியமைப்பதற்காக இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. வாடகை வீதங்களை மாற்றியமைத்தது, அவைகள் நியாயமானதாக இருந்த போதிலும் எங்கேனும் மிக அதிக அளவில் உயர்த்தப் பட்டிருப்பதாகக் கண்டறியப்படுமாயின், திருத்தியமைக்கப்பட்ட வாடகை வீதங்களைப் படிப்படியாகச் செயலுக்குக் கொண்டு வருமாறு ஆணையாளர் கட்டளையிட்டுள்ளார்.

நமது கலைகளுக்கும் பண்பாட்டிற்கும் பொக்கிஷங்களாகவும் நிலைக்களங்களாகவும் உள்ள கோயில்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு அரசு அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வரும்.

***

திருநாவுக்கரசர்

திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S.,
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை-34

முன்னுரை :

திருநாவுக்கரசர் தமிழ் நாட்டின் தலை சிறந்த ஒரு பெருஞ் சான்ருேர். சிறந்த பக்தர். ஒப்புயர்வற்ற சமயப் பெரியார். இணையற்ற பெரும் அருளாளர். சிறந்த சிவஞானச் செல்வர். சைவ சமய ஆசிரியர்கள் நால்வருள் ஒருவர். தேவாரம் என்னும் சிறந்த தெய்விகத் திருப்பாடல்களை அருளிச் செய்த அருட்பெருங் கவிஞர். தமிழ் நாட்டுச் சமய வளர்ச்சி பற்றிய சரித்திரத்தில், அவர் மிகவும் முக்கியத் துவம் பெற்று விளங்குகின்ருர். ''ஞானத் தவமுனிவர்'' என்றும், ''தமிழ் மொழித் தலைவர்'' என்றும், ''தாண்டகவேந்தர்'' என்றும், பிறவாறும் சேக்கிழார் பெருமான் அவரை மிகவும் புகழ்ந்து போற்றுகின்ருர்.

திருநாவுக்கரசர், திருவிருத்தம் திருநேரிசை திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்னும் அரிய இனிய பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ளார். அவைகள் அனைத்தும் எளிமையும், இனிமையும், உருக்கமும், உணர்ச்சிப் பெருக்கமும் வாய்ந்து, அன்புடன் ஓதுபவர்தம் உள்ளங்களை யெல்லாம் கொள்ளை கொள்ள வல்லனவாகத் திகழ்கின்றன.

திருவடி நிழல் :

இறைவனின் திருவடியின்பத்தை அவர் விளக்கியிருக்கும் முறை, பெரிதும் வியக்கத் தக்கதாக உள்ளது. நல்ல இளவேனிற் காலம் —இனிய மாலை நேரம் — மென்மையான தென்றற் காற்று—குளிர்ச்சி மிக்க தாமரைப் பூந் தடாகம்—முழு நிலாவின் தண்ணொளி— என்பன பலவும் ஒருங்கியைந்த நிலையில், ஓர் ஒப்புயர்வற்ற கலைஞன், குற்றமற்ற வீணையை எடுத்து மீட்டி, இசை மழை பொழிந்து இன்புறுகின்ருன். அவ் இசைக் கலையின் வெள்ளத்தில் மிதக்கும் போது அவன் உள்ளம், எத்தகைய குளிர்ச்சியும் இன்பமும் அமைதியுமுற்றுச் சிறந்து திகழுமோ, அத்தகைய நிலையில் இன்பமும் குளிர்ச்சியும் அமைதியும் மிக்கதாக, இறைவனின் திருவடி நிழல் விளங்கும் எனத் திருநாவுக்கரசர் அழகுறப் பாடுகின்ருர்.

''மாசில் வீணையும் மாலை மதியமும்,
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்,
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே,
ஈசன் எந்தை இணையடி நிழலே''

எனவரும் திருநாவுக்கரசர் பாடல், எவ்வளவு இனிமை மிக்கதாக விளங்குகின்றது! எளிய இனிய சொற்களில், மிகவும் சிறியதொரு செய்யுளில், இறையருள் இன்ப நலத்தினை, எவ்வளவு அழகாகத் திருநாவுக்கரசர் விளக்கியிருக்கின்ருர். பாடல் சிறியதேயாயினும், அதன் அனுபவப் பயன் மிக மிக உயர்ந்ததாக விளங்குகின்றது.

ஞான தீபம் :

உடம்பை ஒரு வீடாகவும், அதன் கண் உள்ளத்தை ஒரு தகளியாகவும்உருவகம்செய்து, உள்ளமாகிய அத்தகளியில், உணர்வு என்னும் நெய்யை வார்த்து, உயிர்ப்பு என்னும் திரியினைச் செவ்விதின் அமைத்து, ஞானம் என்ற சுடரை ஏற்றி, அந்த ஞான விளக்கின் ஒளியைக் கொண்டு நோக்கினல், நாம் இறைவனின் திருவடிகளைக் காணும்பேறு பெறலாம். இதனை,

உடம்பெனும் மனை அகத்துள்
உள்ளமே தகளி யாக;
மடம்படும் உணர்நெய் அட்டி,
உயிர்எனும் திரி மயக்கி,
இடம்படு ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கில்;
கடம்பமர் காளை தாதை
கழலடி காண லாமே

எனவரும் செய்யுளில், திருநாவுக்கரசர் அழகுற விளக்கிக் காட்டி அருள்கின்ருர். காணமுடியாத கடவுளின் கழல்களைக் காண்பதற்குத், திருநாவுக்கரசர் கூறியிருக்கும் இந்தச் செவ்விய இனிய நல்ல நெறிமுறை, நாம் பெரிதும் உணர்ந்து போற்றுதற்குரியதாகும்.

மனம் எனும் தோணி :

வாழ்க்கை அல்லது பிறவி என்பது, ஒரு பெரும் கடல். அந்தக் கடலில் வீழ்ந்து, நாம்

தத்தளித்துக் கொண்டிருக்கின்றோம். அக் கடலைக் கடப்பதற்கு, மனம் ஒரு தோணியாக அமைகின்றது. அத்தோணியை இயக்குவதற்கு, மதி என்னும் கோலை ஊன்றுகின்றோம். அதன் உதவியால் அத்தோணி ஒரு சிறிது செல்லத் தலைப்படுகின்றது. ஆனால் அத்தோணியில் நாம் நல்ல சரக்கை ஏற்றிக் கொள்ளவில்லை. காம வெகுளி மயக்கங்கள் முதலிய தீய சரக்கு களையே, மிகுதியாக அடுக்கி ஏற்றிக் கொண் டிருக்கின்றோம். தாங்க முடியாத சுமை மிகுந்த அத்தீய சரக்குகளை ஏற்றிக் கொண்டு, மனம் எனும் தோணி, கொந்தளிப்பான அலைகள் மிக்க வாழ்க்கைப் பெருங்கடலில் சென்று கொண்டுள்ளது. ஆனால் அந்தோ! அது, மதன் (அறியாமை) என்னும் பாறையின் மீது மோதிக் கவிழ்ந்து விடுமோ என்னும் நிலையில், இடர்ப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கவிழ்ந்து விடுமாயின், இறைவனே! யான் உன்னை அறிந்து கொள்ளுதல் இயலாது. ஆதலின், இப்போதே உன்னை யான் நினைத்து வழிபடும் நல்லுணர்வை எனக்குக் கொடுத்து அருள்வாயாக! எனத் திருவொற்றியூரில் எழுந்தருளியுள்ள சிவபெரு மானைத் திருநாவுக்கரசர் வேண்டிக் கொள்ளு கின்றார்.

''மனம்எனும் தோணி பற்றி
மதிஎனும் கோலை ஊன்றிச்
சினம்எனும் சரக்கை ஏற்றிச்
செறிகடல் ஓடும்போது
மதன்எனும் பாறை தாக்கி,
மறியும்போது அறிய ஒண்ணாது ;
உனையுனும் உணர்வை நல்காய்
ஒற்றியூர் உடைய கோவே''

திருநாவுக்கரசர், திருவொற்றியூருக்கு எழுந்தருளிச் சிவபிரானை வழிபட்ட போது, அங்குள்ள கடற்கரையில் மக்கள் பலர் தோணி களில் சரக்கேற்றிக் கொண்டு திரைகடல் ஓடித் திரவியம் தேடச் செல்லும் காட்சிகளைக் கண்டு, இத் திருப்பாடலை அருளிச் செய்தனர் போலும்!

மெய்ம்மையாம் உழவு :

திரை கடல் ஓடிப் புரியும் வணிகத்தை மட்டுமா? தமிழகத்திற்குரிய விழுமிய தொழி லாகிய உழவுத் தொழிலையும் கூட, நம் திரு நாவுக்கரசர் நயம் சிறக்க உருவகமாக்கிப் பாடு கின்றார். உள்ளமாகிய வயலில், மெய்ம்மை அல்லது சத்தியம் என்னும் உழவைச் செய்து, விருப்பம் அல்லது அன்பு என்னும் வித்தை விதைத்தல் வேண்டும். அதில் பொய்ம்மை முதலிய குற்றங்கள் தோன்றுதபடி, களை எடுத் தல் வேண்டும். பொறுமை என்னும் நீரைப் பாய்ச்சுதல் வேண்டும். புறப்பொருள்களை நோக்காமல், தம்மைத்தாமே அகமுக நாட்டத் தால் உள்நோக்கிக் காணுதல் வேண்டும். உள்ளமாகிய வயலில், அன்பாகிய விதை விதைத்து வளர்த்த ஞானமாகிய பயிருக்குத், தகவு அல்லது தருமம் என்னும் வேலியிடுதல் வேண்டும். இத்தகைய செம்மையான நெறி யில் நின்று ஒழுகினால், சிவகதி எனும் மேலான பயன் விளைந்து நலம் பயக்கும். இதனை,

''மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறைஎனும் நீரைப் பாய்ச்சித்
தம்மைஉள் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்பர் ஆகிற்
சிவகதி விளையும் அன்றே''

எனவரும் திருப்பாடலில் திருநாவுக்கரசர் சுவை கெழும, இன்பம் பெருக அருளிச் செய் திருக்கின்றார்.

இனிய கவிதைகள் :

திருநாவுக்கரசரின் பாடல்கள் எளிய சிறு சிறு சொற்களால், உயரிய சிறந்த கருத்துக் களை, நம் போன்றார் உள்ளங்களில் நன்கு பதி யும்வண்ணம், அழகுற எடுத்துக் கூறும் தெளி வும் சிறப்பும் வாய்ந்தவை. பின்வரும் அரிய இனிய அழகிய பாடல்கள் இவ்வுண்மைக்குச் சான்று பகரும்.

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேஇரை தேடி அலமந்து
காக்கைக் கேஇரையாகிக் கழிவரே!

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே''

கங்கை ஆடில்என்? காவிரி ஆடில்என்?
கொங்கு தண்குமரித்துறை ஆடில்என்?
ஓங்கு மாகடல் ஓதநீர் ஆடில்என்?
எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே!

என்பன போன்று வரும் சிறிய சிறிய, எளிய இனிய அருமையான பாடல்கள் பலவற்றைத், திருநாவுக்கரசர் அருளிச் செய்துள்ளார். மக்கள் வாழ்க்கைக்கு நலம் பயக்கும் பற்பல அரிய நல்ல அருளுரைகளைத், திருநாவுக்கரசரின் பாடல்களில் நாம் பெரிதும் காணலாம்.

முடிவுரை :

திருநாவுக்கரசரின் திருப்பாடல்கள், ஓது பவர் உள்ளங்களை யெல்லாம் கொள்ளை கொண்டு, உவகை அளிக்க வல்லவை. அவற்றை அன்புடன் நாள்தோறும் பயில்பவர் அனைவரும், தத்தம் மனமாசுகளும் கவலைகளும் நீங்கி, தம் வாழ்விற் படிப்படியே உயர்ந்து, பலவகை நலங்களையும் எய்துவர் என்பது திண்ணம். கவிதை நயம் காண்போர்க்கும், இலக்கிய இன்பம் விரும்புபவர்க்கும், பக்தியுணர்வில் திளைப்பவருக்கும், மன அமைதியை நாடுவார்க் கும், திருநாவுக்கரசர் முதலிய நமது அருட் பெருஞ் சான்றோர்கள் அருளிச் செய்துள்ள பாடல்கள் அனைத்தும், ஓர் அரும் பெரும் ஞானப் புதையலும், கலைக் களஞ்சியமும்ஆகும். அவற்றைப் போற்றிப் பயின்று, நாம் பயன் கொண்டு இன்புறுவோமாக!

**

சிவஞான போதத் தெளிபொருட் சுருக்கம்

இரண்டாம் சூத்திரம்

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

(முற்றொடர்ச்சி)

''அவையே தானே யாய், இரு வினையிற்
போக்கு வரவு புரிய, ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே''

சிவஞான போதத்தின் இவ்விரண்டாம் சூத்திரம், ''மேலைச் சூத்திரத்தின்கண் எடுத்துக் கொண்ட சங்காரகாரணனாகிய முதல்வன், கலப்பினால் உடலின் உயிர்போல அவ்வான்மாக் களேயாய்ப், பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன்போல அவற்றின் வேறுமாய், உயிர்க் குயிராதற் றன்மையால் கண்ணொளியின் ஆன்ம போதம்போல உடனுமாய் நின்று, ஆணை என்னும் பரியாயப் பெயருடைய தனது சிற்சத்தி யான் வரும் இருவினைகளான் அவ்வான்மாக்கள் இறத்தல் பிறத்தல்களைப் புரியும்வண்ணம் அவ் வாணையிற் பிரிப்பின்றிச் சமவேதமாய் நிற்பான்'' என்னும் பொருளுடையது. ''அவையே தானேயாய்'' என்பதனை இரட்டுற மொழிதலால், ''அவையேயாய்—தானேயாய்-அவையே தானேயாய்'' எனக் கூறி, மூன்று வகையிற் பொருளுரைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

இச்சூத்திரம் மிக விரித்து விளக்குவதற்குரிய பல பொருள்களை உள்ளடக்கிக் கொண்டு நிற்கின்றது. அதுபற்றியே சிவஞான முனிவரின் பேருரை, இப்பகுதிக்கு மிக விரிந்து சென்றுளது. இச்சூத்திரத்துள், நிமித்தகாரணனாகிய இறைவனுக்குத் தடத்தலக்கணம் எனப்படும் பொதுவியல்பும், அவனது துணைக்காரணமாகிய சக்தியும், வினையும், மாயையும் பற்றி விளக்கப் படுகின்றது. சத்தி இறைவனது குணமும், மாயை அவனது உடைமைப் பொருளுமாம். இருவினையைக் கூறியவாற்றானே, அதன் பற்றுக் கோடாகிய மாயையும் கூறினாராயிற்று. உலகிற்கு மாயை முதற்காரணமும், இறைவன் நிமித்த காரணமும், சத்தி-வினை என்பன துணைக்காரணமும் ஆகும்.

அத்துவிதம் :

ஐந்தொழில் நடாத்தும் முறையில், இறைவன் உலகுயிர்களோடு இரண்டறக் கலந்து நிற்கும் முறையினை உணர்த்தப்போந்த ஞானாசிரியராகிய மெய்கண்டார், வடமொழி மறைகளில் அதன் பொருட்டு ஆளப்பட்ட அத்துவிதம் என்ற சொல்லின் உண்மைப் பொருள் இதுவாம் என்பதனை இங்கே நிலை நாட்டினார். இதுபற்றியே அவர் ''அத்துவித மெய்கண்டான்'' எனப் புகழப்படுவாராயினர். இதனை,

''பொய்கண்டார் காணாப்
புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதனருள்
மேவும்நாள் எந்நாளோ?''

என நம் தாயுமானவ அடிகள் எடுத்தோதி வழுத்தியருள்வர். இறைவன் ஐந்தொழில் புரிதல் உயிர்களின் பொருட்டே என்றும், உயிர்களோடு கலந்து நின்றே இறைவன் ஐந்தொழில் புரிகின்றான் என்றும், ஆசிரியர் ஈண்டு விளக்குகின்றார். இறைவன் உயிர்களோடு கலந்து நிற்கும் நிலையே 'அத்துவிதம்' என்ற சொல்லாற் குறிக்கப் பெற்றது.

உயிரானது உடம்போடு கலந்து நின்று எங்ஙனம் அதனை இயக்குகின்றதோ, அங்ஙனமே இறைவன் உயிர்களோடு கலந்து நின்று ஐந்தொழில் நிகழ்த்துகின்றான். கலப்பினால் உடலின் உயிர்போல் அவ்வுயிர்களேயாகவும், பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன் போல வேறாகவும், உயிர்க்குயிராதற்றன்மையாற் கண்ணொளியின் ஆன்ம போதம்போல உடனாகவும் நிற்கும் இறைவனின் மூவகை நிலைகளும், ஆசிரியர் மெய்கண்ட தேவரால் தக்க எடுத்துக் காட்டுகளுடன் ஈண்டுத் திறம் பட விளக்கப்பட்டுள்ளன.

(1) அவையே யாதல் :

முருகா! குமரா! என உடம்பிற்கிட்ட பெயரால் ஒருவனைப் பிறர் அழைத்தவழி, அவன் 'என்னை?' என வினவி வந்து நிற்றற்குக் காரணம், அவனது உயிரேயாகும். இங்ஙனம், உடம்பின் பெயரால் அழைத்தவழி உயிர் என்னென்றற்குக் காரணம், உயிரும் உடலும் தம்முள் வேற்றுமை யின்றி அபேதமாய்க் கலந்து நிற்பதேயாம். இவ்வாறே இறைவனும் உயிர்களோடு வேற்றுமையின்றி நம்முள் வேற்றுமையின்றி அபேதமாய்க் கலந்து நிற்கின்றான். உயிரும் உடம்பும் தம்முள் வேற்றுமையின்றி அபேதமாய்க் கலந்து நிற்பினும், உயிர் உயிரே; உடம்பு உடம்பே; உயிர் உடம்பாகவும், உடம்பு உயிராகவும் திரிபெய்தமாட்டா; ஆயினும், உயிர் உடம்பாகவும் அதனின் வேறாகவும் நிற்கும்; உடம்பு அங்ஙனம் நிற்றல் இயலாது. அதுபோல இறைவன் உயிர்களோடு ஒன்றிக் கலந்து நிற்பினும், இறைவனும் உயிரும் ஒன்றாகி விடுதலில்லை. இறைவன் இறைவனே; உயிர் உயிரே; இறைவன் உயிராக மாட்டான்;

உயிர் இறைவனுதல் இயலாது. ஆயினும் இறை வன் உயிராயும், அதனின் வேருயும் நிற்பன்; உயிர் அங்ஙனம் நிற்றல் ஒல்லாது. இறைவன் உயிர்களோடு கலந்து 'அவையேயாய்' நிற்கும் இவ்வியல்பே,

''கட்டும் உறுப்பும் கரணமும் கொண்டு, உள்ளம்
இட்டதொரு பேர்அழைக்க, 'என்?என்ருங்கு,—
ஒட்டி
அவன்உளம் ஆகில்லான்; உளம்அவனு மாட்டாது;
அவன்உளமாய், அல்லனுமாம் அங்கு!''

என ஆசிரியர் மெய்கண்ட தேவரால் திறம்பட அழகுற விளக்கப்பெற்றுள்ளது.

(2) தானேயாதல் :

இனி வடமொழி வேதத்துள் 'அத்து விதம்' என்றதுவுமன்றி 'ஏகம்' எனவும் ஓதுத லின், அதற்கு மறுதலேயாய் இறைவன் உயிர் களோடு கலந்து நிற்பன் எனப் பேதப்படக் கூறுவது என்னே? என்று சிலர் வினவுவர். அவர்க்கு விடைகூறும் முகத்தான் இறைவன் 'தானேயாய்' நிற்கும் நிலேயினே,

''ஒன்றென்ற தொன்றேகாண்! ஒன்றேபதி! பசுவாம்
ஒன்றென்ற நீ, பாசத் தோடுளேகாண்!—ஒன்றின்
ருல்!
அக்கரங்கள் இன்ரும் அகரவுயிர் இன்றேல்,
இக்கிரமத் தென்னும் இருக்கு!''

என்று, தொல்காப்பியர் முதலிய பண்டைச் சான்ருேர் நெறிமுறைக்கியையத் தக்கதோர் எடுத்துக்காட்டால் மிக்க பொருத்தமுற மெய் கண்டதேவர் விளக்கியருள்கின்ருர்.

வேதம் 'ஏகம்' என்றதற்குப் பொருள், ஒன்று என்பதேயாம்; வேறு பொருள்படாது. அதற்குக் கருத்து பதிப்பொருள் ஒன்றே, இரண் டில்லே என்பது. இதனே யறியாது 'ஒன்று' என்று சொல்லுகின்ற நீ, அப்பதிப் பொருளின் வேருகிய பசு என்று அறிவாயாக. பதியும் அறிவுப் பொருளாக, யானும் அறிவுப் பொரு ளாக, என்னே மட்டும் 'பசு' என்று கூறுவ தெற்றுக்கு? என்று வினவின், நீ மலத்தாற் கட்டுற்று நிற்கின்ருயாகலின் பசு எனப்பட் டனே. அங்ஙனமாயின் 'பிரமம் இல்லேயாயின் ஒரு பொருளும் இல்லே' என்று வரும் வேத மொழியின் கருத்து என்னேயெனின், அகர மாகிய உயிர் எழுத்து இல்லேயாயின் ஏனேய பிற எழுத்துக்கள் இல்லே என்பது போலப் பிரமப் பொருள் இல்லேயாயின் பிறிதொரு பொருளும் இல்லே என்பதேயாம். இங்ஙன மன்றிப் 'பிரமத்தின் வேருக இரண்டாவது பொருள் இல்லே' எனக் கொள்ளுதல் பொருந் தாது.

அகரவுயிர் இன்றேல், அக்கரங்கள் இல்லே :

பிற எல்லாப் பொருள்களின் இயக்கத்திற் கும் பிரமப் பொருள் இன்றியமையாததாகும் என்பதே, அம் மறைமொழியின் தெளிபொருள். இதனே விளக்குதற் பொருட்டு ஆசிரியர் மெய் கண்டார் ''அக்கரங்கள் இன்ரும் அகரவுயிர் இன்றேல்'' என எடுத்துக் காட்டிய உவமை சாலவும் சிறந்ததொன்ரும். தண்டமிழ் மொழி யின் பண்டைப் பெரும் பேராசிரியராகிய தொல் காப்பியனுர். ''மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்'' எனக் கூறுதலின், அகரத்தொடு சிவணியன்றி மெய்யெழுத்துக்கள் இயங்காமை பெற்ரும். அங்ஙனமே உயிரெழுத்துக்களின் இயக்கத்திற்குங்கூட, அகரம் இன்றியமையாத தாகும். இகர ஈகார உகர ஊகாரங்கள் அகரத் திற்குரிய அங்காப்பு முயற்சியோடு சிவணி யன்றிப் பிறவாமையானும், ஏகார ஓகாரம் முதலாயின முன் அகரக்கூறும் பின் இகர உகரக் கூறுகளுமாய் இயைந்தன்றிப் பிறவா மையானும், அவையனேத்தும் அகரமாகிய உயிரை இன்றியமையாமை தெளிவு. எனவே, அகரம் பிறஉயிர் எழுத்துக்களினும் கலந்து அவற் றின் தன்மையாகவே நின்று, அவற்றையெல் லாம் இயக்கி வருதல் பெறப்படும். இவ்வாறே இறைவனும் இயங்குதிணேக்கண்ணும் நிலேத் திணேக்கண்ணும் ஏனேயவற்றின்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாகவே நின்று இயக்கி வருவான் என்பது, தொல்காப்பியர் திருவள்ளு வர் போன்ற தொல்லாசிரியர்களுக்கெல்லாம் கருத்து.

ஏனேய எல்லா எழுத்துக்களின் இயக்கத் திற்கும் இன்றியமையாத தொன்ருய் அவற் ருேடு கலந்து நிற்பினும், அகரம் அவற்றின் வேருகப் பிரிந்து தானேயாகத் தனித்து நிற்கும் இயல்பும் உடையது; அதுபோல ஏனேய எல் லாப் பொருள்களின் இயக்கத்திற்கும் இன்றி யமையாத காரணனுய் அவையிற்ருேடெல் லாம் கலந்து நிற்பினும், பதிப்பொருளாகிய இறைவன், அவற்றின் வேருகப் பிரிந்து தானே யாகத் தனித்து நிற்கும் இயல்பும் உடையவன். 'அக்கரங்கள் இன்ரும் அகரவுயிர் இன்றேல்' என்னும் இவ்வுவமையால், ஆசிரியர் மெய் கண்டார் இறைவன் 'தானேயாய்' நிற்கும் நிலே யினே விளக்கி வலியுறுத்துகின்ருர்.

(3) அவையே தானேயாதல்:

இனி ''அவையே தானேயாதல்'' என் னும் உடனுதலே ஆசிரியர் விளக்கப் புகுகின்ருர். வேதம் ஏகமாய பிரமத்தை 'ஏகம்' என்று மட்டும் கூருமல், 'பிரமம் அத்துவிதம்' என வும் ஓரோரிடங்களிற் கூறுதலின், அத்துவிதம் இருபொருட் கண்ணது என்பார்க்கு, ஏகமாய பிரமத்தை அத்துவிதம் என்றல் பொருந்தா தாய் முடியும் என்பர் சிலர். பண்ணும் அத னின் வேறன்ருய்ப் பிரிப்பின்றி எண்ணப்படும் இசையும் போலவும்; பழமும் அதனின் வேறன் ருய்ப் பிரிப்பின்றி எண்ணப்படும் சுவையும் போலவும், எங்கும் பரவியுள்ள இறைவனின் திருவருள் உயிர்களின் வேற்றுமை யின்றி நிற் கும்! பிரமம் அத்துவிதம் என்றது, பிரமம் உயிர்களின் வேற்றுமையின்றி நிற்கும் என்னும் பொருட்டாகலின், அஃது ஏகம் என்பதனேடு முரணுமாறில்லே. பண்ணும் ஓசையும்-பழமும் சுவையும் தம்முள் வேறு வேறேயாயினும், பிரிப்பின்றிக் கலந்து உடனுய் நிற்றல்போல, இறைவனும் உயிரும் தம்முள் வேறு வேரு யினும், இறைவன் உயிர்களின்பாற் கலந்து

பிரிப்பின்றி உடனாய் நிற்பன் என்பது ஆசிரியரின் கருத்து.

மூவகை நிலைகள்:

இறைவன் இங்ஙனம் ''ஒன்றாய் வேறாய் உடனாய்'' நிற்கும் மூவகை நிலைகளையும் மூவகை உவமைகளால் விளக்கிய ஆசிரியர், அநேகாந்தவாதம் என்னும் குற்றம் நிகழாமைப் பொருட்டு, இறைவன் ''அரக்கொடு சேர்த்தி அணைத்த அக்கற்போல் உருக்கி உடங்கியைந்து நின்று பிரிப்பின்றி'' உயிர்களின் ஒருங்குகூடி நின்று நீக்கமின்றி யுடனாதலால், தானேயாய், உலகேயாய், தானே உலகேயாய் இறைவன் விளங்குவன் என ஒருமை முடிபுபட ஒருங்கேயும் உணர்த்தினர்.

சிவப்பிரகாசம்:

இவ்வாற்றால், இறைவனுக்கும் உயிர்கட்குமுள்ள இயைபைப் பேதம் என்றும், அபேதம் என்றும், பேதாபேதம் என்றும் பிணங்கும் சமயங்களையெல்லாம் மறுத்து, இறைவன் உயிர்களின்பால் அம்மூவகை இயைபும் ஒருங்கேயுடையன் என்பதனைச் சிவஞானபோதம் தெளிவுபடுத்தி நிறுவியது காணலாம். இதனையே

''புறச்சமயத் தவர்க்கிருளாய், அகச்சமயத் தொளியாய்ப்,
புகல்அளவைக் களவாகிப், பொற்பணிபோல் அபேதப்
பிறப்பிலதாய், இருள்வெளிபோற் பேதமும், சொற்பொருள்போற்
பேதாபே தமும்இன்றிப், பெருநூல் சொன்ன
அறத்திறனல் விளைவதாய், உடலுயிர்கண் அருக்கன்
அறிவொளிபோற் பிறிவரும்அத் துவிதம்ஆகும்
சிறப்பினதாய், வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றாம்''

எனச் சிவஞான போதத்தின் புடைநூலாகிய சிவப்பிரகாசம் என்னும் நூல், பிறிதோராற்றால் அழகுற விளக்குகின்றது. 'ஒன்றாய்வேறாய் உடனாய்' நிற்கும் இறைவனின் நிலைகளை முறையே உடலும் உயிரும், அகரமும் பிற எழுத்துக்களும், பண்ணும் ஓசையும்-பழமும் சுவையும் என்னும் உவமைகளைக் கொண்டு சிவஞானபோதம் விளக்கிற்று; உடலும் உயிரும்போல், கண்ணும் அருக்கனும்போல், கண்ணொளியும் உயிரறிவும்போல் என்னும் உவமைகளைக் கொண்டு சிவப்பிரகாசம் தெளிவுபடுத்துகின்றது.

திருமுறைகள்:

இங்ஙனம் இறைவன் உயிர்களோடு 'ஒன்றுதல்-வேறுதல்-உடனாதல்' என்னும் மூவகையிற் கலந்து நிற்கின்றான் என்பதே உண்மை முடிபாம் என்பது,

''ஈறாய், முதல் ஒன்றாய்,இரு பெண்ஆண் குணம் மூன்றாய்:
மாறுமறை நான்காய்,வரு பூதம்அவை ஐந்தாய்,
ஆறார்சுவை,ஏழோசையோடு, எட்டுத்திசைதானாய்,
வேறாய்,உடன் ஆனான்இடம், வீழிம்மிழ லையே''

என்னும் திருஞானசம்பந்தர் திருநெறித் தமிழ் மறையால் இனிது விளங்கி வலியுறுத்துகின்றது. இவ்வாறே இறைவன் உயிர்களோடு கலந்து நிற்கும் அத்துவித நிலையை உணர்த்துமாறெழுந்த,

''பண்ணையும் ஓசையும் போலப், பழமதுவும்
எண்ணும் சுவையும்போல், எங்குமாம்—அண்ணல் தாள்
அத்துவிதம் ஆதல், அருமறைகள் ஒன்றென்னது
அத்துவிதம் என்றறையும் ஆங்கு''

என்னும் மெய்கண்ட சிவத்தின் திருமொழியுண்மையானது, ''குருகாம் வயிரமாம் கூறும் நாளாம், கொள்ளும் கிழமையாம் கோளே தானும், பருகா அமுதமாம் பாலின் நெய்யாம், பழத்தின் இரதமாம் பாட்டிற் பண்ணும்'' என்னும் திருநாவுரக்கரசர் திருப்பாடலினையும், ''பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய், கண்ணிடை மணியொப்பாய்'' என்னும் திருநாவலூரர் திருப்பாடலினையும் எத்துணையளவிற் கலந்து ஈடுபட்டு நுகர்ந்ததன் பயனாக எழுந்ததாகும் என்பது, இனிது உய்த்துணரற்பாலது.

இங்ஙனம், இறைவன் ஒன்றுதல், வேறுதல், உடனாதல் என்னும் மூன்று வகையுமாய் உயிர்களோடு கலந்து நிற்கின்றான் என்னும் உண்மையை நிறுவுதற்கு, உரையளவைச் சான்றாக விளங்குவது வேதத்துட் போதரும் ''அத்துவிதம்'' என்னும் சொல்லேயாகும். ''அத்துவிதம்'' என்னும் இச்சொல்லானது, கேவலாத்துவிதம் விசிட்டாத்துவிதம் சுத்தாத்துவிதம் என்னும் சொற்றொடர்களில் சேர்த்துச் செய்யுள் வழக்கினும், உலக வழக்கினும் பெருக எடுத்தாளப்பட்டு வழங்கி வருகின்றது. தத்துவ நூல் ஆராய்ச்சிகளில் தலைப்படுவார்க்கு 'அத்துவிதம்' என்னும் சொற்பொருள் பற்றிய ஆராய்ச்சி இன்றியமையாத தொன்றாய்த் திகழ்கின்றது. சொல்லாராயும் நெறியாற் கருதிய வழியும் 'அத்துவிதம்' என்னும் சொல், ஒன்றும் இரண்டும் அற்ற கலப்புத் தன்மையை விளக்கவந்ததே யாதல் காணலாம்.

அத்துவிதம் சொற்பொருள்:

''நத்விதீயம்'' என்னும் வடமொழிச் சொல்லின் முன்னின்ற ''ந'' என்னும் உபசர்க்கத்தில், ''ந்'' என்னும் மெய்யெழுத்துப் போக, அம்மெய்யின்மேல் ஏறிநின்ற 'அ' என்னும் உயிரெழுத்து மாத்திரம் நின்று 'அத்விதீயம்' என்றாகிச் செந்தமிழ் வழக்கில் 'அத்துவிதம்' என்று திரிபெய்திவரும். இவ்வத்துவிதம் என்னும் சொல்லின் முன்னின்ற அகரமானது, அன்மை இன்மை மறுதலை என்னும் மூவகைப் பொருள்களை யுணர்த்தும். அப்பிராமணன் என்றபோது பிராமணன் அல்லாதவன் என்றே பொருள்படும்; ஏனைத் குலத்தாரைக் குறியாது. பிராமணனாக இருந்தும் பிராமணத் தன்மை இல்லாமையைக் குறித்தலால் இந்த அகரம் அன்மைப் பொருளில் வந்தது. அமலம் என்றபோது மலம் இல்லை எனக் குறித்தலால் அங்கே அகரம் இன்மைப் பொருள் குறித்தது. அநீதி என்னும் சொல்லில் நீதியின்

மறுதலையைக் குறித்தலால், அகரம் அங்கு மறுதலைப் பொருளை யுணர்த்தியது. இங்ஙனம் இவ்வகரம் அன்மை-இன்மை-மறுதலை என்னும் மூவகைப் பொருள்களையும் உணர்த்துதல், எண்ணுப் பெயர் ஒழிந்த ஏனைய இடங்களிலேயே யன்றி எண்ணுப் பெயர் மேல் வருமிடத்தன்றாகும்.

எண்ணுப் பெயர்மேல் வருங்கால், இவ்வகரம் அன்மைப் பொருள் ஒன்றையன்றி வேறு பிறிது பொருள் எதுவும் பயவாது. எண்ணுப் பெயர்மேல் வர நேர்வுழியும், ஏகம் துவிதம் என்னும் இரண்டு எண்ணுப் பெயர்களின் மேல் மட்டும் வருவதன்றி, ஏனைய எண்ணுப் பெயர்களின்மேல் இவ்வகரம் வருதல் இல்லை. ஏகம்என்னும் சொல்லோடு சேர்ந்து அநேகம் என வருகின்ற பொழுது, இஃது 'ஒன்றல்லாதது' என்னும் அன்மைப் பொருளே உடையதாதலை யாவரும் இனிதுணர்வர். இங்ஙனமே துவிதம் என்னும் சொல்லோடு சேர்ந்து ந+துவிதம் (அத்துவிதம்) என வருகின்றபொழுதும், இஃது 'இரண்டு அல்லாதது' என்னும் அன்மைப் பொருளையே உணர்த்தி நிற்கும் என்பது தெளியப்படும். ''எண்ணுப் பெயர்மேல் வந்த நகரம் அன்மைப் பொருள் மாத்திரையே யுணர்த்திப் பொதுமையின் நிற்பதன்றி, ஏனைய சொற்களின் மேல் வந்த நகரம்போல, இன்மை-மறுதலைப் பொருள்களை உணர்த்துதல் வழக்கின்கண் இல்லை'' எனவரும் ஆசிரியர் மாதவச் சிவஞான முனிவர் கூற்று, இவ்வுண்மைகளையே செவ்விதின் அறிவுறுத்தும்.

''அத்விதியம் பிரமம்'' என்றவிடத்துக் கடவுள் ஒன்றே எனப் பொருள் கொள்வார்க்கு ''ஏகமேவாத்விதியம் பிரமம்'' என்றவிடத்து, எவ்வாறு அப்பொருள் கொள்ளல் இயலும்? அவ்வாறு கூறியது, அப்பொருளை மேலும் மேலும் வற்புறுத்துக் கூறிய அடுக்கேயாம் எனின், அஃது ஏகம் ஏகம் என்றுதல், அத்விதீயம் அத்விதீயம் என்றுதல் இருத்தல் வேண்டுமேயல்லாது, இருவேறு மொழிகளாக இருத்தல் பொருந்தாது. இதனுல், ''கடவுட் பொருள் ஒன்றே; அஃது எல்லா உயிர்களோடும் கலந்து நிற்கும்'' என்பதே, ''அத்விதியம் பிரமம்'' என்பதன் உண்மைப் பொருளாதல் விளங்கும். இதனையே ''அத்துவிதம் என்ற சொல்லானே ஏகம் என்னின், ஏகம் என்று சுட்டுவது உண்மையின், அத்துவிதம் என்ற சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்துமாயிட்டு'' என வரும் ஆசிரியர் மெய்கண்டாரின் திருமொழி தெளிவித்துணர்த்துகின்றது.

''ஆணவத்தோ டத்துவிதம்
ஆனபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினேடு அத்துவிதம்
சாரும்நாள் எந்நாளோ?''

என்னும் நம் தாயுமானவ அடிகள் திருவாக்கும், நாம் பாசத்துடன் கலந்து அதன் வயமாய் நிற்றல்போல, இறைமுதற் பொருளோடு கலந்து அதன் வயமாய் நிற்கும்நாள் எந்நாளோ எனப் பொருள் பயந்து, அத்துவிதம் என்னும் சொற்குப் பொருள், இரண்டல்லாத கலப்புத் தன்மையே என்பதனை வலியுறுத்தப்போதிய சான்றாகும்.

இவ்வாறு ஆசிரியர் மெய்கண்டார் விளக்கும் அத்துவிதமானது, ஏனையோர் கூறும் அத்துவிதம் போலக் கேவலம் என்றுதல், விசிட்டம் என்றுதல், மறுதலை என்றுதல் யாதானும் ஒன்றுன் விசேடிக்கப்பட்டு நின்று பொருளுணர்த்தாமல், சுத்தமாய் நின்றே பொருளுணர்த்துதலால், சுத்தாத்துவிதம் என வழங்கப்படும். இம்முறைமையினை ''விசிட்டசத்தை'' ''சுத்த சத்தை'' எனத் தருக்கநூலார் கூறும் வாய்பாடுகள் பற்றியும் உணரலாம். ஏனையோர்கள் கூறும் அத்துவிதமானது, கேவலம் விசிட்டம் என்னும் சொற்களால் விசேடிக்கப்படாத வழி, அவர்கள் கூறும் பொருள் தருதற்கு ஏலாமையின், அவையெல்லாம் சுத்தாத்துவிதம் ஆகாமையும் காண்க!.

இறைவன் ஐந்தொழில் புரிதல்:

இதுகாறும் கூறிவந்தவாற்ருல், இறைவன் உயிர்களின் வேற்றுமையின்றி நின்று உயிர்களின் பொருட்டே ஐந்தொழில் செய்வன் என்பது வலியுறுத்தப்பட்டது. உயிர்களின் பொருட்டே இறைவன் ஐந்தொழில் செய்வன் எனில், சிலரை வாழ்வித்தும் சிலரைத் தாழ்வித்தும் இறைவன் ஐந்தொழில் செய்தல் எற்றுக்கு? என ஐயம் நிகழும். உயிர்களின் முற்பிறவிகளின் ஈட்டப்பட்டுக்கிடந்த இருவினைகளுக்கு ஏற்பவே இறைவன் உயிர்களைப் படைத்தலின், இறைவனை எல்லா உயிர்களையும் ஒப்ப நோக்காமையும் அருளின்மையும் உடையன் என்றல் பொருந்தாது. இக்கருத்தினையே ''இருவினையிற் போக்குவரவு புரிய'' என்னும் சூத்திரத்தொடர் விளக்குகின்றது.

இருவினைகளுக்கு ஏற்பவே உயிர்களை இறைவன் படைப்பன் எனின், இருவினைக்கு முதன்மையன்றி அவற்றின் வழி நின்று உயிர்களைப் படைத்து ஐந்தொழில் செய்யும் இறைவனுக்கு முதன்மையில்லை போலும் என ஐயம் நிகழும். அதனை நீக்குதற்கே ''ஆணையின்'' என்பதனை ஆசிரியர் சிங்கநோக்காய் அருளிச் செய்தார். இருவினைகள் முதல்வன் ஆணையான் வருவனவன்றித் தாமே வரும் சுதந்திரம் உடையன வன்மையின், இருவினைகளுக்கு ஏற்ப உயிர்களைப் படைத்தலால் இறைவனுக்கு நேரும் இழுக்கு ஏதும் இல்லை என்பது.

அற்றேல், வினையுண்டு எனக் கொள்ளின் அதுவே யமையும், இறைவன் வேண்டா; இறைவனுண்டு எனக் கொள்ளின் அவனே அமையும், வினை வேண்டா; இறைவனும் வினையுமாகிய இருபொருளும் கோடல் மிகையாகும் எனச் சிலர் கருதுவர். அது பொருந்தாது. உலகத்து வேந்தரெல்லாம் தம் நாட்டின்கண் அறநெறியின் வழுவினுரை வழக்கு வினவி ஒப்பநாடி அத்தக ஒறுத்தற்குப் பாடிகாவலன் மாட்டுத் தம் ஆணையை வைத்து, அவனைக் கொண்டு அத்தொழில் செய்வித்தலே யன்றித் தாமே முன்னின்று அத்தொழில் செய்யார்; அதுபோல இறைவனும் தன் ஆணையை இருவினையின்

மாட்டு வைத்து அவற்றைக்கொண்டு உயிர்களுக்குப் பயன் நுகர்விப்பன். எனவே, இறைவனும் வினையும் ஆகிய இருபொருள் கோடல் மிகையன்று.

இதனை விளக்குதற்கே ''ஒரு நகரியைக் காப்பான் பாடி காவலிட்டாங்கு அவை அவனது ஆக்கினை யாகலான்'' என ஆசிரியர் அருளிச் செய்தார். வினைதானே உயிர்களுக்குப் பயனாக வர அமையும், ஆணை வேண்டுவதில்லை எனச் சிலர் கூறுவர். செய்யும் உழவுதொழிலுக்குத் தக்க பயனை விளைநிலம் விளைவிப்பதன்றி, அத்தொழில் தானே விளைவிக்கமாட்டாது; அதுபோல வினைக்குத் தக்க பயனை இறைவன் ஆணையே உயிர்கட்கு நுகர்விப்பதன்றி, வினைதானே நுகர்வித்தல் இயலாது. இதனையே ''செய்பவர் செய்திப் பயன் விளைக்கும் செய்யேபோல், வள்ளல்அவன் செய்வன்; செயல் அணையா சென்று!'' என்று ஆசிரியர் விளக்கியருளினர்.

''செய்வினையும் செய்வானும்
அதன்பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும்
விதித்தபொருள் எனக்கொண்டே,
இவ்வியல்பு சைவநெறி
அல்லவற்றுக் கில்லைஎன
உய்வகையாற் பொருள்சிவன்என்
றருளாலே உணர்ந்தறிந்தார்!''

எனவரும் சேக்கிழார் அடிகளின் பெரியபுராணத் திருப்பாட்டும், ஈண்டுப் பெரிதும் கருதி யுணர்தற்குரியது.

அற்றேல், வினைசடமாகலின் உயிர்களைச் சென்றணைந்து பயன்தர மாட்டாதாயினும், உயிர்கள் அறிவுடைய சேதனப் பொருளாகலின், அவைகள் தாமே வினைப்பயனை அறிந்து எடுத்துக்கொண்டு நுகரவல்லனவாம். ஆணை எற்றுக்கு? என்று சிலர் வினு நிகழ்த்துவர். காந்தமானது இரும்பினை வலித்துக்கொள்ளும் ஆற்றலுடையதே யாயினும், அதனை ஒருவன் எடுத்துத் தனக்கு நேராகப் பிடித்த வழியன்றி வலித்துக் கொள்ளமாட்டாது: அதுபோலத் தமக்கென அறிவில்லாத உயிர்களும் இறைவன் நுகர்வித்தவழி யன்றித் தாமே வினைப்பயன்களை அறிந்து எடுத்துக்கொண்டு நுகரவல்லனவல்ல. இக்கருத்தே ''காந்த பசாசம்போல் அவ்வினையைப் பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல் ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு'' என ஆசிரியரால் விளக்கப்பட்டது. எனவே, இறைவனே ஆணையின் நீக்கமின்றி நின்று உயிர்களுக்கு வினைப்பயனை நுகர்விப்பான் என்பது துணியப்படும்.

இருவினையுண்மை:

அங்ஙனமாயின், இருவினையுண்மைதான் எதனாற் பெறுதும்? எனின்-உயிர்களுக்கு இன்ப துன்ப நுகர்ச்சியுண்மையின், அதற்குக் காரணமாகிய இருவினையுண்மை பெறுதும் என்பது. மேலும், காரியங்களெல்லாம் ஒருங்கே தோன்றாது அடைவே தோன்றுவதற்குக் காரணம் வினையேயன்றிப் பிறிதொன்றின்மையானும் வினையுண்மை துணியப்படும். அன்றியும், வினையில்லையாயின் விதித்தன செய்து விலக்கியன ஒழிதலாற் பயனின்றாய் முடியுமாகலானும், வினையுண்மை பெறப்படும். இன்னும் இதன் கட் படும் வினு விடைகளெல்லாம் சிவஞான சித்தியாரின்கண் ''இருவினை இன்பத் துன்பத்து'' என்னும் திருவிருத்தம் முதலாக விரித்தோதப் படுதலின் ஆண்டுக் கண்டு கொள்க.

அற்றேல், வினையுண்மை துணியப்படுமாயினும், அவ்வினையை ஆதி என்பதோ? அநாதி என்பதோ? ஆதியெனின், முன்பில்லாதது இடையே தோன்றும் என்றல் சற்காரிய வாதத்துக்கு ஏலாது; அநாதியெனின், ஒருவர் கூட்ட வேண்டுவதில்லை எனச் சிலர் தடை கிளத்துவர். நெல்லும் செம்பும் உண்டாயின அன்றே அவற்றில் உமியும் களிம்பும் உடன்தோன்றி உளவாயினவன்றி, இடையே வந்தன வல்ல; அதுபோல உயிர்கள் உளவாயின அன்றே, மலமாயை கன்மங்களும் அவற்றோடு உடன் தோன்றி உளவாயின, இடையே வந்தனவல்ல. முன்னரே உள்ளதாய தாமரைப் பூக்களில் ஒன்று அரும்பாக நிற்கவும், பிறிதொன்று மலரவும், வேறொன்று வதங்கி யொழியவும் அவ்வவற்றின் நிலைக்கேற்ப ஞாயிற்றினாற் செய்யப்படுமாறு போல-உயிர்களின்பால் முன்னரே யுள்ள மலமாயை கன்மங்களுக்கு ஏற்ப இறைவன் உயிர்களைப் படைத்துச் செயற்படுத்தி நிற்பான். எனவே, வினை அநாதியாயின் ஒருவர் கூட்ட வேண்டுவதில்லை என்றல் பொருந்தாது.

''நெல்லிற் குமியும், நிகழ்செம் பினிற்களிம்பும்
சொல்லிற் புதிதன்று; தொன்மையே!—வல்லி,
மல, கன்மம் அன்றுளவாம்! வள்ளலாற், பொன்வாள்
அலர்சோகம் செய்கமலத் தாம்!''

என்னும் வெண்பாவினால், இக்கருத்தினையே ஆசிரியர் நன்கினிது விளக்கியருளினர். எனவே உயிர்கள் முற்பிறவிகளிற் செய்த வினையே இறைவனாணையினால் இப்பிறவியின்கண் உயிர்களுக்குப் பயனாக வரும் என்பது தெளிவாம். முற்செய்வினையே இப்பிறவியிற் பயனாக வரும் என்றல் அமையும்? ''குடம் உடைந்தவழிக் குடாகாயம் ஆகாயத்தோடு கூடுமாறுபோல, உடம்பு நீங்கியவழி உயிர் பிரமத்தோடும் கூடும்; இறந்த உயிர் மீளப் பிறப்பதில்லை'' எனச் சிலர் கூறுவரே எனின்—தோற்றமும் கேடும் தொடர்ச்சியாய் உள்ள பொருள்களுக்கே யன்றித், தோற்றமும் கேடும் எய்துதற்குரிய உரிமையில்லாத ஏனைய பொருள்களுக்குத் தோற்றம் நிகழ்தல் கூடாமையின், இறந்த உயிர்கள் மீளப் பிறக்கும் என்று துணியலாம்.

இறந்த உயிரே மீளப் பிறக்குமாயின், முற்பிறவியின்கண் நிகழ்ந்தன வெல்லாம் இப்பிறவியின்கண் அறிதல் வேண்டுமே எனின்-நனவிற் கண்டதனைக் கனவினும், கனவிற் கண்டதனை நனவிலும் இவ்வொரு பிறவியின்கண்ணேயே நாம் மறந்தொழிந்து மயங்கி வருதலை அனுபவத்திற் கண்டு வருகின்றோமாகலின், முற்பிறவியின் நிகழ்ச்சிகளை இப்பிறவியின்கண்

அறியாமைபற்றி, இறந்த உயிர் மீளப் பிற வாது என்றல் அமையாது. குடாகாய உவமை மட்டுமேயன்றி, அரவுதன் தோலுரிவு முதலிய உவமைகளும் நூல்களிற் கூறப்பட்டுள்ளன. இவ்விரு வேறு உவமைகளும் ஒன்றற்கே யுவமையாதல் கூடாமையின், அரவுதன் தோலுரிவு உயிர்தூலவுடம்பை விட்டுப் போமாற்றிற்கும்; குடாகாய உவமை உயிர் சூக்கும வுடம்பை விட்டுப் போமாற்றிற்கும் கூறப்படலின் என்று அறிந்து கொள்ளுதல் வேண்டும் என்பது, இறந்த உயிர் மீளப் பிறக்கும் என்பது தேற்றம்.

சிவமும் சத்தியும்:

அங்ஙனமாயின், சடப் பிரபஞ்சம் போலச் சேதனப் பிரபஞ்சமாகிய உயிர்களும் மீளப் பிறத்தற்கு ஏதுவாய் இருவினைகளைச் செலுத்தி நிற்கும் ஆணை எனப்படும் சத்தியானது, சிவமாகிய இறைவனின் வேறோ? ஒன்றோ? என ஐயம் நிகழ்தல் இயல்பு. அதனைக் களைதற்கே,

''எங்குமுளன் என்றளவை, ஒன்றன்று; இரண்டென்னில்,
எங்கும் உளன்அன்று; எவற்றெவனும்—அங்கண்
அவை, அவன் அன்றில்லை; பொன், ஒளிபோல்ஈசன்;
அவை, உடைமை; ஆளாம், நாம் அங்கு!''

என்னும் இனிய வெண்பா எழுந்தது! இறைவன் எங்குமுளன் என்பதனால், அவன் ஒரு பொருளாதல் கூடாது; ஏனெனில், கங்கைக் கரையில் நின்ற ஒரு மனிதனே காவிரிக் கரையினும் ஒருங்கு நிற்க மாட்டான். அதுபோல இறைவன் ஒருபொருளேயாயின் ஒருகாலத்து ஓரிடத்து உளனாதலன்றி யாங்கணும் விரவி நிற்க மாட்டான்! இறைவன் இரு பொருளாய் நிற்பான் எனின், அவன் யாங்கணும் விரவி நிற்றல் இயலாது; ஏனெனில், தன்மாட்டே வேற்றுமை யுடையானுக்குப் பிறபொருள் களின்பால் வேற்றுமையின்றி விரவி நிற்றல் கூடாது! இவ்விருதிறத்தானும் முரணுதலின், இறைவன் எங்கும் உளனல்லன் எனத் துணியலாம் எனின், ''அகரவுயிர் இன்றேல் அக்கரங்கள் இல்லை'' யாமாறு போல, எவ்விடத்துள்ள எத்திறப் பொருள்களும் இறைவனை இன்றி அமையமாட்டா.

எனவே, எங்கும் உளனாய இறைவன், ஞாயிறும் ஒளியும்போல ஒன்றாதற்கும் இரண்டாதற்கும் பொதுவாய்த் தாதான்மியத்தாற் சிவமும் சத்தியும் என்று இயைந்து நிற்பான் என்பதே துணி பொருள். அங்ஙனமாயின், பசுபாசங்களும் வியாபகத் தன்மை யுடையனவாதலின், அவைகளும் இம்முறைமை பற்றி இறைவனைப் போலத் தத்தம் சத்திகளோடு தாதான்மியமாய் நிற்கப் பெறுமோ எனின், இறைவனது வியாபகத்தை நோக்கப் பசுபாசங்கள் வியாப்பியமாய் உள்ளடங்கி நிற்பனவாகலின், இறைவனுக்குப் பாசங்கள் உடைமையும், பசுக்களாகிய நாம் அடிமையுமாவோம்! ஆணையாகிய சிற்சத்தி இறைவனுக்குப் பண்பு ஆகும் என்றுணர்க!

பாசம் உள்ளமைக்குப் பிரமாணம்:

இவ்விரண்டாஞ் சூத்திரம் பாசமுண்மைக்குப் பிரமாணம் கூறியது. ''ஆணையின் இருவினையின் நிற்பன்'' எனவே, உலகுக்கு இறைவன் நிமித்த காரணம்: ஆணையாகிய சிற்சத்தி துணைக் காரணம்; இருவினையும் அதன் வழித்தாகிய துணைக் காரணம்; இருவினைக்குப் பற்றுக்கோடாகிய மாயை முதற்காரணம் என்பன பெறுதும். ''இருவினையிற் போக்கு வரவு புரிய'' எனவே, ஒடுங்கியினின்று மீளவுளதாங்கால், உலகம் இருவினைகட்கு ஏற்பப் பலவேறு வகைப்பட்டு விரியும் என்பது போதரும். வினைக்குத் தொன்மை கூறுவார், இனம் பற்றி மாயை மலங்களுக்கும் தொன்மை கூறினர்.

வினையானது வன்னம் பதம் மந்திரம் புவனம் கலை தத்துவம் என்னும் அத்துவாக்கள் இடமாக, மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றான் ஈட்டப்பட்டு, தூல கன்மமாய் ஆகாமியம் எனப் பெயர் பெற்று, பின்னர்ப் பக்குவ மாங்மாறும் சூக்கும கன்மமாய்ப் புத்தி தத்துவம் பற்றுக்கோடாக மாயையிற் கிடந்து, சாதி ஆயுள் போகம் என்னும் மூன்றற்கும் ஏதுவாய், முறையே சனகம் தாரகம் போக்கியம் என்னும் மூவகைத்தாய், அபூருவம் சஞ்சிதம் புண்ணிய பாவம் என்னும் பரியாயப் பெயர்கள் பெற்று, பின்னர்ப் பயன்படுங்கால் ஆதிதைவிகம் ஆத்தியான்மிகம் ஆதிபௌதிகம் என்னும் முத்திறத்தாற் பலதிறப்பட்டுப் பிராரத்தம் எனப் பெறும். நல்வினை தீவினை எனப்படும் இருவினையின் காரியம், முறையே இன்பம் துன்பம் என்பன. மூலமலத்தின் காரியம் மோகம் மதம் அராகம் கவலை தாபம் வாட்டம் விசித்திரம் என்பன. மாயையின் காரியம் தனுகரணம் புவனம் போகம் என்பன. ''வள்ளலால் ஆம்'' எனவே திரோதான சத்தியுண்மையும் பெற்றாம்.

திரோதான சத்தியானது பாகம் வருவித்தற் பொருட்டு மலத்தின் வழி நின்று மோகம் முதலியவற்றைத் தொழிற்படுத்துவதாகிய சிவ சங்கற்பத்திற்கு ஏதுவாதல் பற்றி 'மலம்' என்று உபசரித்துக் கூறப்படும். இவ்வாறு மலம் கன்மம் மாயை திரோதானம் மாயாகாரியம் என்னும் ஐவகைப் பாசமும் கண்டு கொள்க. இவற்றுள் மாயையானது, சுத்தமாயை அசுத்த மாயை என்று இருவகைப்படும். சுத்தமாயையினின்று நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந்தியதீதை என்னும் பஞ்ச கலைகளும், சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என்னும் நால்வகை வாக்குகளும், சிவதத்துவங்கள் ஐந்தும், சுத்தகாலம் முதல் சுத்த நிலம் ஈறாகிய முப்பத்தொன்றும் தோன்றும். அசுத்த மாயையினின்று அசுத்தகாலம் முதல் அசுத்தநிலம் ஈறாகிய முப்பத்தொரு தத்துவங்களும் தோன்றும். இந்தத் தத்துவங்கள் எல்லாம் பொதுவும் சிறப்பும் பொதுச் சிறப்பும் எனத் தனித்தனி மூவகைப் பட்டு, உயிர்கள் தோறும் வெவ்வேறு உளவாம். இவற்றின் விரிவெல்லாம் சிவஞானபோதப் பேருரையுட் காணலாம்.

—தொடரும்.

திருத்தொண்டர் புராணம்

''சிலம்புச் செல்வர்''
திரு. ம. பொ. சிவஞானம்
அவர்கள்

தமிழ் மொழிக்குள்ள தனிச் சிறப்புகள் பலவாகும். அவற்றுள் ஒன்று, அதன் தேவையை நிறைவு செய்யக் காலத்திற்குக் காலம் புரட்சி உள்ளம் படைத்த புலவர் பெருமக்கள் பலர் தோன்றி வருவதாகும். தமிழ்த்தாய் தனது அரசுரிமையை இழந்திருந்த காலங்களிலும் தமிழ்ப் புலவர்களைத் தலைமுறைதோறும் தந்து வந்திருக்கிறாள். ஆம்; அவள் மலடி அல்லள்; அதனாற்றானே ''கன்னி'' என்று புலவர் பெருமக்களால் பாராட்டப்படுகிறாள்.

கி. பி. 2 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து சிலப்பதிகாரம் படைத்தருளிய இளங்கோவடிகளுக்குப் பின்னர் தமிழ் இனத்தை ஒருமைப் படுத்துவதற்குத் துணை புரியும் காப்பியமே தமிழில் தோன்றவில்லை. மணிமேகலை, சீவக சிந்தாமணி, பெருங்கதை ஆகிய காப்பியங்களெல்லாம் புறச்சமயங்களான சமணத்தையும் பவுத்தத்தையும் சார்ந்தவை யாதலால், அவை தமிழ் இன ஒருமைப்பாட்டிற்குப் பயன் படவில்லை. மாறாக, சமயப் பூசலைத் தோற்றுவித்து ஒருமைப்பாட்டைக் குலைப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு வந்தன.

இளங்கோவடிகளுக்குப் பின்னர் தமிழகத்திலே நடக்கக் கூடாதவையெல்லாம் நடந்து விட்டன. களப்பிரர், பல்லவர், சாளுக்கியர் போன்ற அயல்மொழியினரெல்லாம் தமிழகத்தின் மீது ஆதிக்கம் பெற்றமையால், அந்த ஆதிக்கங்களும் பல நூற்றாண்டுக் காலம் நிலை பெற்று விட்டமையால், தமிழர் வாழ்விலே செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே அறமாகியிருந்தது. தமிழினத்தார் வாழ்விலே எந்த ஒரு துறையிலும் ஒருமைப்பாடு நிலவ வில்லை. இந்த நிலையிலேதான் தமிழ் இனத்தாரை ஒன்றுபடுத்தச் சேக்கிழார் தோன்றுகிறார். சென்னைக்குப் பத்துகல் தொலைவிலுள்ள குன்றத்தூரிலே சேக்கிழார் பிறந்தார். சேக்கிழார் என்பது அவரது குடிப்பெயர். பெற்றோரிட்ட இயற்பெயர் அருண்மொழித்தேவர் என்பதாகும்.

சேக்கிழார் காலத்திலே தமிழ்நாடு முழுவதிலும் சோழர் பேரரசு நிலவியிருந்தது. கி.பி. 8-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் தமிழரல்லாதார் கொடுங்கோலோச்சிய நிலை கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் மாறியது. சோழரான தமிழர்கள் திரும்பவும் தங்கள் ஆற்றலால் பேரரசு படைத்தனர். வேற்றினத்தவரால் கைப்பற்றப்பட்டிருந்த தமிழ்ப் பகுதிகளையெல்லாம் மீட்டு முழுத் தமிழகத்திலும் ''தமிழரசு'' கண்டனர். அந்தத் தமிழரசின் குடிமகனாகத் தான் சேக்கிழார் அவதரித்தார். தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழே முதலிடம் பெற்றிருந்த சூழ்நிலையில்தான் சேக்கிழார் பிறந்தார். ஆனால், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களிடையே ''தமிழர்'' என்னும் இனவுணர்ச்சி இல்லாத கொடுமை சேக்கிழார் பிறந்த காலத்திலேயும் தமிழகத்தில் நிலவியது.

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால் வருண வேறுபாடு தமிழர் வாழ்விலே தலைதூக்கி நின்றது. இந்த வேறுபாடுகளிடையே ஏற்றத் தாழ்வும் நிலவியது. இந்த நால் வருணங்களுக்கும் அப்பால் ''பஞ்சமர்'' என்னும் பெயரால் ஐந்தாவது வருணத்தவரும் படைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் தீண்டப்படாதவர்களாகவும் நடத்தப்பட்டனர்.

இந்த வருண வேறுபாடுகள் போதாவென்று சாதிவேறுபாடுகளும் பெருகியிருந்தன. சாதிக்குள் சாதிகளும் மலிந்திருந்தன. சாதிக்குச் சாதி ஏற்றத் தாழ்வும் இருந்து வந்தன. சைவ வைணவ சமயங்களிடையேயும் பூசல் இருந்து வந்தது. தன் தன் சமயமே உயர்ந்த தென்ற வழக்குகளிலே சைவ, வைணவ சமயத் தலைவர்கள் ஈடுபட்டு வந்தனர்.

புறச் சமயங்களான சமணமும் பௌத்தமும் ஒடுக்கப்பட்டிருந்தன என்றாலும், அவை திரும்பவும் தலையெடுப்பதற்கான சூழ்நிலையும் தமிழகத்தில் இருந்து வந்தது. அப்படித் தலையெடுத்தால், திரும்பவும் 'களப்பிரர்கள்' தோன்றக்கூடும் என்ற அச்சமும் தமிழரிடை நிலவியது.

சமணத்திடமும் பௌத்தத்திடமும் தமிழர் இயற்கையாகவே நல்லெண்ணம் காட்டி வந்தனர் என்பதனைச் சிலப்பதிகாரக் காப்பியத்தால் அறிகிறோம். ஆனால், அந்த நல்லெண்ணந் தான் தமிழகம் அரசுரிமை இழப்பதற்குக் காரணமாகி விட்டதென்பதனைச் சேக்கிழார் தோன்றுவதற்கு முன்பே வரலாறு காட்டிவிட்டது. ஆகவே, அகச் சமயங்களுக்கும் புறச் சமயங்களுக்குமிடையே ஒருமைப்பாடு காணும் தோல்விப் பாதையிலே திரும்பவும் நடை போடுவதற்கு ஒரு தலைவர் தமிழினத்தாருக்குத் தேவைப்படவில்லை. தமிழர் சமயத்தை மையமாக வைத்துத் தமிழினத்தாரை ஒன்றுபடுத்தத்தான் தலைவர் தேவைப்பட்டார். அத்தகைய தலைவராகத்தான் குன்றத்தூரில் சேக்கிழார் தோன்றினார்.

கற்பரசியாம் கண்ணகியைத் தெய்வமாக வைத்துத் தமிழினத்தை ஒன்றுபடுத்தி, அந்த

ஒருமைப்பாட்டின் அடிப்படையில் இந்திய தேசிய ஒருமைப்பாட்டினையும் மனித குலத்தின் ஒருமைப்பாட்டினையும் கட்டி வளர்க்க இளங்கோ விரும்பினார். கண்ணகியை, 'கொங்கச் செல்வி, குடமலையாட்டி, தென்தமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து, ஒரு மாமணியாய் உலகுக்கோங்கிய திருமாமணி'' என்று இளங்கோவடிகள் கூறியிருப்பதே இதற்குச் சான்றாகும். ஆனால், சமயங்களையெல்லாம் ஒன்றுபடுத்தி, அந்த அடிப்படையிலே தமிழின ஒருமைப்பாட்டைக் கட்டிவளர்க்க இளங்கோ எடுத்த முயற்சிக்கு வெற்றி கிடைக்கவில்லை.

தமிழினத்தின் தேசியக் காப்பியமான சிலப்பதிகாரம் தோன்றிய அடுத்த நூற்றாண்டிலேயே சமண சமயத்தின் துணைகொண்டு களப்பிரர்கள் தமிழகத்தைக் கைப்பற்றிவிட்டனர். பின்னர், சமணத்தோடு போட்டியிட்டுப் பௌத்தமும் தன் கைவரிசையைக் காட்டியது. இதனால், இளங்கோவடிகளின் சமய ஒருமைப்பாடு தோல்வி கண்டுவிட்டதென்பதனைக் காலம் காட்டிவிட்டது. இதனை ஒரு பாடமாகக் கொண்டுதான் சேக்கிழார் பெருமான் சைவ, வைணவ, சமண பௌத்த சமயங்களை ஒன்றுபடுத்த முயலாதவரானார். சைவ சமயம் ஒன்றை மட்டுமே மையமாக வைத்துத் தமிழ் இனத்தாரை ஒருமைப்படுத்தும் குறிக்கோளுடன் திருத்தொண்டர்புராணம் என்னும் காப்பியத்தைப் படைத்தார். சிலப்பதிகாரத்தை யடுத்துத் தமிழர்களையே பாத்திரங்களாகக் கொண்டு படைக்கப்பட்ட-தமிழின ஒருமைப்பாட்டையே குறிக்கோளாகக் கொண்டு இயற்றப்பட்ட-இரண்டாவது காப்பியம் திருத்தொண்டர் புராணந்தான் என்று துணிவாகச் சொல்லலாம்

சேக்கிழார், பிறப்பால் தமிழர் ; வாழ்க்கை நெறியிலேயும் கலப்படம் எதுமின்றிச் சுத்தத் தமிழராகவே வாழ்ந்தவர் ; தமிழினத்தாரை ஒருமைப்படுத்தவே திருத்தொண்டர் புராணத்தைப் படைத்தவர் ; சைவ நெறியும் தெய்வப் பற்றும் நிலைத்தால்தான் தமிழரெல்லாம் ஓரினமாய் ஒன்றுபட்டு வாழமுடியும் என்பதை வற்புறுத்தியவர். இவற்றை இன்னும் சற்று விரிவாக ஆராய்ந்து அறிய முயல்வோம்.

தொண்டை மண்டலத்தில் பிறந்த சேக்கிழார், அந்த மண்டலத்தையும் தன்னுள் கொண்ட சோழப் பேரரசின் முதலமைச்சர் ஆனார். அநபாயன் என்று அழைக்கப்படும் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில்தான் சேக்கிழார், சோழர் பேரரசின் முதலமைச்சராக இருந்தாரென்று ஆராய்ச்சியாளர்கள் அறிவிக்கின்றனர். சோழ மண்டலத்திலுள்ள திருநாகேச்சுரம் சிவனை, வழிபடு தெய்வமாகக் கொண்டிருந்தார். அதன் காரணமாக, தாம் பிறந்த குன்றத்தூரில் சிவன் கோயில் அமைத்து, அதற்குத் திருநாகேச்சுரம் என்று பெயர் தந்தார்.

குன்றத்தூரில் சேக்கிழார் பிறந்த இல்லமே அவருடைய கோயிலாகச் செய்யப்பட்டுள்ளது. காலப்போக்கில் பழுதடைந்து விட்ட அந்தக் கோயிலைப் பெரு முயற்சி எடுத்துச் செப்பனிட்டு, ஆண்டுதோறும் சேக்கிழாருக்கு அங்கு விழா நடத்தி வருகிறார் வித்துவான் மறை. திருநாவுக்கரசு.

திருத்தக்க தேவர் என்னும் சமணப் பெரியார் சீவக சிந்தாமணி என்னும் பெருங்காப்பியத்தைத் தமிழில் படைத்தார். அந்தக் காப்பியத்தின் செய்யுட்கள் அனைத்தும் விருத்தப் பாக்களால் ஆனவை. இதனால், ''விருத்தப் பாவுக்குத் திருத்தக்க தேவர்'' என்னும் சிறப்புப் பெயரையும் சிந்தாமணி ஆசிரியர் பெற்றிருக்கிறார். ஆசிரியரின் தவ வலிமையாலும், அருந்தமிழ்ப் புலமையாலும் சிந்தாமணிக்குத் தமிழகத்தில் நல்ல செல்வாக்கு ஏற்பட்டு வந்தது. இதனால், தளர்ந்து போய் இருந்த சமணம் திரும்பவும் தலையெடுத்துவளர வாய்ப்புப் பெற்று விடுமோவென்று சைவப் பெரு மக்கள் அஞ்சினர். சோழப் பேரரசனை அநபாயனும் சிந்தாமணிக் காப்பியத்தால் கவர்ச்சிக்கப்பட்டான். அந்தக் கவர்ச்சியிலிருந்து அநபாயனை மீட்கும் பொருட்டாகவே சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளினர் என்று சொல்லப்படுகிறது.

திருத்தொண்டர் புராணத்திற்குப் ''பெரிய(ர்) புராணம்'' என்று மற்றொரு பெயரும் உண்டு. தமது புராணத்தின் காப்புச் செய்யுளிலே சேக்கிழார் பெருமானே ''மாக்கதை'' என்று கூறியதை வைத்துத்தான் பெரிய புராணம் என்னும் பெயர் பிறந்ததெனக் கூறுவாருமுளர்.

தேவாரம் பாடிய மூவருள் ஒருவரான சுந்தரமூர்த்தி சுவாமிகள், சிவனடியார் அறுபத்து மூவரின் பெயர்களையும் சிறப்புக்களையும் சொல்லி, திருத்தொண்டத் தொகை பாடி வைத்துப் போனார். நம்பியாண்டார் நம்பிகள் என்று அழைக்கப்படும் சைவப் பெரியார், சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையின் விளக்கமாகத் ''திருத்தொண்டர் திருவந்தாதி'' இயற்றியருளினர். இந்த இரண்டையும் வைத்துக்கொண்டுதான் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தைப் பாடினர்.

தில்லையில் இருந்து கொண்டுதான் பெரிய புராணத்தைப் பாடும் பணியில் சேக்கிழார் ஈடுபட்டார். புராணம் சிறப்பாக அமைய வேண்டுமே என்னும் கவலையால், தில்லை அம்பலவாணரின் அருளை வேண்டிச் சேக்கிழார் பிரார்த்தித்தாராம். அப்பொழுது 'உலகெலாம்' எனும் மெய்ம் மொழியைத் தில்லை அம்பலவாணர் சேக்கிழாரின் இதயத்திலிருந்து கொண்டு ஒலித்தாராம். இப்படி அம்பலவாணர் தந்த 'உலகெலாம்' என்பதையே முதல் சொல்லாக வைத்து சேக்கிழார் பெருமான் காப்புச் செய்யுள் படைத்தார். அது வருமாறு :

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

இந்தப் பாடலிலே முழு முதற் கடவுளையே வழிபடுகின்றார் திருத்தொண்டர் புராண ஆசிரியர். ஆம்; கடவுளின் அருளால் பெற்ற மெய்ம்

மொழியையே முதற் சொல்லாக வைத்து அவரை வழிபடுகின்றார். சேக்கிழாருக்கு முழு முதற் கடவுள் அருள் கூர்ந்தளித்த உலகெலாம் என்னும் சொல்லுக்கு வடலூர் இராமலிங்க சுவாமிகள் மிக நீண்ட உரை எழுதியிருக்கின்றார். இந்த உரை நூலுக்கு ''மெய்ம் மொழிப் பொருள் விளக்கம்'' என்றும் பெயர் தந்துள்ளார். அதிலே, ''சேக்கிழார் என்னும் தெய்வப் புலவர்'' என்றும், ''திருவருட் புலமை சான்ற சேக்கிழார் என்னும் பெரியர்'' என்றும், ''சேக்கிழார் என்னும் பேரிற் சிறந்த பேரறிவுடைய பெரியர்'' என்றும் திருத்தொண்டர் புராணத்தில் ஆசிரியரைப் புகழ்ந்து புகழ்ந்து பேசுகின்றார். தமது உரை நூலின் பெயருக்கு வள்ளலார் தந்துள்ள விளக்கத்தின் ஒரு பகுதி வருமாறு :

''இஃகு உலகெலாம் என்னும் மெய்மொழிப் பொருள் விளக்கம் என்பது எங்ஙனமெனின் : திருவருள் இன்பத்தை அங்கைக் கனியிற் பெற்ற பெரியரையும் அத்திருவருளையும் வாச்சிய லட்சியமாகக் கொண்ட பெரிய புராணத்தில், தெய்வத் தற்சிறப்புச் செந்தமிழ்ச் செய்யுட்கண், எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் எடுத்துக் கொடுக்கப்பட்ட ''உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்'' என்னும் மெய்ம் மொழியினது பொருள் விளக்கம் என்றாயிற்று''.

இராமலிங்க சுவாமிகள் காலத்தில் வாழ்ந்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார், சேக்கிழார் பெயரில் ''பிள்ளைத் தமிழ்'' பாடியுள்ளார். அதிலே, ''பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ'' என்று சேக்கிழாரின் சிவ பக்தியையும் செந்தமிழ்ப் புலமையையும் சிறப்பித்துக் கூறுகின்றார்.

சேக்கிழாருக்கு 200 ஆண்டுகள் கழித்துப் பிறந்த உமாபதி சிவாச்சாரியார் என்னும் பெரியார், ''திருத்தொண்டர் புராண வரலாறு'' என்னும் செய்யுள் இலக்கியத்தைப் படைத்துள்ளார். ''காஞ்சிப் புராண''த்துள்ளும் சேக்கிழார் சிறப்புக் கூறப்படுகிறது.

இளங்கோவடிகளின் வாரிசாகத் தோன்றித் தமிழ் இனத்தாரை ஒருமைப்படுத்தும் குறிக்கோளுடன் திருத்தொண்டர் புராணத்தைப் படைத்த சேக்கிழார், அந்தப் பணிக்குப் பின்னர்ச் சோழப் பேரரசின் பிரதமர் பதவியைத் துறந்தார். திருத்தொண்டர் புராணத்தில் தாம் கூறியுள்ள செந்நெறிகளையெல்லாம் தமிழருடைய சிந்தையிலே புகுத்தி ஒருமைப்பாடும் உயிர்ப்பாடும்உடையதமிழினத்தைப்படைக்கப் பாடுபடுவதற்கென்றே அவர் பதவி துறந்தார். தமிழ்நாடு முழுவதிலும் சுற்றுலாச் செய்து, நால் வருண வேறுபாடுகளையும், சாதிப் பாகுபாடுகளையும் கடந்த ஒருமைப்பாட்டுணர்வைத் தமிழர்களிடையே உருவாக்கத் தொண்டு புரிந்தார். அவரது பணியைப் பாராட்டும் வகையிலே அவருக்குத் ''தொண்டர் சீர் பரவுவார்'' என்னும் சிறப்புப் பெயரை அநபாய சோழன் அளித்தான்.

இன ஒருமைப்பாட்டைச் சாதிப்பதற்கு என்றே அவதரித்த அந்த மகாகவியை—தீந்தமிழ் நாட்டின் தேசியக் கவியை—மாமன்னனான அநபாயன் யானை மீதேற்றி வைத்து ஊர்வலம் செய்தான். அந்த நேரத்திலே மக்களெல்லாம் காணும்படியாக யானை மீது சேக்கிழாரின் அருகிலமர்ந்து, அவருக்கு வெண்சாமரம் வீசினான். இந்த நிகழ்ச்சியானது அந்நாளைய அரசர்கள் தமிழ் மொழியிடத்தும், அம்மொழியில் புலமை பெற்றவர்களிடத்தும், தமிழ் இனத்தின் ஒருமைப்பாட்டுக்குப் பாடுபடுபவர்களிடத்தும், எத்தகைய மதிப்பு வைத்திருந்தார்கள் என்பதைப் புலப்படுத்துகிறது. சேக்கிழார் தமது இறுதிக் காலத்தில் தில்லையிலேயே தங்கியிருந்து, அங்கேயே முக்தி பெற்றார் என்று சொல்லப்படுகிறது.

இனி, சேக்கிழார் புராணத்திலுள்ள — தமிழின ஒருமைப் பாட்டுக்குத் துணை புரியக் கூடிய— செய்திகளை ஆராய்வோம்.

திருத்தொண்டர் புராணத்தைத் தமிழ்த் தேசியக் காப்பியம் என்று சொல்லலாம். தேசியக் கவிஞரான சுப்பிரமணிய பாரதியார், தமிழ் மொழிக்கு வாழ்வளிக்கக் காலந்தோறும் தோன்றி வந்த புலவர்களில் தலை சிறந்தவர்களாக வள்ளுவரையும் இளங்கோவையும் கம்பரையும் தேர்ந்தெடுத்துக் கூறினார். இவர்களோடு திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழாரையும் அவர் சேர்த்திருக்க வேண்டும். திருத்தொண்டர் புராணம் பாரதியாரின் நினைவிற்கு அப்பாற்பட்டதாக இருந்திருக்க முடியாது. ஆயினும், புராணம் என்று பெயர் பெற்றுவிட்டதனாலும், தமிழினத்தாரிலே சைவ சமயத்தாருக்கு மட்டுமே உரியதாகி விட்டதனாலும், தேசியக் கவிஞரின் உள்ளத்தைத் திருத்தொண்டர் புராணம் கவரவில்லை போலும்!

சேக்கிழார் பாடிய புராணத்தால் மலர்ச்சியடைந்த தேசியம் வேறு; பாரதியார் வாழ்ந்த 20ஆம் நூற்றாண்டில் மலர்ச்சி யடைந்திருந்த தேசியம் வேறு. ஆனால், இரண்டுக்குமிடையே முரண்பாடு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. வருண வேறுபாடுகளையும், சாதி வேறுபாடுகளையும் கடந்து வளர்ந்த இனவழித் தேசியத்தைத் திருத்தொண்டர் புராணத்தில் காண்கின்றோம். இதன் மறுமலர்ச்சியாகத்தான் இந்திய தேசியத்தைப் பாரதியாரின் பாடல்களிலே பார்க்கின்றோம். ஒன்றின் வளர்ச்சிதான் மற்றொன்று. வித்தின்றி எதுவும் விளையாது. வித்து, திருத்தொண்டர் புராணம். அதிலிருந்து பிறந்து வளர்ந்த விருட்சம் பாரதியாரின் தேசிய இலக்கியம்.

உலகப் பொதுமையையும் சேக்கிழார் வற்புறுத்தியிருக்கிறார் என்பதைத் தமிழர் மறத்தலாகாது. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்பதனைத் தங்கள் வாழ்க்கையில் தலைசிறந்த பண்பாடாகக் கொண்ட தமிழர்கள், தங்கள் இனத்தின் நலத்திற்காகவும், உலகப் பொதுமையைப் பலி கொடுக்க மாட்டார்கள். உலகப் பொதுமையானது தமிழினத்திற்கும் காப்பு அளிக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால், வருண வேற்றுமைகளாலும், சாதி வேற்றுமைகளாலும் பிளவு பட்டு நிற்கும் தமிழினமானது உலகப் பொதுமைக்கு உதவி புரிய முடியாது. இதனை உணர்ந்துதான் சேக்கிழார் பெருமான், உலகப் பொதுமைக்கான முதல் முயற்சியாகத் தமிழினத்தாரை ஒன்றுபடுத்தத் திருத்தொண்டர் புராணத்தைப் படைத்தார். அந்த வகையில் அதனை இனவழித் தேசியக் காப்பியமாகவும் கொள்ளலாம்.

—:o:—

திருப்பாவையில் திருக்குறள்

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

முன்னுரை :

'திருக்குறள்' எனின், தெய்வப் புலவர் திருவள்ளுவர் இயற்றியருளிய நூலையே பொதுவாகப் பெரும்பாலும் குறிக்கும். எனினும் மேற்கொள்ளப் பெற்றுள்ள தலைப்பில், 'திருக்குறள்' என்பது ஏற்புழிக்கோடல் என்னும் உத்தியாலும், 'தற்குறிப்பேற்றம்' என்னும் அணியாலும், திருமாலின் அவதாரங்கள் பத்தனுள் ஒன்றாகிய 'வாமனர்' என்னும் அவதாரத்தைக் குறிப்பதாகக் கொள்ளுதல் கூடும். அஃது எதுபோலும் எனின், திருப்பாவை என்பது, பொதுவாகப் பெரும்பாலும் பட்டர்பிரான் கோதை சொன்ன சங்கத் தமிழ் மாலை எனப் படும் பாவைப் பாடல்களையே குறிக்கும் எனினும், 'திரு ஆகிய பாவை' என்னும் பொருளில், பாவைப்பாடல்களைப் பாடியருளிய ஆண்டாள் நாச்சியாரையும் குறிக்கவல்லதாதல் போலும் என்பது.

''குறள்'' என்னும் சொல், திருமாலின் அவதாரமாகிய வாமனரையுணர்த்தும் என்பதற்கு ''மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால் ஞாலம் முழுதும் நயந்து அளந்தான்'' எனவும், ''கான்நின்ற தொங்கலாய் காசிபனூர் தந்ததுமுன் கூநின்று அளந்தகுறள் என்ப'' எனவும் வரும் திருவள்ளுவமாலைச் செய்யுட்களே, சான்று பகரும். 'வைகுந்தா மணிவண்ணனே என் பொல்லாத் திருக்குறளா' என்று நம்மாழ்வாரும், 'நித்த நியமத்தனாகி நெடுமால் குறளாகி மிகவும் சித்தமது ஒருக்கி வழிபாடு செயநின்ற சிவலோகன் இடமாம்' என்று திருஞானசம்பந்தரும் அருளிச் செய்துள்ள பாடல்களும், இவ்வுண்மையினை இனிது வலியுறுத்தும். எனவே ''திருப்பாவையில் வாமனரைப் பற்றி வந்துள்ள குறிப்புகள், அவர்தம் சிறப்புகள்'' ஆகியவை பற்றிப் பேசுவதற்கு இத்தலைப்பு இடம் தருவதாதல் காணலாம்.

ஐவகை நிலைகள் :

'வேதம் அனைத்துக்கும் வித்தாகும்' எனப் போற்றப்பெறும் திருப்பாவைப் பாடல்களில் எத்தனையோ பல அரிய பெரிய பொருள்கள் சொல்லப்பட்டுள்ளன. அவற்றுள், திருமாலின் ஐவகை நிலைகள் பற்றிய குறிப்பும் ஒன்று. ''நாராயணனே நமக்கே பறை தருவான்'' என்றதனால் பரத்துவநிலையும்; 'பாற்கடலுள் பையத்துயின்ற பரமன்' என்றதனால் வியூக நிலையும், 'யசோதை இளஞ்சிங்கம்' 'நந்த கோபன் குமரன்' என்றதனால் விபவநிலையும்: 'மனத்துக்கினியான்' என்றதனால் அந்தர்யாமித்துவ நிலையும், 'புள்ளரையன் கோயில்' என்றதனால் அர்ச்சைநிலையும் ஆகிய திருமாலின் ஐவகைநிலைகளும், திருப்பாவைப் பாடல்களிற் குறிப்பிடப் பெற்றுள்ளமை காணலாம்.

பாவை நோன்பு :

இவ் ஐவகை நிலைகளுள் ஒன்றாய், விபவ நிலையினைச் சார்ந்ததாகிய வாமன அவதாரம் பற்றிய புகழுரை, திருப்பாவைப் பாடல்களுள் ஒன்றன்கண், மிக்க சிறப்பிடம் பெற்று வந்துள்ளது. பெரியாழ்வார் கண்டெடுத்து வளர்த்த ஆண்டாள் நாச்சியார் ஸ்ரீவில்லிபுத்தூரே திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்களே இடைப் பெண்களாகவும், தானும் அவர்களிலே ஒருத்தியாகவும், வடபெருங் கோயிலே நந்தகோபர் திருமாளிகையாகவும், உள்ளே நிற்கிறவன் கண்ணபிரானாகவும் நினைத்துக் கொண்டு, அந்நினைவின் முதிர்ச்சியாலே இடை நடையும், இடை முடியும், இடைப்பேச்சும், முடைநாற்றமுமாய் மாறி நின்று, கண்ணபிரானை அடைவதன் பொருட்டுப் பாவை நோன்பு நோற்கலுறுகின்றாள்.

பாவை நோன்பின் பயன் :

பாவை நோன்பு நோற்பதன் நோக்கம் அல்லது பயன் இரண்டு. ஒன்று பெண்கள் எல்லோரும் கண்ணபிரானோடு கூடிக் கலந்து களித்தல். மற்றொன்று, உலகமெல்லாம் செழிக்கும்படி மாதம் மும்மாரி பெய்து, அதனால் மக்கள் எல்லோரும் நீங்காத செல்வம்நிறைந்து இன்புற்று வாழ்தல், இவ்விரண்டாம் நோக்கத்தை வெளியிடும் சிறந்த திருப்பாவைப் பாடலின் தொடக்கத்திலேயே, 'திருக்குறள்' எனப் படும் வாமன அவதாரம் பற்றிய செய்தி வருகின்றது.

ஓங்கி உலகளந்த
    உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச்
    சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம்
    திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ் செந்நெல்
    ஊடு கயல் உகளப்

பூங்குவளைப் போதில்
பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து
சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும்
வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம்
நிறைந்தேலோர் எம்பாவாய்!

பாடலின் பொருள் :

''இறைவனின் திருநாமங்களைப் பாடி, எங்களுடைய நோன்புக்கு ஒருப்பட்டு, நாங்கள் மார்கழி நீராடினால், பெரு மழை யாகிய வெள்ளக்கேடும், மழையின்மையாகிய வறட்கேடும் இல்லாமல், ஒன்பது நாள் வெயி லும், ஒருநாள் மழையுமாக, மாதந்தோறும் மூன்று முறை மழைபெய்யவும், அதனால் வான ளாவ ஓங்கிப் பெருகி வளர்கின்ற செந்நெற் பயிர்களின் நடுவே, கயல்மீன்கள் துள்ளவும், அழகிய குவளை மலர்களில் வண்டுகள் தேனை யுண்டு உறங்கவும், இடையர்கள் தொழுவத் திற் புகுந்து அசையாமல் இருந்து, பருத்த மடிகளைப் பற்றி இருகைகளாலும் கறக்கப் பால்சுரந்து பல குடங்களை நிறைவிக்கின்ற வள்ளற் றன்மையையுடைய பெரிய சிறந்த பசுக்கள் பெருகவும், அழிவில்லாத பலவகைச் செல்வங்களும் நிறைந்து விளங்கவும் திருவருள் புரிதல் வேண்டும்'' என்பது, இப்பாடலின் திரண்ட பொருள், இப்பாடலின்கண் ''ஓங்கி உலகளந்த உத்தமன்'' என்று போற்றப் பெறு பவன், வாமனனாகிய திருக்குறளனேயாகும்.

மூர்த்தியின் கீர்த்தி :

திருமாலின் கூருகிய திருக்குறளனின் சிறப்பு எல்லையற்றது. அவனது மூர்த்தி சிறிய தாயினும் கீர்த்தி பெரியதாகும். ''உருவு கண்டு எள்ளாமை வேண்டும்'' என்னும் உண்மையை உணர்த்துதற்குத் திருக்குறளனே, சிறந்த எடுத்துக் காட்டாவான். இப்பெருமானது சிறப்பினை, ஆசிரியர் திருவள்ளுவரும் ''மடி யிலா மன்னவன் எய்தும் அடியளந்தான் தாஅயது எல்லாம் ஒருங்கு'' என்புழி, வியந்து புகழ்ந்தார். இவ்வாறே முத்தமிழ்ப் புலமை வித்தகராகிய இளங்கோவடிகளும், ''மூவுல கும் ஈரடியால் முறை நிரம்பா வகைமுடியத் தாவிய சேவடி'' எனச் சிலப்பதிகாரத்தில் இம் மூர்த்தியின் கீர்த்தியைச் சிறந்தெடுத்துப் போற்றியருளினர்.

(1) ஓங்கி உலகளந்த :

''ஓங்கி உலகளந்த உத்தமன்'' எனவரும் திருப்பாவையின் சிறிய தொடர்தானே, இவர் தம் பெரிய சிறப்பினை நுண்ணிதின் உணர்த்த வல்லதாக உள்ளது. (1) 'ஓங்கி உலகளந்த' என்றதனால், இவ்வளர்ச்சிக்கு முன்னர்க் குறுகி யிருந்த தன்மை (வாமனத்துவம்), சுட்டப்பெறு கின்றது. (2) பனித்துளி பட்டுச் சாய்ந்த மூங்கில், ஞாயிற்றின் கதிர்கள் பட்ட அளவிலே நீண்டு வளர்ந்து நிற்குமாபோலே, இவனும் ஓங்கி வளர்பவன் ஆனான். (3) மாவலியின் பால் சென்று இரக்க நேர்ந்த இழிவை உணர்த்துவான்போல், தன் பெருமை எல் லாம் குன்றக் குறுகி நின்று, குறள் (குள்ளன்) எனத் தோன்றினான். (4) இரக்கப்புக்க அள வில் குறளனாகத் தோன்றியவன், இரப்பு வாய்த்த நலத்தினால் ஓங்கி வளர்ந்தான். (5) பிறர்நலம் கருதிய செயலைச் செய்த மனநிறை வால் ஓங்கி வளர்ந்தான் எனினுமாம். (6) அன்றியும் நல்லார் பொல்லார் என்னும் வேறு பாடு கருதாமல் அனைத்துயிர்களின் மாட்டும் கொண்ட அருளால், தன் திருவடிகளை அவை யிற்றின் தலைகளில் எல்லாம் வைத்து ஆட் கொண்ட பெருந்தகைமையால், ஓங்கி வளர்ந் தான் எனினுமாம்.

(7) உறங்குகின்ற குழந்தையை அணைத் துக்கொண்டு கிடக்கும் தாயைப்போல, அனைத் துயிர்களையும் அருளால் அணைத்துக் கொண்டு, அவ்வாற்றால் எய்திய மகிழ்ச்சிப் பெருக்கினால் வாமனன் ஓங்கி நின்றான். (8) எவரையும் வரைந்து விலக்காத வள்ளன்மையினாலும், மனித நிலைக்கு மேற்பட்ட அற்புதப் பெருஞ் செயல்களாலும், வடிவழகின் மிகுதியினாலும், வாமனன் கண்ணபிரானுக்குச் சமமானவன். (9) இறைவனின் உடைமையாகிய மூவுலகங் களையும் தன்னது என்று எண்ணிக் கொண்டு தருக்கியிருந்த மாவலியின்பாலும், குணங் கண்டு உவந்துசென்று, தன் உடைமையாகிய மூவுலகத்தையும், அவன்தரத் தான் பெற்றுக் கொண்டதுபோல் நடித்து, அவ்வாற்றால் தான் இரவலனாகி அவனைப் புரவலனாகச் செய்து சிறப்பித்த பெருந்தகைமையாலே, குறளாய் நின்றவன் ஓங்கி வளர்ந்த நுட்பம் உணர்தற் குரியது.

(10) பண்டு எவர்மாட்டும் கொடுத்த லன்றி, இரந்துபழக்கம் இல்லாதவன் ஆதலின் ''கொள்வன்நான் மாவலி'' என்றும், ''நிலம் மாவலி மூவடி'' என்றும், சொற்கிடக்கைமுறை தடுமாறக் கூறிக் குறளாக நின்றவன், இரந்த தனைப் பெற்ற ஏற்றத்தால் ஓங்கி உலகளந்து நின்றான் எனவும், இனிய இத்தொடருக்குப் பலவகைகளிற் கருத்துக் கொள்ளலாம்.

(2) உத்தமன் :

திருக்குறளனாகிய வாமனன் 'உத்தமன்' என இங்குப் புகழ்ந்தோதப்படுகின்றான். உலக மக்கள் அனைவரையும் தலை இடை கடை என மூவகையாகப் பகுக்கலாம். பிறரைத் துன் புறுத்தித் தன் வயிற்றை வளர்த்து வாழ நினைப்பவன் கடையாயவன் (அதமன்). பிறரும் வாழ நாமும் வாழ்வோம் என்று கருதியிருப்ப வன் இடையாயவன் (மத்தியமன்). தன்னை அழித்துக்கொண்டாயினும் பிறரை வாழ்விக் கும் தன்மையுடையவன் தலையாயவன் (உத்த மன்). பிறர் வாழ்தற்பொருட்டு, தான்

இரப்பு என்னும் இளிவரவை மேற்கொண்ட வன் ஆதலின், வாமனன் உத்தமன் ஆயினன். அன்றி உலக மக்களுக்குத் தான் ஒரு பேருதவி செய்தானாகக் கருதிக்கொள்ளாமல், இங்ஙனம் செய்ததனைத் தனக்கு ஒரு பேருகக் கருதி மகிழ்ந்த இயல்பினன் ஆதலின், உத்தமன் எனப்பட்டவன் எனினுமாம்.

(3) உத்தமன் பேர்:

'உத்தமனைப் பாடி' என்னுமல், 'உத்தமன் பேர் பாடி' என்றது, கருதி மகிழற் பாலது. உத்தமனைப் பாடுதலினும், உத்தமன் பேர் பாடுதல் சிறப்பு என்பது கருத்து. இறைவனையும் பிறரையும் கருதுங்கால், பிறரைவிட இறைவன் எத்துணை மேம்பட்டவனே, அத்துணையளவுக்கு இறைவனையும், அவன் பேராகிய திருநாமத்தையும் கருதலுறின், இறைவனையும்விட அவனது திருநாமம் மிக்க பெரும் சிறப்புடையதாகும். கட்டிப் பொன்போலே அவன்: பணிப்பொன்போலே அவனது திருப்பெயர். இறைவனை இல்லை என்று சொல்லி மறுப்பவர்களும்கூட, நோய் முதலிய இடர்ப்பாடுகள் நேர்ந்தவழி, இறைவனின் திருநாமம் ஓதினுல் உய்தல்கூடும் என எவரேனும் பணிப்பின், அதனை விரும்பி மேற்கொண்டு கடைப்பிடிப்பர். தாய்க்கொலை புரியும் கொடியவனும் கைநொந்தால் அம்மே என்று தன்னை அறியாது சொல்லி நிற்பன். அதுபோன்று இறையுண்மை மறுப்பவரும், நோயும் துயரமும் எய்தினுல், இறைவனின் திருப்பெயர் சொல்லும் வாய்ப்பு நேரப் பெறுவர். இறைவனை அடைவதற்குப் பலவகைத் தகுதிகள் வேண்டும். ஆனுல், இறைவனது திருப்பெயரைச் சொல்லுகைக்கு ஒரு தகுதியும் வேண்டுவதில்லை; எத்தகுதியும் இல்லார்க்கும் இறைவனின் திருப்பெயர் ஓதுதலே, எல்லாத் தகுதிகளையும் உண்டாக்கிக் கொடுக்கும். இறைவன் தூரத்தன் ஆனுலும், அவனது திருப்பெயர் நமக்கு எளிதிற் கிட்டி நின்று நனிமிக உதவும்.

(4) பேர்பாடி:

'பேர் சொல்லி' என்னுமல் 'பேர் பாடி' என்ற நுட்பமும் கருதற்குரியது. கருதியுணரவும் எட்டாத இறைவனின் குணநலங்களையெல்லாம், எளிதின் இனிதின் உணர்த்தும் திருப்பெயரை நாம் அன்புற்று விரும்பிச் சொல்ல வேண்டும் என்பதும், அங்ஙனம் சொலப்புக்க அளவில், அது தேனும் பாலுமாய்த் தித்தித்துத் தன்னை அறியாமலே இன்னிசை மிக்க பாட்டாக வெளிப்பட்டுப் பாடுவோர் கேட்போர் ஆகிய அனைவரையும் இன்புறுத்தும் என்பதும், இதனுல் உணர்த்தப்படுகின்றன.

இங்ஙனம் மொழிக்கு மொழி தித்திப்பாக ஒவ்வொரு சொல்லும் சொற்றெடரும் சுவை நிறைந்து பெருக்கெடுக்கும் இத் திருப்பாவைச் செய்யுளின் நுண்பொருள் நலங்கள் பலவும், எண்ணி எண்ணி உணர்ந்து இன்புறுதற்குரியன. இப்பாடலில் மேலும் எத்தனையோ பல நுண்பொருள்கள் எண்ணியுணர்தற்குரியனவாக அமைந்திருக்கின்றன. தொட்டனைத்தூறும் மணற்கேணி போல, இப்பாடல் கற்றனைத்தூறும் கருத்துப் பெருக்கம் மிக்குடையதொன்ருகத் திகழ்கின்றது. இப்பாடல் முழுவதுமே: ஞானசிரியரின் பெருமையை விரித்துரைத்து உணர்த்துவதாகப் பெரியோர்கள் விளக்குவர்.

(5) ஞானசிரியன்:

'ஓங்கி உலகளந்த உத்தமன்' என்பது, ஞானசிரியனைக் குறிக்கும். *(1)* ஆசிரியர் இறைவனைக் காட்டிலும் மேம்பட்டவர். எனவே, ஓங்கி என்பது இறைவனைக் காட்டிலும் மேம்பட்டு என்றும், உலகளந்த என்பது உலகத்துப் பொருள்களின் இயல்புகளையெல்லாம் ஆராய்ந்தளந்து அறிந்த என்றும்; உத்தமன் என்பது தலை சிறந்தவன் என்றும் பொருள்படும். *(2)* திருமாலாகிய எம்பெருமான், பல பிறவிகள் எடுத்தும் உலக மக்களைத் திருத்தமுடியாமல், 'மூடர்கள் என்னை அவமானப்படுத்துகின்ருர்கள்' (அவஜாநந்தி மாம் மூடா) என்று, கீதையில் தானே வாய்விட்டுக் கூறிக் கண்ணீர் பெருக்கி வருந்தி நின்ருன். ஆனுல், நம்மாழ்வார் இராமாநுசர் போன்ற ஞானப் பெருஞ்சான்ருேர்கள் தோன்றி, உலகைப் பெரிதும் திருத்தியருளினுர்கள். இதனுல் இறைவனிலும் ஞானசிரியன் சிறந்தவனுதல் தெளிவு. *(3)* இறைவன் 'என்னை வணங்கு, என்னைத் துதி' என்று சொல்லித் தன் பெருமையைப் பேசுவான். ஆனுல், ஞானசிரியனே ''திருநாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்து உய்மினே'' என்று இறைவனின் பெருமையைப் பேசி நலம் புரிவான். *(4)* அன்றியும் எம்பெருமான்தானே இராமன் கண்ணன் எனத் தோன்றியருளிய பொழுது, முறையே வசிட்டர், சாந்தீபினி என்னும் ஆசிரியர்களை அடுத்துப் பணிந்து நின்ருன். *(5)* மேலும் இறைவன் கொள்பவன்; ஆசிரியன் கொடுப்பவன். கொள்பவனிலும், கொடுப்பவனே மேலானவன். இன்னேரன்ன பல காரணங்களாலும், ஆசிரியன் எம்பெருமானைவிடச் சிறந்தவனுவான். இத்தகைய உத்தம ஆசிரியர்களுடைய திருப்பெயர் ஓதுதலே, நமக்கு எல்லா நலங்களையும் தரும் என்பது, சான்ருேர்கள் கண்ட அனுபவம். "தெளிவு குருவின் திருப்பெயர் செப்பல்'' என்பர், திருமூலர்.

(6) குருபக்தி:

இதன்படி, இங்குப் பாவை என்பது ஞானசிரியனைப் போற்றுதலாகிய நோன்பைக் குறிக்கும். மதுரகவிகள், நம்மாழ்வாரையே போற்றி உய்ந்தார்! இராமாநுசரையும் கூரத்தாழ்வானையுமே குருவாகக் கொண்டு உய்ந்தார், திருவரங்கத்து அமுதனுர்! இத்தகைய சிறந்த குருபக்தியே, ''நம் பாவை'' என இங்குக் குறிக்கப்பெற்றது. நீராடுதல் ஆவது, நல்ல மரபு நெறியில் ஈடுபட்டுப் பணிபுரிந்து ஒழுகுதல். குருபக்தியினுல், நாடெல்லாம் தீங்கின்றி நலம் பெருகும் என்பது திண்ணம். ஈண்டு மும்மாரி பெய்து என்பது, திருமந்திரம் உபதேசித்தல், தத்துவ சாத்திரங்கள் போதித்தல், சிந்திக்க வைத்துத் தெளிவுறுத்தல் என்னும் குருவின் செயல்கள் மூன்றையும் குறிக்கும்.

செந்நெல் :

''ஓங்கு பெரும் செந்நெல்'' என்பது உயிரைக் குறிக்கும். நெல்லானது, உமியும் தவிடும் கூடியிருக்கும். அதுபோல, உயிரானது பருவுடலுடனும், நுண்ணுடலுடனும் கூடியிருக்கும். ஆதலின் சீவான்மாகிய உயிர், செந்நெல் எனப் பட்டது. செந்நெல் கதிர் முதிர்ந்தால், தாள் சாய்த்துத் தலை வணங்கும். அதுபோல, ஆசிரியன் அருளால் பக்குவம் மிக்க அடியார்களும், பணிவும் அடக்கமும் உடையவராய் ஒழுகுவர். கயல் என்பது கண்ணைக் குறிக்கும். ஓங்கு பெரும் செந்நெல் ஊடு கயல் உகளுதல் என்பது, பக்குவம் ஓங்கி வரும் அடியார்களின் பொருட்டு ஆசிரியன் திருக்கடைக் கண்நோக்கம் பாலித்தலைக் குறிக்கும். ''பூங்குவளைப்போது'' என்பது திருமகளின் திருவருள் (இலட்சுமி கடாட்ச) நலனைக் காட்டுகின்றது. 'பொறிவண்டு கண் படுப்ப' என்னும் தொடரில் வண்டுகள் என அடியார்கள் குறிக்கப் பெற்றனர். வண்டுகள் தேனை உண்டு மகிழும். அதுபோல அடியவர்கள் திருவருளை நுகர்ந்து இன்புறுவர். வண்டுகள் குவளைப் போதில் கண்படுதல், அடியார்கள் கவலையின்றித் திருவருள் துணையினால் இன்புற்று வாழ்தலைக் குறிக்கின்றது.

வள்ளற் பெரும் பசுக்கள் :

'வள்ளற் பெரும் பசுக்கள்' என்பது ஞானாசிரியர்களைக் குறிக்கின்றது. (1) கைம்மாறு கருதாமல் ஞானப் பெருஞ் செல்வத்தை வாரி வழங்குபவராதலின், ஆசிரியர்கள் வள்ளல் எனப்பட்டனர். (2) பசுக்கள் பதினன்கு உலகங்களையும், பற்பல தேவர்களையும் தம்முள் அடக்கிக் கொண்டிருக்கும். அதுபோல ஞானாசிரியர்கள் பதினன்கு வித்தைகளையும் தம் உள்ளத்தில் நிறைத்துக்கொண்டு, தெய்விக நலம் ஓங்கியிருப்பர். (3) பசுக்கள் ஆனைந்து எனப்படும் பஞ்ச கவ்வியங்களைத் தரும். அது போல ஆசிரியர்கள் அர்த்தபஞ்சகம் என்னும் அரும் பொருள்கள் ஐந்தும் உணர்த்துவர். (4) பசுக்கள் தமது மடியில் நான்கு காம்புகளாலும் பால் சுரக்கும். அதுபோல, இம் மாணவர்களை உய்விப்பது நமக்கு இறைவனின் அருளாணை என்னும் உணர்வு; மாணவர்கள் வணங்கி விரும்பி வேண்டிக் கொள்ளுதல்; மாணவர்கள் கேளாவிடினும் அவர்களின் அறியாமை நோய் கண்டு பொறுக்க மாட்டாமை; தாமுணர்ந்த ஞானப்பொருள்களைப் பிறருக்குப் போதித்தன்றித் தரிக்கமாட்டாமை என்னும் நான்கு காரணங்களாலும், ஞானசிரியர்கள் தமது ஞானமாகிய பாலைச் சொரிவர். (5) இங்குக் 'குடம்' என்றது, தகுதியுள்ள நல்ல மாணவர்களை! குடம் நிறைத்தலாவது, அம்மாணவர்களைத் தம்மோடு ஒப்ப ஞான அநுபவநல நிறைவுடையவர்களாகச் செய்தல். (6) நீங்காத செல்வம் என்றது, ஆன்மிக ஞானத்தையும், அன்பின் மிகுதி ஆகிய பக்திப் பெருக்கத்தையும் ஆகும். அவையிற்றினும் மிக்க சிறந்த விழுமிய பெருஞ்செல்வம் பிறிது எதுவும் இல்லையன்றோ!

முடிவுரை :

''திருக்குறள்'' என்னும் வாமனவதாரம் பற்றிய குறிப்பு வரும் திருப்பாவைச் செய்யுள் ஆகிய ''ஓங்கி உலகளந்த உத்தமன்'' எனத் தொடங்கும் பாடலின் பொருளை, இங்கு ஒரு சிறிது ஆராய்ந்து கண்டுணர்ந்தோம். இத்தகைய சிறந்த இனிய முப்பது பாடல்களைக் கொண்டது திருப்பாவை. ஆதலின், திருப்பாவை ஆகிய சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே, இங்கு இப் பரிசு உரைத்து (ஓதி), நாம் அனைவரும், ஈரிரண்டு மாவல்வரைத்தோள் செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் எங்கும் திருவருள் பெற்று, இன்புற்று வாழ்வோமாக!

கிரேக்க நாட்டுத் திருமால் அடியார்

பண்டைக் காலத்தில் நம் இந்திய நாட்டுக்கும், கிரேக்கம், இத்தாலியம் முதலிய மேலை நாடுகளுக்கும், சமயம் தத்துவம் கலாச்சாரம் வணிகம் அரசியல் ஆகிய துறைகளில், மிக்க நெருக்கமும் தொடர்பும் நிலவி வந்தன. இவ்வுண்மையை விளக்கும் சான்றுகள் பல, நமது இலக்கிய நூல்களிலும், வரலாற்று நூல்களிலும் காணப்படுகின்றன.

'ஈலியோடெரஸ்' (Heliodoros) என்பவர், கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர். அவர் சுங்க வம்சத்து அரசர்களுள் ஒருவரான காசிபுத்திர பகபத்திர சுங்கர் என்னும் அரசரின் ஆட்சியில், ஆண்டியால்கிடாஸ் (Antialkidos) என்னும் கிரேக்க நாட்டு அரசரின் தூதுவராக வந்து, தட்சசீலத்தில் வாழ்ந்து வந்தவர். இவர் கிரேக்க நாட்டவராக இருந்த போதிலும், வைஷ்ணவராக மாறித் திருமால் அடியாராக விளங்கி வந்தார். குவாலியர் மாநிலத்தில், பெஸ்நகர் (Besnagar) என்னுமிடத்தில், ஒரே கல்லினால் செய்யப்பட்ட கருடத் தம்பம் ஒன்று இவரால் நாட்டப் பெற்று, இன்றும் விளங்கி வருகின்றது.

அதன்கண், ''இது தேவர்களின் கடவுள் தலைவராகிய வாசுதேவருக்கு திருமாலை வழிபடுகின்றவரும், டியோன் (Dion) என்பவரின் புதல்வரும், தட்சசீலத்தில் வாழ்பவரும், ஆண்டியல்கிடாஸ் (Antialkidos) என்னும் பேரரசரின் தூதுவராகக் காசிபுத்திர பகபத்திரரின் பேரவைக்குப் போந்திருப்பவரும் ஆகிய ''ஈலியோடொரஸ்'' என்பவரால் நாட்டப் பெற்றதாகும்'' எனச் செதுக்கப் பெற்றுள்ளது. இதனைப் பேராசிரியர் ராப்சன் (Prof. Rapson) என்பவர், தம்முடைய ''பழைய இந்தியா'' (Ancient India) என்னும் நூலில், சிறப்புற எடுத்துக் குறித்துள்ளார்.

இப்பழம் பெரும் நினைவுச் சின்னத்தினால், வைஷ்ணவத்தின் பழமையும் பெருமையும் புலனாவதுடன், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்திய நாட்டு மக்கள் கிரேக்கம், எகிப்தியம் முதலிய பிற நாட்டு மக்களுடன் கொண்டிருந்த சிறந்த பெரும் தொடர்புகளும் வெளிப்படுகின்றன. இதனால் ''ஈலியோடொரஸ்'' என்னும் கிரேக்க நாட்டுத் தூதுவர், ஒரு பெருந்திருமால் அடியாராகச் சிறந்து திகழ்ந்தமை தெளியலாம்.

—ஆசிரியர்

திரு அருட்பாவில் சொல் ஓவியங்கள்



[தவத்திரு ஊரன் அடிகள்]

திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள், தாம் அருளிச் செய்த திருவருட்பாவுள் சில சொற் சித்திரங்களை நமக்குக் காட்டுகிருர். அவற்றுள் இரண்டினை இங்குக் காண்போம்.

பகுதி தகுதி விகுதி எனும் பாட்டில்
இகலில் இடையை இரட்டித்—தகவின்
அருச்சித்தால் முன்னும்அது கடையாம் கண்டீர்
திருச்சிற் சபையானைத் தேர்ந்து

இது ஒரு வெண்பா. இதனுள் சொல்லழகும் பொருளழகும் பொதிந்து கிடக்கிறது. பகுதி தகுதி விகுதி என்னும் சொற்களின் இடையெழுத்தை இரட்டித்துத் திருச்சிற்சபையானைத் தகவுடன் அருச்சித்தால், அச்சொற்களின் கடையெழுத்துக்கள் சேர்ந்த முதலெழுத்துக்களின் தொகுதி கிடைக்கும் என்பது இதன் பொருள். இப்படி நோக்கின் விளங்காது. சற்றே விளங்கக் காண்போம்.

பகுதி தகுதி விகுதி:

மூன்றும் மூன்று சொற்கள். மூன்று சொற்களும் மும்மூன்று எழுத்துக்களால் ஆனவை. மூன்று சொல்லிலும் இடையெழுத்து—நடுவெழுத்து—'கு' என்பதே. சொல்லுக்கு ஒவ்வொன்ருக மூன்று சொல்லிலும் மூன்று 'கு' உள்ளன. மூன்று 'கு' வை இரட்டித்தால் 3 X 2 6–அறுகு ஆகும். அறுகு என்பது அறுகம் புல். அறுகம் புல்லைக் கொண்டு திருச்சிற் சபையானை அருச்சிக்க வேண்டும். அருச்சனையின் பயன் அம் மூன்று சொற்களின் முதலெழுத்துக்களுள் அடங்கி இருக்கிறது. பகுதியின் முதலெழுத்து 'ப'. தகுதியின் முதலெழுத்து 'த'. விகுதியின் முதலெழுத்து 'வி'. மூன்றின் முதலெழுத்தும் சேர்ந்தால் ப, த, வி—பதவி என்று ஆகும். அறுகினல் அருச்சித்தால் பதவி கிடைக்கும். என்ன பதவி கிடைக்கும்? இதற்கு விடை கடையெழுத்துக்களில் அடங்கிக் கிடக்கிறது. மூன்று சொற்களுக்கும் கடைசி எழுத்து, 'தி' என்பதே. மூன்று 'தி' சேர்ந்தால் முத்தி. ஆதலின் முத்திப் பதவி கிடைக்கும்.

பகுதி, தகுதி, விகுதி என்ற மூன்று சொற்களின் முதலெழுத்துக்களைக் கூட்டினல் பதவி, கடையெழுத்துக்களைக் கூட்டினல் முத்தி, இடையெழுத்துக்களை இரட்டித்தால் அறுகு என்று அமைவதே இதிலுள்ள நயம். திருச்சிற்சபையானை அறுகினல் அன்போடு அருச்சித்தால் முத்திப் பதவி கிடைக்கும் என்பது கருத்து.

இப்போது இன்னெரு முறை பாடலைப் படியுங்கள். பொருள் கிடைக்கும்.

அடுத்து இன்னெரு வெண்பாவுக்குப் போவோம்.

"தாதாதா தாதாதா தாக்குறைக்கென்
செய்குதும்யாம்?
தாதாதா என்றுலகில் தான் அலைந்தோம்—
போதாதா
நந்தா மணியே நமசிவா யப்பொருளே
எந்தாய் எனப்புகழவே''

இப்பாடலுள் 'தா' என்ற எழுத்து பல முறை வருகிறது. 'தா' என்பது ஓர் எழுத்து. அதுவே ஒரு சொல்லும் ஆகும். சொல்லாக ஆகும்போது கொடு என்று பொருள் படும். தமிழில் ஓர் எழுத்தே சொல்லாக நின்று பொருள் தருவதை ஓரெழுத்தொரு மொழி என்பர். எடுத்துக் காட்டாகச் சில வருமாறு :

ஈ : ஓர் எழுத்து—கொடு, தா என்று பொருள்படும் ஒரு சொல்—ஈயின் பெயர்.

பா—ஓர் எழுத்து—பாட்டு என்றுபொருள் படும் ஒரு சொல்.

ஆ—ஓர் எழுத்து — பசுவின் பெயர்.

இனி 'தா' பலகாற் பயின்று வரும் மேற் பாடலுக்குச் செல்வோம். 'தா தா தா தா தா தா தாக் குறைக்கு என் செய்குதும் யாம்' என்பது பாட்டின் முதல் அடி. இதில் வரும் 'தா' எழுத்துக்களை எண்ணிப் பாருங்கள். ஏழு 'தா' இருக்கும். ஏழு 'தா' வையும் சேர்த்தால் எழுதா என்ருகும். இப்போது முதல் அடியைப் படியுங்கள். எழுதாக் குறைக்கு என் செய்குதும் யாம்—என் தலைமீது ஆண்டவன் எழுதாத குறைக்கு என்ன செய்வோம்? என்பது பொருள். பாடலின் இரண்டாம் அடி 'தா தா தா' என்றுலகில் தான் அலைந்தோம்—போதா தா' என்பது. இதன் முதலில் மூன்று 'தா' வருகிறது. முதல் இரண்டு 'தா'வும் ஒரு சொல். தாதா என்னும் அச்சொல் வள்ளல் எனப் பொருள்படும். மூன்ருவது 'தா' ஒரு தனிச்சொல். ஓரெழுத்தொரு மொழி. கொடு என்று பொருள் படுவது. தாதா, தா என்பது வள்ளலே கொடு என்று பொருள்பட்டு நிற்கும் நயம், மிக்க அழகிது. இரண்டாம் அடியில் கடைசியிலுள்ள தனிச் சொல்லாகிய போதாதா என்பதிலும் இரண்டு 'தா'க்கள் வந்துள்ள அருமையை என்னென்பது! பாடலின் பின் இரண்டு அடிகளும் இறைவனைப் போற்றுவதாகும். அவற்றிற்குப் பொருள் விரித்தல் ஈண்டு தேவையன்று. பாட்டை இன்னெரு முறை படியுங்கள். பொருள் விளங்கும்.

தாதாக்களே தாருங்கள் என்று கேட்டுக் கேட்டு உலகில் அலைந்து திரிந்தோம். திரிந்தது போதாதா? என் தலைமீது எழுதாக் குறைக்கு என்செய்வோம்? அரிய பெரிய கருத்துக்களை இவ்வாறு சொற்சித்திரங்களாக அருளுகின்ருர் வள்ளற் பெருமான். திருவருட்பாவுள் திளைத்தால் இவை போல் இன்னும் பல காணலாம். *

மாறன் அடிபணிந்து உய்ந்த இராமாநுசர்

திரு. A. R. பார்த்தசாரதி நாயுடு அவர்கள்
(சென்னை 52-ஆம் ஸ்ரீவைணவ மாநாட்டின் தலைவர்)

(முற்றொடர்ச்சி)

தடையாகித் தொக்கியலும் ஊழ்வினை:

தக்க நெறியை நாம் அடைவதற்கு உலக ஆசைகளே நமக்குத் தடை! இத்தகைய தடைகள் ஒன்றை ஒன்று பின்னிக் கிடக்கின்றன! ஒன்று மற்றொன்றையதற்கு வழிகாட்டி. இந்தத் தடைகள் விதிவசத்தாலே நம்மை வந்து அடைகின்றன. இத் தடைகளாகிய படு குழியிலே வீழ்ந்து தவிக்கின்ற நம் ஆவியை-ஆன்மாவை, கைகொடுத்துத் தூக்கிக் காப்பாற்றி அருளியவர் நம் இராமாநுசர். எப்படிக் காப்பாற்றினார்?

''திருமகள் கேள்வனாகிய திருமால்தான் நமக்கு, நம்முடைய எல்லோருக்கும் நாயகன்! அவன் எல்லாப் பாவங்களையும்-முற்பிறப்பில் செய்தவைகளையும், இப்பிறப்பில் செய்பவைகளையும்-இனியும் செய்ய இருப்பவைகளையும் அகற்றித் தூய்மை அளித்தருள்வான்'' என்று உபதேசித்துக் காத்தருளினார். போயபிழையும் புகுதருவான் நின்றனவும் நமது இறைவனுடைய அருளாகிற தீயினில் தூசாகும்.

ஆயிழையார் கொங்கை தங்கும்
　அக் காதல் அளற்றழுந்தி
மாயும்என் ஆவியை வந்து
　எடுத் தான்இன்று, ''மாமலராள்
நாயகன் எல்லா வுயிர்கட்கும்
　நாதன் அரங்கன்!'' என்னும்
தூயவன் தீதில் இராமா
　நுசன்தொல் அருள் சுரந்தே'.

வாழ் வினை:

பூரண வாழ்வு புகழுடைய வாழ்வு நான்கு சேர்ந்ததாகும். அந்த நான்கும், அறம் பொருள் இன்பம் வீடு என்பவையாகும். இவையே புருஷார்த்தங்கள். அதாவது புருஷர்கள் அடையத் தக்கவைகள். இன்பம் என்பதைச் சிற்றின்பமே எனப் பலர் தவறாகப் பொருள் கொண்டனர். ''மூவடிமண் தா'' என்று வாமனன் கேட்டபோது, குறுகிய பொருள் கொண்ட மாவலிச் சக்கரவர்த்தியைப் போல.

இன்பம் என்பது பேரின்பமே. இன்பத்தை-நமது காமத்தை-விருப்பத்தை-ஆசையைக் கண்ணனிடம் செலுத்துகையில், அது பேரின்பமாகப் பரிணமிக்கிறது. ''இப்படிக் கண்ணனை அடையப்பெறும் காமத்திற்கு—பேரின்பத்திற்கு உதவுபவையே; ''அறம், பொருள் வீடு'' என்று விளக்கம் தந்தருளினார் நம் இராமாநுசர். இவ்விதமான உயர்ந்த பொருளைக் காட்டியருளியபோது, ஓங்கி உலகளந்த உத்தமனான திரிவிக்கிரமப் பெருமாளாக சேவை தருகிறார் நம் இராமாநுசர்.

கண்ணனாகிய இறைவனை அடைந்து நாம் பெறும் பேரின்பத்திற்காகவே அறம் பொருள் வீட்டைப் பயன்படுத்த வேண்டும். இவ்விதமாக அறம் பொருள் வீட்டைப் பயன்படுத்திக் கண்ணனிடம் பெறும் பேரின்பமே வைணவர் தம் வாழ்வாகும்.

சேமநல் வீடும், பொருளும்,
　தருமமும், சீரியநற்
காமமும் என்றுஇவை நான்கென்பர்,
　நான்கினும் கண்ணனுக்கே
ஆமது காமம்; அறம்பொருள், வீடு
　இதற்கு என்று உரைத்தான்
வாமனன் சீலன் இராமா
　நுசன் இந்த மண்மிசையே!

குழலின் மலியச் சொன்ன, யாழின் இசை வேதத்து இயலான நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழியைச் சேவித்த இராமாநுசர் அடைந்த நிலையைச் சேவிக்கலாம். இராமாநுசருக்குத் திருவாய்மொழி அனுபவத்தாலே, ஆனந்த பரவசமாகி, பத்திக்கன்ன மதமும், கபோலமதமும் பெருகிவழிய ஆரம்பித்தனவாம். நம்மாழ்வார் அருளிய, இருக்கு வேதத்தின் சாரமான திருவித்தத்தையும், யசுர் வேதத்தின் சாரமான திருவாசிரியத்தையும், அதர்வண வேதத்தின் சாரமான பெரிய திருவந்தாதியையும், சாந்தோக சாமவேதத்தின் சாரமான திருவாய்மொழியையும் சேவித்து மனத்துள் தேக்கிக்கொண்ட இராமாநுசர்.

பெருகுமத வேழமானார்:

இந்த இராமாநுசமுனி வேழம், வேதத்தைத் தண்டமாகப், பிறமதத்தைத் தாக்கும் போர்க்கருவியாகத், தம்மதத்தைக் காக்கும் படைக்கலமாக ஏந்திக் கொண்டு எழுந்தருளியதாம். பலன் குதர்க்கவாதியர்களுடைய வாழ்வு அற்றுவிட்டது. இதோ இந்த இராமாநுச முனிவேழத்தைச் சேவிக்கலாம்.!

பண்தரு மாறன் பசுந்தமிழ்
ஆனந்த மாய்மதமாய்
விண்டிட எங்கள் இராமா
நுசமுனி வேழம், மெய்மை
கொண்டநல் வேதக் கொழுந்தண்டம்
ஏந்திக் குவலயத்தே
மண்டிவந் தேன்றது! வாதியர் காள்!
உங்கள் வாழ்வற்றதே!

மாறன் பணித்த நான்மறைக்கு, ஆற கூற அவதரித்த திருமங்கை மன்னன் அருளிய ஆறு பிரபந்தங்களையும் சேவித்து மனத்து தேக்கிக்கொண்ட எம்பெருமானர், வேழத் திற்கும் வேந்தனை சிங்கமாகவே மாறிப் பிறசமயப் புலிகளை அடக்கினர்!

கலிமிக்க செந்நெல் கழனிக்
குறையல் கலைப் பெருமான்
ஒலிமிக்க பாடலை உண்டு, தன்
உள்ளம் தடித்து, அதனல்
வலிமிக்க சீயம் இராமாநுசன்
மறைவாதி யராம்
புலிமிக்கது என்று இப்புவனத்தில்
வந்தமை போற்றுவனே!

பொய்யில்லாத நம் மணவாள மாமுனிகள் தமது ஆர்த்திப் பிரபந்தத்தில் நம் இராமா நுசமுனி வேழத்திற்கு, சீயத்திற்கு விருது கட்டி, வாழிகூறி, வெற்றி முழக்கம் செய் வதையும் சேவிக்கலாமே!

சாறு வாகமதம் நீறு செய்து, சம
ணச்செ டிக்கனல் கொளுத்தியே,
சாக்கி யக்கடலை வற்று வித்து, மிகு
சாங்கி யக்கிரி முறிந்திட,
மாறு செய்திரு கணாத வாதியர்கள் வாய்தகர்த்து
அறம் மிகுத்துமேல்,
வந்த பாசுபதர் சிந்தை யோடும்வகை
வாது செய்த எதிராசனர்,
கூறு மாகுரு மதத்தொடு ஓங்கிய குமாரி
லன்மதம் அவற்றின்மேல்
கொடிய தர்க்கசரம் விட்டபின், குறுகி
மாய வாதியரை வென்றிட!
மீறி வாதில்வரு பாக்க ரன்மதம் விலக்கடிக்
கொடி எறிந்துபோய்!
மிக்க யாதவ மதத்தை மாய்த்தபெரு வீரர்
நாளும் மிகவாழியே!

நம்மாழ்வார் அருளிய உபதேசம் :

அளவில்லாத எண்ணிக்கையை உடைய தும், ஞானம் ஆனந்தம் அடிமைப்பட்டிருத் தல் முதலான குணங்களை உடையதுமான சீவாத்மாக்களை உடலாகக்கொண்டு திகழும் முடிவில்லாத திருக்குணங்களை உடைய, நாரா யணனுடைய அடியாரை, ஒருநாளும் கைவிட கில்லாத திருவடிகளையே; நாம் தஞ்சமாக அடைந்து வணங்கவேண்டும்.

எண்பெருக்கு அந்நலத்து
ஒண்பொருள் ஈறில
வண்புகழ் நாரணன்
திண்கழல் சேரே!

பராங்குசர் பணித்ததைப் பரகாலரும் சிரமேற்கொள்ளுகிறர்! தேனும் பாலும் அமு தும் ஆய திருமால் திருநாமம்! நானும் சொன் னேன்! நமரும் உரைமின்! நமோ நாராயணமே

உரைமின் ! நமோ நாராயணமே !

பெரிய திருமந்திரமாகிய ''நாராயணாய நம'' என்னும் மந்திரத்தின் உட்பொருளை உணர்ந்து கொண்டதும், தமது உபதேசத் திற்கு ஒரு திருப்பத்தை, திருத்தத்தை அருளு கின்றர் அருள்மாரியாம் திருமங்கை மன்னர். பெரிய திருமந்திரத்திற்குள்ளே அறியவேண்டும் அர்த்தம் எல்லாம் உண்டு. அதாவது அர்த்த பஞ்சக ஞானமும் உண்டு. ஆனல் முடிவாகத் தெரிந்து கொள்ள வேண்டிய சிறப்பு அர்த்தம் வேறு. அதாவது: ''நாராயணாய'' என்று இறைவன் திருவடிகளிலே அடிமைப்பட்டுக் கிடப்பவர்களுடைய திருவடிகளிலே, ''நம'' என்று நாமும் அடிமைப்பட்டு இருக்கவேணும்! பகவத் சேஷத்துவம் முற்றவும், பாகவத சேஷத்துவம் சித்திக்கும்! இனி நாராயணன் தவிர மற்றொரு தெய்வம் உண்டென்பார் களுடன் உறவும் கூடாது!

மற்றும் ஓர் தெய்வம் உளது
என்று இருப்பாரோடு,
உற்றிலேன் உற்றதும் உன்
அடியார்க்கு அடிமை,
மற்று எல்லாம் பேசிலும்
நின் திருவெட்டெழுத்தும்
கற்று, நான் கண்ண
புரத்துஉறை அம்மானே'..

அறுசமயச் செடியதனை அறுத்தும்
அடர்ந்துவரும் குதிட்டிகளை யறத்துறந்தும்,
செறுகலியைச் சிறிதும் அறத் தீர்த்தும்,
மறையதனில் பொருள் அனைத்தும் வாய்மொழிந்
தும்
மாறன் உரை செய்ததமிழ் மறை வளர்த்தும்.

நம்மை வாழ்வித்தருளிய நம் இராமாநுசரது தரிசனம், ஏழ்படிகால் தொடங்கி வந்து வழி வழி ஆட்செய்யும் பாகவதர்களால் வளர்ந்து வந்தது! வளர்ந்து வருகிறது! வளர்ந்து வர வேண்டும். இப்பாகவதப் பெருமக்களின் தொண்டக் குலத்திற்கு அன்பு உண்டு, அடி தொழுது, எத்தனை சன்மம் கிடைத்தாலும் என்றும் எவ்விடத்தும் இப்பெருமக்களுக்கு ஆட்பட்டு வாழ்வதே நாம் பிரார்த்திக்க வேண்டிய பேறுகும்.'

''இன்புற்ற சிலத்து இராமாநு சா!
என்றும் எவ்விடத்தும்,
என்புற்ற நோயுடல் தோறும்
பிறந்து இறந்து எண்ணரிய
துன்புற்று வீயினும், சொல்லுவது
ஒன்றுஉண்டு, உன் தொண்டர்கட்கே
அன்புற்று இருக்கும் படிஎன்னை
ஆக்கி அங்கு ஆட்படுத்தே''

இச்சீரிய விண்ணப்பத்தைச் சிரமேற் கொண்டு, 52 ஆண்டுகளாக ஸ்ரீ வைணவ தரிசனப் பணி புரிந்து வரும் நமது ஸ்ரீவைண மகாசங்கம் பொலிக! பொலிக! என்று போற் றிக் கைகூப்பி வணங்குகிறேன்.

(முற்றும்)

"திருமால் நெறி"

திரு. சே. இராமாநுஜாசாரியார், குமாரவாடி.

திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவை மிசை
படர்பொருள் முழுதுமாய் அவைஅவை தொறும்
உடல்மிசை உயிர்எனக் கரந்து எங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவை உண்ட சுரனே

—நம்மாழ்வார்

எங்கும் பரந்து என்றும் நிலைத்துள்ள பொருளுக்குப் 'பரம்பொருள்' என்று பெயர். அப்பொருள் எல்லாவற்றைக் கடந்தும், எதனுள்ளும் கலந்தும் இருப்பதால் 'கடவுள்' என்று வழங்கப்படுகிறது. 'பரந்து உளனும் எங்கும்' என்று இப்படி வியாபித்துப் பரவி நிற்றல் பற்றி வேதம் இறைவனை 'வியாப்னோதி இதி விஷ்ணு' என்கிறது. இதே போன்று 'ஸர்வத்ர-வஸதி இதி வாஸுதேவ:' என்பதும் வேதம் கண்ட சொல்லாகும். எல்லாவிடத்தும் வசிப்பவன்-அதாவது பரவுதல், நிலைத்துநிற்றல் மட்டுமின்றி, தான் பரவியுள்ள பொருள் அனைத்தையும் தானே தாங்கி, தன் கருத்துப்படி இயக்கி, இறைவனாய் விளங்குபவன் என்ற முழுக் கருத்தையும் கொண்ட ஒரே சொல் நாராயணன் என்பது: ''தன்னுள் அனைத்துலகும் நிற்க நெறிமையால் தானும் அவற்றுள் நிற்கும் பிரான்'' என்கிறார் நம்மாழ்வார். வேதமும் வேதாந்த விளக்கமான அனைத்து நூல்களும் விவரிப்பது இதனையே.

பெயரும் வடிவமும் உள்ளது பொருள்; ஒவ்வொரு பொருளுக்கும் பெயரும் வடிவமும் இருப்பது போலவே, உயிரும் உண்டு; சொல், கல் என்று நாம் பெயர் இட்டுக் குறிப்பிடும் எந்தப் பொருளிலும் உயிர் உண்டு; உயிருக்கே உரிய அறிவும் உண்டு; ஆனால் அந்த உயிர்களை நாம் காண முடிவதில்லை; நாம் கேட்பதும் காண்பதும் பெயர் வடிவங்களை மட்டுமே; அறிதற்கு அப்பாற்பட்டு, கருதுதற்கு அரியதாய் விளங்குவது உயிர்; கருதுதற்கு அரிய உயிர்க்கும் உயிராய் விளங்குபவன் இறைவன். உயிர்களை உடையவன் இறைவன் என்பதே மறை பகரும் உண்மை.

உடல் உயிரின் பொருட்டே உள்ளதை அனுபவத்தில் அறிகிறோம்; உயிரினமாகிய நாமும், நம் உயிருக்கு உயிரான இறைவன் பொருட்டாகவே உடலுடன் படைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை ஊகித்தும் அறியலாமல்லவா? இவ்வாறு அறிந்து தெளிந்து வாழ்வதே உயிர் வாழ்வின் பயனாகும்; உண்மை உணர்வின் சிறப்பாகும்; இதுவே வேதக் கருத்தும் ஆகும்.

பெயரும் கருங்கடலே நோக்கும் ஆறு, ஒண்பூ
உயரும் கதிரவனே நோக்கும்-உயிரும்
தருமனையே நோக்கும், ஒண் தாமரையாள் கேள்வன்
ஒருவனையே நோக்கும் உணர்வு.

உண்மை உணர்வின் சிறப்பை எடுத்துக் காட்டி, உயிர் வாழ்வின் பயனைப் பெற வைக்கும் நெறியே ஸ்ரீ வைஷ்ணவம். அனுபவத்தையொட்டிய அறிவியல் வைதிக நெறி, வைணவமே.

தத்துவச் சிறப்பு :

தத்துவம் (உண்மை) ஹிதம் (நன்மை) புருஷார்த்தம் (பேறு) இம்மூன்றையும் தெளிவுறுத்துவதே ஒரு மதம், தரிசனம் அல்லது சமய சித்தாந்தமாகும்.

ஸ்ரீ வைஷ்ணவம் மூன்று தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட 'தத்துவ த்ரய' தரிசனமாகும்.

தத்துவத்ரயம் : '' சித்து '' (அறிவுள்ள ஜீவன்), ''அசித்து'' (அறிவற்ற பொருள்) ''ஈசுவரன்'' பேரறிவாளன் (பேராற்றலுள்ளவன்). இவை மூன்றும் இணைபிரியா உண்மைப் பொருள்களாகும்.

அதில் 'சித்து' மூன்று வகை : 1. 'பத்தர்' பௌதிக உடலில் கட்டுண்ட ஜீவாத்மாக்கள். 2. முக்தர் பூத உடல்நீங்கி அமர உடல்பெற்றுப் பரமபதம் என்னும் வீடுபேறு பெற்றவர். 'நித்யர்' இறைவனோடு என்றும் பிரியாது உடனுறைந்து அவனை உகப்பிப்பவர்.

அசித்து : 1. 'சத்வ சூன்யம்' (காலம்). 2. மிச்ர சத்வம்' (முக்குணம் கலசிய பொருளியல் உலகு-இயற்கை). 3. 'சுத்த சத்வம்' பரமபதம் (அறிவியல் உலகு).

ஈச்வரன் (உடையவன்) ஒருவனே! அசித்தை உடலாகக் கொண்ட உயிர்களைத் தனக்குச் சரீரமாய்க் கொண்டு தானிட்ட வழக்காய் இயக்கி வைக்கும் ஈச்வரன் ஸ்ரீமந் நாராயணனே. இதனையே.

''மேவித்தொழும் பிரமன் சிவன்
இந்திரனாதிக் கெல்லாம்
நாவிக்கமல முதற்கிழங்கு''

என்றும்;

''முதல் தனி வித்தேயோ! முழு
மூவுலகாதிக் கெல்லாம்''

என்றும்;

''தானோர் உருவே தனிவித்தாய்த்
தன்னில் மூவர் முதலாய
வானோர் பலரும் முனிவரும்
மற்றும் மற்றும் முற்றுமாய்
தானோர் பெருநீர் தன்னுள்ளே
தோற்றி அதனுள் கண்வளரும்
வானோர் பெருமான் மாமாயன்
வைகுந்தன்எம் பெருமானே''

என்று அறுதியிட்டு வைத்தார் ஸ்ரீ வைஷ்ணவத்தின் பிரதம ஆசிரியரான நம்மாழ்வார்; இறைவனால் 'மயர்வற மதிநலம்' அருளப் பெற்றவராகையால் அவர் வாக்குக்கு மறுப்புக் கூறுவாரும் உண்டோ?

சித், அசித், விசிஷ்டபிரம்மம்-''தத்வம் நாராயண; பர:'' என்கிறபடி ஸ்ரீமந்நாராயணனே என்பது ஸநாதன ஸ்ரீவைஷ்ணவ, விசிஷ்டாத்வைத வேதாந்த தரிசனமாகும்.

இதம் (நன்மை) : இறைவனை அடையும் நல்நெறிகளாகக் கர்மஜ்ஞான, பக்தி யோகங்களை வேதங்கள் நமக்குக் காட்டின. ஆனால், 'நெறி உள்ளி உரைத்த கணக்கறு நலத்தனன்'; 'நெறி எல்லாம் எடுத்துரைத்த நிறை, ஞானத்து ஒரு மூர்த்தி' யான கீதாசாரியன் கண்ணனே ''ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய, மாம் ஏகம் சரணம் வ்ரஜ'' என்று தன் திருவடிகளையே (ஆசார்யர்களையே) தஞ்சமாகப் பற்றும்படி காட்டினான். ''எம்பிரான் சரணே சரண் நமக்கு'' என்றார் நம்மாழ்வாரும்.

புருஷார்த்தம் (பேறு) : ஜீவன் அடையத் தக்க நற்பேறுகளான அறம், பொருள், இன்பம் வீடு என்பவற்றுள், ''கண்ணனுக்கே ஆமது காமம்'' என்கிறபடி 'கிருஷ்ணநு ஸ்மரணம் பரம். (கிருஷ்ணனிடம் அன்பே பெரிது)

இங்கும், அங்கும், எங்கும் 'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே யாவோம்; உனக்கே நாம் ஆட் செய்வோம்'' என்று திருமாலுக்கு அடிமை செய்வதே சிறந்த பேறாக அறுதியிடப் பெற்றுள்ளது. இப்படி தத்துவ, இத, புருஷார்த்தங்களைத் தெளிவுறுத்துகிறது வைஷ்ணவம்.

பிரமாணங்கள் :

ஒன்றை உள்ளபடி அறிதற்கு உதவும் சாதனத்தை ''பிரமாணம்'' என்பர். அந்தப் பிரமாணம் பிரத்யட்சம் (கண்கூடு) அனுமானம் (ஊகம்), சப்தம் (சொல்வழி) என மூன்று வகைப்படும்.

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற வகை தெரிவதற்கு உதவும் புறப்புலன்கள் ஐந்தும், நன்மை தீமைகளின் விளைவான இன்ப துன்பங்களை நுகர்வதற்கு அமைந்த உள் இந்திரியமும், சேர்ந்து அனுபவத்தில் காண்பது 'பிரத்யட்சம்'. புகை இருக்குமிடத்தைப் பார்த்து, அங்கே நெருப்பு இருக்கிறது என்று அறிகிறோமல்லவா? இது 'அனுமானம்'— ஊகம்.

ஐம்புலன்களாலும், அனுமானங்களாலும் அறிய முடியாதவற்றை அறியச் செய்வது சப்தம்; அல்லது வேதச் சொற்களாகும். ஆத்ம, பரமாத்ம தத்துவங்களையும் இப்பிரபஞ்சத்தின் முழு உண்மையையும் அறிதற்கு சாஸ்திரங்களே (வேதங்கள்) நமக்குத் தஞ்சம்.

வேதச் சிறப்பு :

ஒருவனால், ஒரு குறிப்பிட்ட காலத்தில் படைக்கப்படாமல், என்றும் தன்னாலேயே மற்றப் பிரமாணங்களும் உண்மையாக விளங்க உதவுவதே வேதத்தின் சிறப்பு. ஒருவனால் ஆக்கப்பெற்றதில்லை (அபௌருஷேயம்) என்பதால், ஒருவனுக்குள்ள ஐயம், திரிபு, மறதி, சோர்வு, வஞ்சகம் போன்ற குறைகள் அற்றது வேத நூல்.

ஊகத்தாலும், கண்கூடாகவும் உணர இயலாதவற்றையே உணர்த்தும் தனிச் சிறப்பால், தனக்கு நிகரின்றித் தானே மேலான பிரமாணமாக நிற்கிறது வேதம். கடவுளைப் போல் அதுவும் என்றும் உளதால், படைக்கப் படுவதுமில்லை; அழிவதுமில்லை. இவை போன்ற சிறப்புக்கள் வாய்ந்தவை மட்டுமே மறை நூல்கள் எனப்படுவன.

மறையாய நால்வேதம் :

இப்போது நமக்குக் கிடைக்கும் மறை நூல்களில் 'ருக் வேதம்'-10 மண்டலங்களையும், 10,552 மந்திரங்களையும் கொண்டுள்ளது. வசன நடையில் உள்ள யசுர் வேதம் 40 அத்தியாயங்களையும், 1975 மந்திரங்களையும் கொண்டது. இறைவன் உகந்த இசை இன்பம் நிறைந்த சாமவேதத்தில் உள்ள மந்திரங்கள் 1875. போர்க்கருவி அழிவுச் சாதனங்கள், அதற்கான மந்திர தந்திரக் குறிப்புகள் நிறைந்த 'அதர் வண வேதம்' 20 காண்டங்கள் 5987 மந்திரங்கள் உள்ளது.

எழுதாக் கிளவி, செவிச் செல்வம், மறை, 'சுருதி' என்றெல்லாம் கொண்டாடப் பெறும் வேதங்களிலே மிக்க இறைநிலை, மெய்யாம் உயிர்நிலை, தக்கநெறி, தடையாகி நிற்கும் ஊழ்வினை, இறை அருளால் பெறும் நிறை வாழ்வு இவை ஐந்தும் செம்பொருள்களாகக் கூறப்படுகின்றன. வேதப் பகுதியில் 'புருஷ ஸூக்தம்' தலை சிறந்தது. (வேதேஷு பௌருஷம் ஸூக்தம்) வேதத்தின் முற்பகுதி கர்ம காண்டம். பிற்பகுதி (உபநிஷத்துக்கள்) ஞானகாண்டம்.

இறை அருள் பெற அவனை உகப்பிக்கும் செயல்களை, இயற்கையின் முக்குணங்களான தாமஸ, ராஜஸ, ஸாத்விகங்களான வழிகளில் வகுத்துத் தக்காருக்குப் பொதுவாகக் கூறும் இயல்புடையது வேதம். பல்வகை வேள்விகள், அரிதாயும் பெரிதாயுமான தானங்கள், தியாகங்கள், கடுமையும் கொடுமையும் வாய்ந்த தவங்கள் போன்றவையும் வேதத்தின் கட்டளைகளாக உண்டு.

''காயோடு நீடுகனி உண்டு, வீசு
கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து
தீயோடு நின்று தவம் செய்யும்''

வழிகள் அவை.

கர்மகாண்ட விளக்கமாக, சமுதாயப் பொது அறநெறிகளாகிய கட்டளைகளை சுருதிகளை ஸ்மரித்து (நினைத்து) மனு முதலானோர் செய்த அற நூல்கள் (தர்மசாஸ்திரம்) ஸ்மிருதிகள் எனப் படுகின்றன. அவற்றுள் 'மனு ஸ்மிருதி' மிகச் சிறந்தது.

ஸமுதாயமாகிய பந்தலைத் தாங்கும் நான்கு கால்கள் போல, நான்கு வர்ண தர்மங்களையும், பொது அறங்களையும்-தனி அறங்களான ஆசிரம நிலைகளையும் அடிப்படையாகக் கொண்டவை முனிவர்கள் வெளியிட்ட நூல்கள்.

இதிகாசங்கள் :

பிரம்ம காண்டம் (உபநிஷத்துக்கள்) வேதாந்தப் பகுதி. அவற்றுள் தசோபநிஷத் (பத்து) மிக மேம்பட்டவை. அவற்றின் விளக்கமாக அமைந்தவை இதிகாசங்கள். பரப்பிரம்மம் தான் இவ்வுலகைப் படைத்துக் காத்து அழித்து விளையாடுகிறது. அதை உணர்ந்து தியானித்து அதனருளால் பிறவித் துன்பத்தை இவ்வுயிர்கள் போக்கிக் கொள்ளலாம் என்பது பிரம்ம காண்டக் கருத்து.

இறைவனுக்கு லீலா விபூதி (இவ்வுலகம்) நித்யவிபூதி (பரம பதம்) இரண்டும் உடைமையாகும். இறைவனது விளையாட்டுக்குரியது இவ்வுலகு. உயிர்கள் தம் வினையடியாக அவன் விளையாட்டில் அகப்படுகின்றன. சீவன் இறந்தால் இறைவனிடம் அடைக்கலம் கோரி, அவன் அருளுக்கு இலக்காகி இவ்விளையாட்டிலிருந்தே விடுபட்டு பிறப்பு, பிணி, மூப்பு, இறப்பு அற்று ஒளிகொண்ட சோதியுமாகி அவனைக் கிட்டி அவ்வுலகில் நித்திய ஆனந்தமடையலாம்.

பிரஸ்தான த்ரயம் :

'பிரஸ்தான த்ரயம்' என்று போற்றப் படும் உபநிஷத்துக்கள், வியாசரின் பிரம்ம ஸூத்ரம், பார்த்தசாரதியின் வார்த்தையான பகவத்கீதை மூன்றுமே, இவ்வுண்மையை விளக்குவன. உபநிஷத் வாக்கியங்களைக் குறிக்கொண்டு, இதிகாச, புராணங்கள் (அளவை) வியாகரண (சொல்இலக்கணம்), மீமாம்ஸை (வேதச் சொல் ஆய்வு) துணைகொண்டு, வேதாந்த நூல்கள் விரிந்தன. சங்கர, ராமாநுஜ, மத்வ பாஷ்யங்கள் போன்றவை மலர்ந்தன.

எனினும், வேதாந்த விழுப்பொருளை விளக்குவதில் வால்மீகியின் இராமாயணமும் வியாஸ பாரதமும் கதை சொல்வதாகஅமைந்து, கருத்தைப் புகுத்துவதில்முன் நிற்பன. அதனுள்ளும் மறையாய நூல் வேதத்துள் நின்ற மலர்ச்சுடரான ஸ்ரீமந் நாராயணன், சக்கரவர்த்தித் திருமகனாய் அவதரித்தபோது, வேதமும் வால்மீகி முனிவரின் வாக்கில் இராமாயணமாய் வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ''இதிகாச சிரேஷ்டம்'' இராமாயணமே. மற்றும் பல காரணங்களாலும் பாரதம் கூறும் தூது போனவன் (கிருஷ்ணன்) ஏற்றத்தைக் காட்டிலும், சிறை இருந்தவள் (சீதை) ஏற்றத்தைக் கூறும் இராமாயணம் பரம ஸாத்விகமாக விளங்குகிறது!

புராணங்கள் :

இதிகாச உண்மைகளை உருவகங்கள் கொண்டு மேலும் தெளிவுறுத்துபவை புராணங்கள். அவை பதினெட்டு. படைப்புக் கடவுளாம் பிரம்மாவின் வாக்கிலிருந்து வந்தவை. அவை ஸாத்விகம் ராஜஸம், தாமஸம் என மூவகை. அதில் வசிஷ்டரின் பேரனும் வியாசரின் தந்தையுமான பராசரர் இயற்றிய 'விஷ்ணு புராணம்' 'புராண ரத்னம்' என்று உச்சிமேல் வைத்து மெச்சப்படுகிறது. அதன் விரிவாக விளக்கமாகப் பராசரரின் பேரனும் வியாசரின் மகனுமான சுக முனிவரின் பாகவத புராணம் தலைசிறந்து விளங்குவது. ஸாத்விக புராணங்களுள் சிறந்தவை இவையே. மற்றும் ராஜஸ தாமஸ, புராணங்கள் ஸாத்விகர்களால் தள்ளத் தக்கன; அவை ராஜஸ தாமஸர்களான பாமரர்களே கொள்ளத்தக்கன.

இப்படி ஸ்மிருதி, இதிஹாஸ புராணங்கள் அநாதியான வேதக் கருத்துக்களை விளக்கி எதிர் ஒலிப்பதால் 'உப ப்ருஹ்மணம்' என்று கூறப்படுகின்றன.

மறைநுண்பொருள் நூல்கள் :

பிரம்மா மற்றும் ரிஷிகள் மூலம் பொதுவாக வேதமும், நீதிநூலும் வெளியிட்ட பகவான்; தானே நர-நாராயணனாய் நின்று வேத ஸார தமமான அர்த்தங்களை ஸாத்விகர்களான வைஷ்ணவர்களுக்குத் தன் அருளாலே வெளியிட்டிருக்கிறான். இவை 'ஆசார்ய உபதேச' வழியாலே ஏழாட்காலம் (ஏழு தலைமுறை) பழிப்பில்லாத ஸ்ரீவைஷ்ணவர்களால், அன்று தொட்டு இன்றுகாறும் ரகஸ்யமாக ஆதரித்துக் கொண்டாடப் பட்டுப் பின்பற்றிவரப் பெறுகின்றன. வழிவழி வந்து, 'தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி, திகழ் திருச்சக்கரத்தின்' கோயிற் பொறியாலே ஒத்துண்டு நின்று குடிகுடி ஆட் செய்கின்றோம்'' என்கிற கிரமத்தில் ''லட்சுமி நாத சமாரம்பாம்'' என்று தொடங்கும் குருபரம்பரையைத் தழுவி, இப்படி மண்மிசை வேர் ஊன்றித் தழைத்தோங்கி நிற்கிறது ஸ்ரீவைஷ்ணவம்.!

தாமஸர்களாலும், ராஜசர்களாலும் இடைஇடையே பல தடைகள் ஏற்பட்டு வைஷ்ணவம் தளர்ச்சியும் தாழ்ச்சியும் உற்றாலும், ஆழ்வார்கள், ஆசார்யர்களால் அவ்வப்போது புத்துயிர் பெற்றுப் பொலிந்து நிற்கிறது. அற அழிக்கவொண்ணாத பரம சாத்விக நெறியாகும் இது!

பகவானின் ஐந்து நிலைகள் :

நீக்கமற எங்கும் நிறைந்த பகவான்,'பரம்' வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை முத

லான ஐந்து நிலைகளிலே அண்டமனைத்திலும் நின்று, இருந்து, கிடந்து, நடந்து அருள் பாலிக்கிருன்.

பரம: திருமகள் (ஸ்ரீ) மண்மகள் (பூதேவி) ஆய்மகள் (நீளா) தேவியரோடு பரமபதத்தில், தன்னை விட்டுப் பிரியாத அனந்தன், கருடன், விஷ்வக்சேனர் போன்ற நித்யர், பூவுலகு வாழ்வை விட்டுத் தன்னை வந்தடைந்து புனிதரான முக்தர்கள் ஆகியோருக்கு எப்போதும் இன்முகம் காட்டி வாழ்வளிக்கும் பரம ஆனந்த நிலையமே பரத்துவம்.

வியூகம்: 'தேவும் எப்பொருளும் படைக்க (தன் நாபிக்கமலமாகிய) பூவில் நான்முகனைப் படைத்த பரமன், மற்றைத் தேவர்களின் குறைகளைக் கேட்டு அறிவதற்கும் அவர்களது குறைகளைக் களைய, மண்மிசை யோனிகள் தோறும் தன்னைத் தாழவிட்டுப் பிறப்பதற்கும் பாங்காகப் பள்ளி கொண்டிருக்கும் நிலையே வியூகம். இது மூன்றுவகையில், பன்னிரு மூர்த்திகளை ஆதாரமாகக் கொண்டநிலை. 'கேசவன் முதல்தாமோதரன் ஈருக உள்ள மூர்த்திகளின் பெயர்களை ஓதாதார் வைதிகர் அல்லர்; மற்றையோர் ஓதுவதும் ஓர்வனவும் அவன் பேராயிரமே.

விபவம்: அறம் தலைநிறுத்த (தர்ம ஸம்ஸ் தாபனம்) நல்லவர்க் காத்து (ஸாது பரித்ராணம்) அல்லவர்த் தேய்க்கும் (துஷ்க்ருத் விநாசம்) பொருட்டாகப் பூவுலகில் இராமன், கிருஷ்ணன் போன்ற அவதாரங்களை அந்த ஆழி நாயகன் மேற்கொள்வது விபவமாகும். மேன்மைக் குணங்களோடு கூடிய அவனது நீர்மைக் குணங்கள் நன்கு ஒளிவிடுவது, இந்த அவதார காலங்களில்தான். நினைத்தபோது, நினைத்த இடத்து, நினைத்தவண்ணம் அவதரிக்கவல்ல ஸர்வ சுதந்திரன் அவன் ஒருவனே. ஆதலால் 'எந் நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா!' என்று விளித்தார் நம்மாழ்வார்.

அந்தர்யாமி: கறந்த பாலுள் நெய்யே போல், எள்ளுக்குள் எண்ணெயாக இவ்வையகம் எங்கும் நிறைந்து கருதற்கு அரிய உயிருக்கும் உயிராய், உயிர்களின் ஸத்தை (உளதாதல்) ஸ்திதி (நிலைத்தல்) பிரவ்ருத்தி (ஒரு செயலில் மூளுதல்) நிவ்ருத்தி (ஒன்றிலிருந்து விடுபடல்) அனைத்தும் தான் இட்ட வழக்காய் விளங்கும் பரமன், சிலரிடம் உவந்து கட்டைவிரல் அளவில் இதயத்தில் தனிச்சிறப்போடு எழுந்தருளியிருக்கிருன். இவ் வகையில் அமைந்த இவ் விருப்பு அந்தர்யாமித்துவமாகும்.

அர்ச்சை: எல்லாவற்றுக்கும் மேலாக, நீர்மையின் எல்லை நிலத்தில் அடியவர்களின் கண்ணுக்கு இலக்காகி அவர்கள் இட்ட வழக்காய், அடியார் விரும்பும் வகையில் பொன், வெள்ளி முதலிய உலோகங்களிலும், மரம் மண் கல் வரைசித்திரம் அனைத்திலும் பிம்ப, ஓவிய வடிவில் ''தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே'' என்று எழுந்தருளி மண்ணவர்க்கு அருள்பாலிக்கும் ஸ்ரீமந் நாராயணனின் அழகிய வடிவமே அர்ச்சவாதாரமாகும். தன்னை அனுதரிக்குமவர்களையும் ஆதரிக்கும் நிலை இதுவானதால் இறைவனின் நீர்மைக்கு இதனின் மேம்பட்ட நிலை இல்லை.

குணங்களின் ஒளி:

நின்றுன், இருந்தான், கிடந்தான், நடந்தான் என்று நான்கு கோலங்களில் மண்ணுலகில் கோயில் கொண்டுள்ள திருமாலுக்கு ஜ்ஞானம் (அறிவு) சக்தி (ஆற்றல்) பலம் (வலிமை) ஐசுவரியம் (செல்வம்) வீரியம் (ஆண்மை) தேஜஸ் (ஒளி) இவை ஆறும் மேன்மைக் குணங்களாம்.

அறிவாற்றல்களோடு ஸ்வாமித்வம் (உடையவன் என்ற உறவு), வாத்ஸல்யம் (அன்பு), ஸௌசீல்யம் (தோழமை), ஸௌலப்யம் (எளிமை), மற்றும் கருணை (க்ருபை), க்ஷமை (பொறுமை) அழகு இளமை, எளிமை போன்ற நீர்மைக் குணங்கள் நமக்காகவே ஏற்பட்டவை.

அருளிச் செயல்:

இத்தகைய குணக்கடலில் அர்ச்சாவதார அனுபவத்தில் ஆழ்ந்தவர்கள்தாம் ஆழ்வார்கள். இறைவனின் காரணமற்ற கருணைக்கு இலக்கான ஆழ்வார்கள் 'மாலுகந்த ஆசிரியர்கள்' ஆவர்.

மண்ணில் அறம் குன்றி மறம் மிகுந்து நிற்கும்போது அவதாரங்கள் செய்த இறைவன், சாதுக்களின் நீதிநெறிகள் நிலை குலையாமல் அதனை வலியுறுத்த, தன் அவதாரங்களும் பயன்படாத நிலையில், மானிட இனத்தாரைக் கொண்டே மக்களைத் திருத்தத் திருவுளம் கொண்டான்; ராஜஸ, தாமஸம், கலசிப் பொதுவாகிக் குழம்பி நிற்கும் வேத நெறிகள். வர்ண ஆசிரம தர்மங்கள் இவைகளையும் கடந்து, இவற்றிலிருந்து வடிகட்டியதான ஸாத்விக நெறிகளை ஸ்ரீவைஷ்ணவ மரபுகளை வளர்க்க ஆழ்வார்களுக்கு மயர்வற மதிநலம் அருளினன் இறைவன்.

''என் நெஞ்சத்துள் இருந்து, இங்கு இரும் தமிழ் நூல் இவை மொழிந்து'' என்றும் ''என் நெஞ்சும் உயிரும் உள்கலந்து தானே யான் என்பானுகித் தன்னைத்தானே துதித்து'' எனவும் நம்மாழ்வார் மூலம் வேதம் தமிழ் செய்தான் இறைவன். நம்மாழ்வாரைத் தலைமை கொண்ட மற்றைய ஆழ்வார்களின் அருளிச் செயல்களும் 'பேசிற்றே பேசி' ஒத்த கருத்தை வெளியிட்டன. 'வேதம் தமிழ் செய்த மாறன் தமிழ் மறைக்கு ஆறங்கம் கூற அவதரித்தார், திருமங்கை மன்னன்.

ஆழ்வார்கள் பாசுரங்களிலே ஆத்ம பரமாத்ம தத்துவங்களோடு உயிர்க்குலத்திற்குக் காட்ட வேண்டிய, பேரன்பின் பல்வேறு வடிவங்களைக் காணலாம்; தாயின் இனிய பண்பு, தந்தை நமக்கு நாடும் நன்மை, அன்புக்கு அடிமையுற்றவர் தொண்டு, வணக்கம் மிக்க பக்தனின் வழிபாடு, தலைமகனிடம் தலைமகளின் உண்மையான உயிர்க் காதல், பொங்கும் பரிவினல் அனைவர்க்கும் வாழ்த்துரைகள் (மங்களாசாஸனம்) இவை அனைத்தும் அருளிச்செயலில் காணலாம்.

***

தேவார திருவாசகத் திருமுறைகளின் சிறப்பு

(முற்றொடர்ச்சி)

—ஆசிரியர்.

திருக்கோயில்களும், திருமுறைகளும் :

கலைகள் பலவற்றிற்கும் இருப்பிடமாக விளங்கும் எண்ணிறந்த பல கோயில்களைத் தமிழ் நாட்டில் நாம் இன்று காண்கின்றோம். இத்துணைப் பல்லாயிரக் கணக்கான திருக்கோயில்கள் தோன்றுதற்குக் காரணம் திருமுறைகளே எனக் கூறுதல் மிகையன்று. திருக்கோயில்கள் மக்கட் சமுதாயத்திற்கு விளைவித்து வரும் பலதிற நலங்களுக்கும் அளவேயில்லை.

நம் தமிழ் நாட்டில் பழங்காலத்தில் திருக்கோயில்களே பள்ளிக்கூடங்களாகவும், கலைஞர்களின் கலைக் கழகங்களாகவும், அறங்கூறும் அவையங்களாகவும், மருத்துவ மனைகளாகவும், பேணுநர் இல்லோர்க்கு ஊணுடை நல்கி ஓம்பும் புகலிடங்களாகவும், மக்கட்குத்தொழில் தரும் நிறுவனங்களாகவும், பொருள்கொடுத்து வாங்கி உதவி புரியும் நிதிநிலையங்களாகவும், மன்பதை நலங்காக்கும் மன்றங்களாகவும், போர்க் காலங்களில் படைவீடுகளாகவும், இன்ன பிறவாகவும் விளங்கி மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வந்தன. இன்றும் அவற்றால் விளைந்து வரும் பயன்களுக்கு எல்லையில்லை. இத்தகைய கோயில்களும் சமய நிலையங்களுமெல்லாம் தோன்றுதற்கு வாயிலாக அமைந்த திருமுறைகளின் பெருமை, எம் ஒரு நாவாற் கூறல் ஒல்லுமோ?

தலங்களும்—வரலாறுகளும் :

திருமுறைகளின் வாயிலாகத் தமிழ் நாட்டில் உள்ள நூற்றுக்கணக்கான ஊர்களைப் பற்றியும், அவ்வூர்களுக்குச் செல்லும் வழிகளைப் பற்றியும், அவ்வவ்வூர்களிற் காணப்பெறும் பல்வகைச் சிறப்பியல்புகளைப் பற்றியும், நாம் அறிந்து கொள்ளலாம்.

''உள்ளம் ஆர்உரு காதவர்? ஊர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள், பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்''

எனச் சேக்கிழார் பெருமான் பாடுவது போல, திருமுறையாசிரியர்கள் சென்ற சிறப்பையோ, அல்லது அவர்களின் திருப்பாடல்களில் எவ்வகையாலேனும் குறிப்பிடப்பட்ட சிறப்பையோ பெற்றுள்ள, எந்த ஊரும், எந்தத் தலமும், எந்தக் கோயிலும், நம்மை 1,300 ஆண்டுகட்கு முற்பட்ட காலநிலைக்கு அழைத்துக் கொண்டு போய், நம் உள்ளத்தை யெல்லாம் உருக்குகின்றது என்பதில் ஐயம் உண்டோ?

மேலும் 'நளன்கெழுவி நாளும் வழிபாடு செய்தது' நள்ளாறு என்றும், 'தள்ளாய சம்பாதி சடாயு என்பார் தாம்இருவர் புள்ளானூர்க்கு அரையன் இடம் புள்ளிருக்கு வேளூர்' என்றும், 'முன்னொரு காலத்து இந்திரன் உற்ற முனி சாபம் பின்னொரு நாள் அவ்விண்ணவர் ஏத்தப் பெயர் வெய்தித் தன் அருளாற் கண் ஆயிரம் ஈந்தோன் சார்பு' கண்ணார்கோயில் என்றும், 'நீலமா மணி நிறத்து அரக்கனை இருபது கரத்தொகுஒல்க வாலினுற் கட்டிய வாலியார் வழிபட மன்னுகோயில்' குரங்காடுதுறை என்றும், 'வையகம் மகிழ்தர வைகல் மேற்றிசைச் செய்ய கண் வளவன் முன் செய்தகோயில்' வைகல் மாடக்கோயில் என்றும், இராமன் இலக்குவன் சாம்புவான் சுக்கிரீவன் அநுமான் ஆகியோர் தொழுதது திருவுசாத்தானம் என்றும், பல வேறு தலங்களின் வரலாறு பற்றிய செய்திகளையும்கூட, நாம் திருமுறைகளால் அறிந்து மகிழ்கின்றோம்.

இசைக்கலையின் அரசிருக்கை:

திருமுறை நூல்கள் பலவேறு கலைகளுக்கு நிலைக்களம் எனத் திகழ்வன. சிறப்பாக இசைக் கலையின் அரசிருக்கையாகத் திகழும் சிறப்புத் திருமுறைகளும் உண்டு. இசைக் கலையின் சிறப்பை ஷேக்ஸ்பியர் பின்வருமாறு பாடுகின்றார் :

இனியநல் இசையைக் கேட்டும்
இளகிடா திருப்பான் நெஞ்சம்
துனிதரு நரகம் போலச்
சூழ்ந்திருள் படர்ந்துநிற்கும்;

முதற்பல தீங்கே செய்வான்,
நனிமிகக் கொடியன், அந்தோ!
அவனைநாம் நம்பொ ணாதே! *
முனிதகு வஞ்சம் சூழ்ச்சி
—தமிழாக்கம், ஆசிரியர்.

இத்தகைய சிறந்த இசைக்கலைத் துறையில், திருமுறைகள் எத்துணைச் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது என்பதனை, எண்ணியுணருந்தோறும் திருமுறைகளின் பெருமை தெளிவுறப் புலனாகும். சுவாமி விபுலாநந்தர் அவர்கள் இயற்றியளித்த யாழ் நூல் இவ்வுண்மையைச் செவ்விதின் உணர்த்தும். இம்மட்டோ! தமிழகத்தின் ஐந்திணைக்கும் உரிய கருப் பொருள் வகைகளை யெல்லாம் பற்றியும், திருமுறை நூல்களிற் பற்பல குறிப்புக்களை அறிந்து நாம் பெரிதும் மகிழலாம்.

அகச்சான்றுகள் :

திருமுறைகள் அவற்றைப் பாடியருளிய அருளாசிரியர்களின் வரலாற்றை யுணர்த்தும் அகச்சான்றுகளைத் தம் அகத்தே கொண்டு இலங்குகின்றன. அவ்வகைச் சான்றுகளால் (Internal evidences) நாம் அப்பெருமக்களின் வாழ்க்கை பற்றிய பல்வேறு விவரங்களையும் அறிந்து கொண்டு மிகவும் பயன் அடைகின்றோம். லாங்ஃபெல்லோ (H. W. Longfellow) என்னும் ஆங்கிலக் கவிஞர், ''சான்றோர்களின் வாழ்க்கை வரலாறுகள், நாமும் அவர்களைப் போல நடந்து, நம்முடைய வாழ்க்கையினையும் தெய்விகம் நிறைந்ததாக ஆக்கிக் கொள்ளலாம் என்று நம்மனோர்க்கு நினைவூட்டி அறிவுறுத்துகின்றன. காலம் என்னும் மணலில், அவர்கள் பதித்து விட்டுச் செல்லும் அவர்களின் அடிச்சுவடுகள், பிறவி என்னும் கடலில் வாழ்க்கை என்னும் மரக் கலத்தில் ஏறி, வழி தவறித் தடுமாறி நிற்கும் சகோதரர்களுக்குத் தைரியம் அளித்து நலம் புரிகின்றன'' என்கின்றார்.

** சீலம் மிக்க பெருமக்கள்
சிறந்த நல்ல வரலாறு,
ஏல நாமும் அவர்களைப்போல்
இறைமை வாழ்வெய்துதல் தேற்றும்;
கால மணலில் பதிந்து, அவர்காற்
சுவடு, வாழ்வாம் கலம்கவிழ்ப்பச்
சாலத் தவிக்கும் சகோதரரைத்
தைரி யமேகொண் டுயச் செய்யும்!
—தமிழாக்கம், ஆசிரியர்.

இதற்கு ஏற்ப, திருஞானசம்பந்தர் ஞானப் பால் உண்ட செய்தி, திருநாவுக்கரசர் சூலை நோயால் ஆட்கொள்ளப் பெற்ற தன்மை, சுந்தரமூர்த்தி சுவாமிகள் தடுத்தாட் கொள்ளப் பெற்ற சிறப்பு, மாணிக்கவாசகர்க்காக இறைவன் நரிபரியாக்கிய மாட்சிமை முதலிய பல வேறு செய்திகளையும், திருமுறைகளின் வாயிலாக அறிந்து, நாம் வியந்து மகிழ்ந்து இன்புறுகின்றனம் அல்லமோ?

சித்தாந்த சாத்திரங்கள் :

இன்னனைய எத்துணையோ பல பெருமைகளும், சைவ சித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவக் கொள்கை தோன்றுதற்கு அடிப்படையாக அமைந்த தனிப் பெருஞ் சிறப்பும், திருமுறைகளின் பெருமைகளுள் ஒன்றாகும். திருமுறைகளின் சிறந்த பிழிவே, சித்தாந்த சாத்திரங்கள் ஆகும். சமயங்கள் வெறும் அறிவாராய்ச்சிக்காரர்களால் உண்டாக்கப்படுவதில்லை. இறைவனிடமும் தம்மிடமும் மாறாத நம்பிக்கை வாய்ந்த அருள் ஞானப் பெரு வீரர்களாலேயே சமய நெறிகள் வகுக்கப்படுகின்றன. அங்ஙனம் வகுக்கப்பெறும் சமய நெறிகளின் உண்மைகளையே பின்வரும் அறிஞர்களும் மெய்யுணர்வாளர்களும் தத்தம் நூல்களாலும் உரைகளாலும் விளக்கத் தலைப்படுகின்றனர்.!

இவ்வுண்மைக்கேற்ப, நமது சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் கி.பி. 12, 13, 14ஆம் நூற்றாண்டுகளில் செம்மையுறத் தோன்றுதற்கு, மூல முதற் கருவாகவும், தலையூற்றாகவும், அடிப்படை நிலைக்களமாகவும் விளங்கித் திகழ்ந்தவை திருமுறைகளே எனின், அவற்றின் அருமை பெருமைகளுக்கும் ஓர் அளவு உண்டோ?

பன்னிரு திருமுறைகள் :

(1.2.3.) திருஞானசம்பந்தர் பாடல்கள் தூய சிறந்த நடை நலனும், மிகுந்த இசையினிமையும், உயர்ந்த கலைத் திறனும், எழில்

---

* "The man that hath no music in himself,
Nor is not moved with concord of sweet sounds,
Is fit for treasons, strategems and spoils.
His mind is as dark as Erebus.
Let no such man be trusted.'' —*Shakespeare.*

** " Lives of great men all remind us
We can make are lives sublime,
And, departing, leave behind us,
Footprints on the sands of time;
Footprints, that perhaps another,
Sailing over life's solemn main,
A forlorn and shipwrecke'd brother,
Seeing, shall take heart again ".
—*H. W. Longfellow.*

! " Forms of religion are founded, not by philosophers and theologians, with their interpretations and argumentations, but by heroic men of faith—faith in God and faith in themselves.... The former come later on to justify and sanction what already exists, with their elaborate exegetics, written solely for the learned and thoughtful—not to say the sceptical."
—*Prof. P. Sundaram Pillai, M.A.*

கனிந்த இயற்கைப் புனைவுகளும் செறிந்த, இளமைக்குரிய பெருமித உணர்ச்சியும் வீறும் பெற்று, ஒப்புயர்வற்றுப் பொலிந்து விளங்கு கின்றன.

(4,5.6.) திருநாவுக்கரசர் பாடல்கள் அறிவு முதிர்ந்து, அனுபவம் பழுத்து, மக்கள் வாழ்க்கைக்கு உறுதி பயக்கும் உயரிய கருத்துக் களைத் திட்ப நுட்பமுறச் சுவைபெருக உருக்க மாக அறிவுறுத்துகின்றன.

(7) சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த பாடல்களோ, கலையழகும்இசையினிமை யும் நகைச்சுவை நலங்களும், பிறவும் கலந்து நிறைந்து, மனித வாழ்வியலின் அனுபவ வாய் மைகளை, நம்மனோர் மனங்கொளத் தேற்றுகின் றன.

(8) மாணிக்கவாசகர் அருளிய திருவாச கம், அழகிய இனிய கருத்துச் செறிவும், அயரா அன்பு நலனும், இறையருளுணர்வால் ஆரா இயற்கை அவாவும் வேட்கையும் மிகுந்து, எளிமை இனிமை முதலிய சிறப்பியல்புகள் அமைந்து, கல்லைப் பிசைந்து கனியாக்க வல்ல உருக்கமும் நெகிழ்ச்சியும் சிறந்து, ஒப்புயர்வில் லாத பக்திப் பெரு நூலாக ஒளிர்கின்றது. இறையருளைத் தேடி யலைந்து, முயன்று பெற்று, உய்யும் ஓர் உயிரின் பலதிற உள்ளுணர்ச் சுளின் வளர்ச்சிப் படிநிலைகளைத் தெளிவுற விளக்கிக் காட்டும் திறனில், திருவாசகம்போலச் சிறந்த நூல், வேறொன்றுமில்லை. தன்னை ஓதுப வர்களின் சிந்தையிலுள்ள கலக்கத்தைத் தெளி வித்துச் சிவமாக்கி உய்விக்க வல்ல சிறப்பினது திருவாசகம்.

திருச்சிற்றம்பலக் கோவையார், சங்க கால நல்லிசைப் புலவர் பெருமக்கள் பாடிய காதலுணர்ச்சியோடு, கடவுளுணர்ச்சியையும் கலந்திழைத்துப் பிணைத்துப் பாடி, கலை நல மெலாம் கனிந்து, மெய்யுணர்வுக் கருத்துக்கள் செறிந்த செந்தமிழ்ப் பெருங் கருவூலம் ஆக, 'காமம் சான்ற ஞானப் பனுவல்' எனக் குமர குருபர சுவாமிகள் பாராட்டும் நிலையில், சிறந் தோங்கித் திகழ்கின்றது.

(9) திருவிசைப்பா திருப்பல்லாண்டு என் னும் நூல்களின் பாடல்களுள், இனிமையும் சிறப்பும் மிக்கவை. கண்டராதித்த சோழர் (கி.பி. 949—957) பாடிய பாடல்களும் முத லாம் இராசராச சோழன் (கி.பி. 985—1014) கட்டிய இராச ராசேச்சரம் பற்றிய பாடல்களும், இராசேந்திர சோழன் (கி.பி. 1012—1044) கட்டிய கங்கை கொண்ட சோழேச்சரம் பற்றிய பாடல்களும், பிறவும் இவற்றில் அமைந்திருக்கின்றன.

(10) திருமூலர் அருளிய திருமந்திரம் என்னும் நுண்பொருள் மறைநூல், ஆராய்ச்சி அனுபூதி என்னும் இரு வகை நெறிகளுள், அனுபூதி நெறியால் நம்மனோர் இறைவனை அடைந்து உய்யுமாறு பல திற யோகப் பயிற்சி முறைகளையும், ஐந்தெழுத்து முதலிய அரிய பல மந்திரங்களையும், அவற்றை உருவேற்றுவ தற்குரிய பலவகை இயந்திர அமைப்புக்களையும், சிறந்துயர்ந்த தத்துவ ஞானப் பொருள்களை யும், அழகிய இனிய நீதிக் கருத்துக்களையும், ஓதற்கெளியவாய் உணர்தற் கரியவாய் உள்ள பாடல்களால் திறம்பட விளக்கிச் செல்கின்றது. இதனை 'ஞானம் முதல் நான்கும் மலர் நற்றிரு மந்திரமாலை' எனச் சேக்கிழார் அடிகள் சிறப் பித்துக் கூறியருள்கின்றார்கள்.

(11) பதினொன்றும் திருமுறை, திருவால வாய் உடையார் திருமுகப் பாசுரம், காரைக் கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள், பட்டினத்தார், நம்பி யாண்டார் நம்பிகள் முதலிய பலரின் பாடல் கள், பலவற்றைக் கொண்ட சிறப்புடையது. இதன்கண் இருபத் தெழுவர் அருளாளர்கள் பாடிய நாற்பது நூல்கள் அடங்கியுள்ளன.

(12) பன்னிரண்டாம் திருமுறை ஆகிய பெரிய புராணமோ, தமிழகத்தின் சமய—சமு தாய—கலாசார—வரலாற்றுப் பெருங்களஞ்சி யம் எனத் தலைசிறந்து விளங்குவது. தமிழ் நாட்டின் தேசீய காவியம் (National Epic of Tamil Nadu) என்று பெரிய புராணத்தைக் கூறுவது மிக மிகப் பொருந்தும்.

இத்தகைய சிறந்த திருமுறை இலக்கியங் களின் பயனாகவே, தமிழ் மொழியானது உலக இலக்கியங்களில் தனிச் சிறப்பிடம் பெற்று, ஒப்புயர்வற்றுச் சுடர்விட்டு ஒளிர்கின்றது.

முடிவுரை :

இத்தகைய சிறந்த பல பெருமைகளை யுடைய, தெய்விக நலம் சிறந்த திருமுறைகளை அன்பும் ஆர்வமும் கொண்டு, முறையாக ஓதி இறைவனை வழிபட்டு, நாம் அனைவரும் இம்மை மறுமை நலங்களையெல்லாம் இனிது அடைய முயலுவோமாக!

சங்கு சுவாமிகள்

''அருண்மொழியரசு''
திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்.

கடலிலேயுள்ள தண்ணீரை இத்தனை படி என்று அளந்து விடலாம் ; அதனில் வீசும் அலைகளையும் எண்ணி விடலாம் ; இமயமலையைத் தலையிலிட்டு இத்தனை 'டன்' என்று நிறுத்து விடலாம். வானத்தை அங்குலக் கோலால் இத்தனை அங்குலம் என்று அளந்து விடலாம். ஆனால் ஞானிகளது பெருமையை எதனாலும், யாராலும், அளக்க முடியாது. அடியில் வரும் ஒரு ஞானியரது பெருமையை அறிக.

திருநெல்வேலி மாவட்டத்தில் பசுவந்தனை என்று ஒரு தலம் உண்டு. வளமை மிகுந்த அத்தலத்தில் மக்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்தார்கள். பயிர்த் தொழில் புரியும் ஒரு குடும்பத்தில் அவதரித்தவர் சங்கு சுவாமிகள். இவர் இளமையிலிருந்தே சிவஞானமுடையவராகவும் சிவானந்த அநுபவமுடையவராகவும் விளங்கினார். ஆனால் அவருடைய அருமையையும், பெருமையையும், அவ்வூரில் ஒருவரும் அறிந்தாரில்லை. ஒன்றும் அறியாத உன்மத்தர் என்றும், பித்தர் என்றும் எண்ணினார்கள்.

சங்கு சுவாமிகள் உலகத்தை மறந்து எப்பொழுதும் சிவ சிந்தையுடன் இருப்பார். வானத்தை நோக்கிய வண்ணம் நெடு நேரம் நிற்பார். மழை பொழிந்தாலும் அசையாமல் இருப்பார். காரணமில்லாமல் சிரிப்பார். சில சமயம் அழுவார். அவர் தன்னுடைய வீடாகவே, எல்லா வீட்டையும் எண்ணுவார். யார் என்ன வேலையிட்டாலும், அன்போடு செய்வார். இரவிலே ஊருக்கு வெளியே யுள்ள தோப்புகளிலே, தனியே உலாவுவார். நெல் அறுவடைக் காலத்திலே, அந்த ஊரவர்கள், இவர் தலையில் நெல் தாள்களைத் தூக்கிச் சுமத்துவார்கள். அவர் கழுத்து நெறியத் தூக்கிக் கொண்டு போவார். கிணற்றில் தண்ணீரை இறைக்கச் சொல்லுவார்கள். இப்படி தங்கள் தங்கள் வீடுகளிலும், தோட்டங்களிலும், இப் பரம ஞானியைச் சிறிதும் இரக்கமின்றி, வேலை வாங்குவார்கள். அவரும் உடல் வருத்தமறியாது உழைப்பார். மேகத்தினால் மறைப்புண்ட சூரியனைப் போல இருந்தார். கிணற்றுக்குள் இருக்கும் மாணிக்கத்தை யறியாதது போல், அவர் திருவுள்ளத்தில் இருந்த திருவருள் மணியை அவ்வூரார்கள் அறிந்து கொள்ளவில்லை.

இவ்வாறு சங்கு சுவாமிகள், முப்பாலுங் கடந்து அப்பாலைக் கப்பாலாய், வாக்கு மனங் கழிய அதீத நிலையில் திகழ்ந்தார். ஒரு நாள் விடியற்காலை, சங்கு சுவாமிகளின் தம்பி அவரை நோக்கி, ''அடேய்! சங்கு! போய் நமது வயலுக்கு, ஏற்றத்தில் தண்ணீர் இறையப்பா'' என்று ஏவினான். சங்கு சுவாமிகள் "தம்பி! நமது வயல் என்று ஒன்று தனியாக இருக்கின்றதா? எல்லாம் நம்முடைய வயல்தானே?'' என்று வினவினார். தம்பிக்குக் கோபம் வந்துவிட்டது. 'அடேய்! உனக்குப் புத்தியிருக்கின்றதா? இவ்வளவு வயது ஆகியும் நம்ம வயலைக் கூடத் தெரிந்து கொள்ளவில்லையே? பனை மரத்தில் பாதி யிருக்கின்றாயே! அறிவில்லாத அசடே. வா, வயலைக் காட்டுகின்றேன்'' என்று அழைத்துக் கொண்டு போய் வயலைக் காட்டி, ''விடிவதற்குள் இந்த வயல் முழுவதும் தண்ணீர் பாய வேணும்; தெரிகின்றதா, வேகமாக ஏற்றம் இறை'' என்று கூறிவிட்டு வீட்டில் போய்ப் படுத்து உறங்கினான்.

பற்றற்றவரும் பரம ஞானியுமாகிய சங்கு சுவாமிகள், சிவசிந்தையுடன் ஏற்றம் இறைக்கத் தொடங்கினார். இவருடைய இயல்பை அறிந்த அடுத்த வயலுக்குச் சொந்தமானவன், மெல்லத் தண்ணீர் மடையைத் தன் வயலுக்குத் திருப்பிக் கொண்டான். விடிவதற்குள் அந்த வயலில் நன்றாக நீர் பாய்ந்து தேங்கியது. சங்கு சுவாமிகள் தண்ணீர் இறைத்த வண்ணமாகவேயிருந்தார். பொழுது விடிந்தது. தம்பி பல் குச்சியை வாயில் வைத்துக் கொண்டு, முக்காடு போட்டுக் கொண்டு, வயலிடம் வந்து பார்த்தான். தங்கள் வயலில் நீர் ஒரு துளி கூடப் பாயவில்லை. அடுத்த வயலில் தடாகம் போல் தண்ணீர் தேங்கியிருந்தது.

அவனுக்குக் கோபம் பொங்கி வந்தது. ''ஏ மூடனே! சாம்பிராணிப் பயலே! உனக்கு ஏதாவது மூளை யிருக்கின்றதா? இத்தனை மணி நேரம் நீர் இறைத்தும் நம்ம வயலில் தண்ணீர் பாயவில்லையே'' என்று வைதான். சங்கு சுவாமிகள் மலர்ந்த முகத்துடன் தண்ணீர் இறைத்துக் கொண்டே ''அதுவும் நம்ம வயல் தானே?'' என்றார். அவ்வளவுதான், அவனுக்கு ஆத்திரம் வந்து விட்டது. அருகில் கிடைத்த ஒரு கோலையெடுத்து தமையனாரும் சிறந்த சிவ ஞானியுமாகிய சங்கு சுவாமிகளை ஓங்கி ஓங்கி அடித்தான். அடிகளார் அப்பொழுதும் சிரித்த வண்ணமாக ''தம்பீ! இப்படி ஓங்கி ஓங்கி இந்த வுடம்பை அடிக்கின்றனையே. உனக்குக் கை வலிக்குமே?'' என்றார்.

உடனே அவன் தோள், தேள் கொட்டிய மாதிரி வலிக்கலாயிற்று. கீழே விழுந்தான். புழுவைப் போல் துடித்தான். ''ஐயோ! ஐயோ! வலி தாங்க முடியவில்லையே'' என்று கதறினான். கருணை வடிவாகிய சங்கு சுவாமிகள், ''தம்பி, வருந்தாதே, நன்றாகி விடும்'' என்றார். உடனே வலி நின்றுவிட்டது. அப்பொழுதும் அவரை ஞான மூர்த்தியென்று அறிந்தானில்லை. ''இவன் நச்சுப் பல்லன். இவன் சொன்னால் பலிக்கின்றது. இவன் விஷயத்தில் இனி தலையிடக் கூடாது'' என்றான்.

இந்தச் செய்தி ஊரெங்கும் பரவியது. அது முதல் அவர் விஷயத்தில் ஊரவர்கள் சிறிது அஞ்சினார்கள். அவரை ஒருவரும் வேலை தந்து இடர்ப் படுத்துவதில்லை. சங்கு சுவாமிகள் தன்னிச்சைப்படி இடிந்த மண்டபம் ஒன்றில் இருந்து, கண்களை மூடிச் சமாதியில் இருந்தார். ஊரார்கள், சோம்பலுடன் தூங்குகின்றார் என்று எண்ணினார்கள்.

ஆண்டுகள் சில கடந்தன. சிங்கம்பட்டி ஜமீன்தாருக்கு மகோதரம். மருத்துவர்கள் பலரும் பல மருந்துகளைத் தந்தும் நோய் தணியவில்லை. மருத்துவர்கள் இது எம்மால் தீராது என்று கைவிட்டார்கள். ஜமீன்தார் மிகவும் வருந்தினார். பலப்பல சிந்தனை செய்தனர். சிதம்பரம் சென்று தவங் கிடக்க வேண்டும்

என்று துணிந்தார். காவலாட்களும் ஏவலாட்களும் புடை சூழப் புறப்பட்டனர். பல்லக்கில் ஏறிப் பல நாட்களுக்குப் பின் தில்லையின் எல்லையை அடைந்தார். பல்லக்கை விட்டு இறங்கினார். ''பொன்னம்பலவாணா! சின்னஞ் சிறியேனையாளாய்'' என்று மண் மிசை வீழ்ந்து வணங்கினார். கண்களில் நீர் பெருக, உள்ளம் உருக நடந்து போய் ஆலயத்தைச் சேர்ந்தார். சிவகங்கையில் முழுகினார். கனக சபையைக் கண்டார். மெய் மறந்து நின்றார். ஹா ஹா என்று கரமலரைச் சிரமலர் மீது கூப்பித் தொழுதார். அழுதார். ''பிறவி நோய் தீர்க்கும் பெருந்தகையே! துறவிகள் தொழவருள் துரையே! அடியவர் இடர் களை அம்பலவாணா! அடியேனுடைய மகோதரத்தை நீக்கியருள்'' என்று வேண்டினார். ஆயிரங்கால் மண்டபத்தில் தங்கினார். ஆறு காலமும், ஆனந்தத் தாண்டவமூர்த்தியைச் சேவிப்பார். அபிஷேக தீர்த்தத்தைப் பருகுவார். பாலும் பழமும் மட்டும் ஒரு வேளை உண்பார். ஐந்தெழுத்தைச் செபிப்பார். திருமுறைகளைப் பாராயணம் செய்வார்.

இவ்வாறு ஜமீன்தார் 48 நாட்கள் நடராஜ மூர்த்தியின் சந்நிதியில் விரதமிருந்தார். 48 வது நாள் வந்தும் நோய் தணியவில்லை. அன்று இரவு எங்கும் ஒரே நிசப்தம். எங்கும் இருள் தங்கியிருந்தது. கோயில் கதவு தாளிடப்பட்டது. ஜமீன்தாருடைய வேலையாட்கள் யாவரும் அயர்ந்து தூங்கிவிட்டார்கள். ஜமீன்தார் மனம் ஆறாத் துயரமுற்றது.

''தேவ தேவா! தில்லை வாசா! சிவகாமி நேசா! எளியேனுடைய மகோதரந் தீரவில்லையே. உன்னை நம்பி வந்த என்னை நட்டாற்றில் விடலாமா? 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்பது பொய்யா? கருணாகரா! உன் மனம் என்ன இரும்பா! உன்னுடைய சந்நிதிக்கு வந்து ஒரு மண்டலம் இருந்து உன்னை வழிபட்டும் நோய் தீராது ஊர் திரும்புவேனாயின் உன்னை உலகம் பழிக்காதா? ஐயனே! விடிவதற்குள் என் நோய் தீரவில்லையானால், உன் தூக்கிய திருவடி சாட்சியாக அடியேன் சிவகங்கையிலே வீழ்ந்து மாள்வேன். இது சத்தியம்.

''நகோதரம் தறினாற் கின்பத்
நல்கிய ஞான வேலோன்
சகோதரன் வணங்க முன்னாள்
தனிக்கனி தந்த வள்ளால்
மகோதரன் தன்னை மாய்த்த
மால்தொழும் மணியே நாயேன்
மகோதரந் தீர்த்தாட் கொள்வாய்
மன்றுளே நடிக்கும் வாழ்வே''.

என்று துதித்தார். அங்ஙனே அழுது தொழுது மூர்ச்சித்து விட்டார்.

கனக சபை மேவுங் கண்ணுதற் கடவுள் ஜமீன்தாருடைய கனவிலே தோன்றி, ''அன்பனே! வருந்தற்க. உன்னுடைய மகோதர நோயைத் தீர்க்க என்னாலாகாது. அதனைத் தீர்க்க வல்லவன் ஒருவனுள்ளான். பாண்டி நாட்டிலே பசுவந்தனை யென்னுந் தலத்திலே சங்கு சுவாமிகள் என்று எனது அடியான் ஒருவன் இருக்கின்றான். அவன் பற்றற்ற பரம ஞானி. அவன்பால் சென்று வணங்குவாய். அவன் உன் நோயை விரைவில் தீர்ப்பான்'' என்று அருளிச் செய்து மறைந்தருளினார்.

ஜமீன்தார் கனவு தெளிந்து எழுந்தார், அம்பலவாணரது அருள் திறத்தை எண்ணி அகங் குளிர்ந்தார். மெய் சிலிர்த்தார். கண்ணீர் மல்கினார். ''எல்லாம் வல்ல எம்பெருமானால் ஆகாததும் ஒன்று உளதோ? இல்லை இல்லை. அடியார்கள் மூலம் அருள் செய்யக் கருதினார் போலும். ஆ! அயனும் மாலும் காணாத அரனாரால் அறிமுகஞ் செய்விக்கப் பெற்ற அவர் எவ்வளவு சிறந்த பெரியவரோ? சிறியேன் இத்தனைக் காலமாக அவரை அறியாது கெட்டேன்; இனி உய்ந்தேன்'' என்று எழுந்தார். சிவகங்கையில் முழுகினார். பொன்னம்பல நாதரைப் பொற்போடு தொழுதார். பிரியா விடை பெற்றுப் பல்லக்கில் புறப்பட்டார்.

சங்கு சுவாமிகளையே நினைந்து நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்து பல காதங் கடந்து பாண்டி நாட்டை யடைந்து பசுவந்தனை வந்து சேர்ந்தார். கலகல வென்ற மணி ஓசையுடன் கூடிய பல்லக்கில் பரிவாரங்கள் சூழ ஜமீன்தார் வருவதைக் கண்ட ஊர் ஜனங்கள் அதிசய முற்றுப் பரபரப்புடன் ஒன்றுபட்டனர். அவரைச் சிலர் வணங்கி நின்றார்கள். ஜமீன்தார், ''ஐயா! இங்கே சங்கு சுவாமிகள் எங்கே வீற்றிருக்கின்றனர்?'' என்றார்.

''எஜமான்! சங்கு சுவாமிகள் என்று இங்கு ஒருவரும் இல்லையே. தாங்கள் தேடி வரக் கூடிய தகுதியுடையவர் நிச்சயமாக இல்லை'' என்று அவர்கள் கூறினார்கள்.

ஜமீன்தார், ''நீங்கள் அறியாது கூறினீர்கள். இங்கே இருக்கின்றார் சங்கு சுவாமிகள்; நீங்கள் அவரைக் கண்டதில்லையா?'' என்றார்.

ஒருவன், ''எஜமான், சங்கு என்று ஒரு ஈனப் பயல் இருக்கின்றான். அவன் பித்தன். சுத்த சோம்பேறி. எங்காவது தூங்கிக் கொண்டிருப்பான். சங்கு சுவாமிகள் என்று ஒருவருங் கிடையாது'' என்றான்.

ஜமீன்தார், ''ஐயா! நீ கூறிய அந்தப் பித்தர் எங்கே? அவர்தான் ஜீவன் முக்தர். அத்தர் கூறிய சித்தர் அவரே, காட்டுங்கள்'' என்று விரைந்து வினாவினார்.

சங்கு சுவாமிகள் இருக்கும் பாழ் மண்டபத்தைக் காட்டினார்கள். ஜமீன்தார், முத்து முத்தாய் கண்ணீர்த் துளி சிந்தவும், அன்பு வெள்ளம் பெருகவும் ஓடி, அடிகள் திருவடி மீது வீழ்ந்தார். தட்டுக்களில் கற்கண்டும், பழங்களும் வைத்துப் பணிந்தார். ''எந்தையே! எந்தையே! எனையாள வந்த தந்தையே! என்று அழைத்தார்.

சங்கு சுவாமிகள் கண் விழித்துப் பார்த்தார். ''அப்பனே! நடராஜ மூர்த்தி அனுப்பினாரோ? அவரால் உன் நோயைத் தீர்க்க முடியாதென்று என்பால் உன்னை ஏவினாரோ? மிகவும் அழகு. இந்தா! இந்தப் பழத்தைச் சாப்பிடு'' என்று தட்டில் உள்ள பழங்களில் ஒன்றை யெடுத்துத் தந்தார். அதையுண்டதும் ஜமீன்தாருடைய மகோதரம் நெருப்பிடை வீழ்ந்த பருத்தி போல் அகன்றது. ஜமீன்தார் ஆடினார்; பாடினார்; அவரை வலம் வந்து பணிந்தார். அவரைப் பல்லக்கில் ஏற்றி மேள தாளங்களுடன் பவனி வரச் செய்தார். ஊரார்கள் அனைவரும், இந்த அதிசயத்தைக் கண்டு உண்மையை உணர்ந்து, அடிகளை அஞ்சலி செய்தார்கள்.

**

பன்னிரு திருமுறைகள்

—ந.ரா. முருகவேள், M. A., M. O. L.

முன்னுரை :

எத்தனையோ பலநூல்கள் எண்ணற்ற நிலையில்
இருந்துவரும் நம்தமிழில் என்றாலும், அவைகள்
அத்தனையும், தெய்வநல அருட்சிறப்பால் மிகும்நம்
அளப்பருஞ்சீர்த் திருமுறைகட்கு ஈடாக மாட்டா ;
''இத்தரையில் இவைபோன்ற இலக்கியங்கள் யாண்டும்
இறையருளின் நலம்செழிப்ப இல்லைஇல்லை'' என்றே
வித்தகராம் மேனாட்டார் வியந்துமிகப் புகழ்ந்தார்;
மேதகைய திருமுறைச்சீர் விளம்பற் பாற்றோ? (1)

''இலக்கியங்கள் எலாம், நாட்டின் இயல்பை, வர லாற்றை,
இன்கலையை, எழிற்பண்பை, இனிதெடுத்துக் காட்டும்;
இலக்கியங்கள் நாகரிகத்து எழில்விளக்கம்; நாட்டை
எழில்வளஞ்செய் இன்னமிழ்தப் பெருவெள்ளம்; நல்ல
இலக்கியங்கள் எழுந்தனவேல் எழுச்சியுறும் நாடும்;
இலக்கியத்தின் தரம்குறைந்தால் சமுதாயம் வீழும்;
இலக்கியங்கள் புரட்சிபல தோற்றுவிக்கும்'' என்பர்;
இணையில்சைவத் திருமுறைக்கும் இவையனைத்தும் பொருந்தும். (2)

சம்பந்தர் :

ஒருநாடும் காணாத ஒப்பில்பெரும் புரட்சி
உருவாகித் தீங்கொழிந்து நன்மையெலாம் ஓங்கத்,
திருஞான சம்பந்தர், திருமுறைகள் செய்த;
திசையனைத்தும் ஊரூரும் செந்தமிழை வளர்த்த;
அருள்நாடும் அவர்க்கிணையாம் ஆற்றல்மிக்க தலைவர்
அரியபெரும் பரப்புநர்தாம் தோன்றுகிலர் யாரும்;
மருள்ஓட வைத்ததவர் தமிழ்வளம்தான்; வீறும்
வளஞ்செறிந்த தமிழ்என்று மகிழ்ந்துரைத்தார் நம்பி. (3)

ஞானத்தின் திருவுருவாம் ஞானசம்பந்தப் பெருமான், நற்ற மிழ்க்கண்
தேனத்திற் சிறந்தபல திருப்பதிகம் முன்பின்இலா வகையிற் செய்து,
கானத்தின் களஞ்சியமாய்க் கலைவளங்கள் பெருகுவித்தார்; தமிழ்த்தாய்க் கன்னி,
வானத்தின் இலங்குசைவ மணம்புணரச் செய்த, அவர் மாண்பென் சொல்கேன்? (4)

அப்பர் :

திருநாவுக் கரசுகள்தம் திருமுறைகள் மூன்றும்
சிறந்தநன்மெய் யுணர்வுவளம் திகழ்ந்தொளிரத் தேற்றும்;
வரு ''ஞானப் பாடல்'' எனப் போற்றிமிக மகிழ்ந்தார்
மாதவத்துச் சிவஞான யோகிகள்தாம்; மாண்பார்
குருநாதர் இவர், குறளில் ''மெய்யுணர்வு'' என் றோங்கிக்
குலவும்அதி காரவைப்பாய்க் கூறுகிற்பர் மேலோர்;
ஒருநாவுக்கு உரைசெய்ய ஒண்ணுமோ? ''சொற்கண்
உறுதியினுக்கு அப்பர்'' என உலகுரைக்கும் அன்றே! (5)

மெய்யுணர்வு வளஞ்சான்ற மேலோராய் விளங்கும்
வித்தகர்நம் அப்பர்பெம்மான், வியனுலகம் எல்லாம்
உய்யும்வகை உளம்இரங்கி உவந்தருளிச் செய்த
உபதேச வளநலன்தான், உயர்ந்ததிரு விருத்தம்,
செய்யதிரு நேரிசை, சீர்க் குறுந்தொகை, செந் தமிழ்நல்
திருத்தாண்டகம் என்னும் தேன்மழையாய்ப் பெருகித்
தெய்வஅருள் நெறிப்பயிர்தான் செழித்தோங்கச் செய்து,
தேவாரம் எனும்பெயரால் திகழ்ந்தொளிரும் அன்றே! (6)

சுந்தரர் :

நந்தம்அருட் பெருங்குரவர் நம்பியா ரூரர்
நவின்றதிரு முறைஏழாம் திருமுறையா நவில்வர்;
சுந்தரமூர்த் திகள்எனும் அத் தூயவர்போல், யாண்டுச்
சூழினும், ஓர் தலைமகன், நற் பெருங்கவிஞர் உண்டோ?
செந்தமிழ்ச் சேக்கிழார் திருத்தொண்டர் புராணம்
செப்புதற்குத் திருத்தொண்டத் தொகை சிறக்கப் பாடித்
தந்து,அவர்தம் காப்பியத்தின் தலைவர்என வைகித்
தமிழ்கொண்டு, கடவுளையும் பணிகொண்டார் தாமே! (7)

ஆசில்சீர் நம்நம்பி ஆரூரர் அரும்பெருமை அளத்தற் காமோ?
நேசமிகப் புகழ்ந்துரைத்து நெடிதேத்த வேண்டும்எனும் நியமம் மாற்றி,
ஏசியும்மிக்கு இகழ்ந்துரைத்தும், இன்றமிழால் இறையருளை எய்தி நின்ற
தேசுடைய சுந்தரர்தம் செந்தமிழ்ச்சொல் நயவளம்தான், செப்பற் பாற்றோ? (8)

''தேன்படிக்கும் அமுதாம்நற் றிருப்பாட்டு, சுந்தரர்தம் திருப்பாட்டு'' என்றார்,
வான்படிக்கும் சீர்த்திமிகு வடலூர்நல் இராமலிங்க வள்ள லார்தாம்;
தான்படிக்கும் தமிழ்மறையின் தனிச்சிறப்பைப் பொன்மலைக்கும், சங்க தத்தின்
ஊன்படைக்கும் பழிமறையை, அணுநிலைக்கும் ஒப்பிட்டார்; உரைத்தல் என்னே! (9)

''தேவரெலாம் தொழச்சிவந்த செந்தாள் முக்கட்
செங்கரும்பே; மொழிக்குமொழி தித்திப் பாக
மூவர்சொலும் தமிழ்கேட்கும் திருச்செ விக்கே
மூடனேன் புலம்பியசொல் முற்றுமோ?'' என்று,
ஏவருமே துதித்துவக்கும் தாயு மானார்
இனிதெடுத்துப் புகழ்ந்தனரேல், இறைய ருள்தான்
பாவருஞ்சீர்த் திருமுறையின் பரிசாம்; இன்பப்
பண்புவளம் செறிஅதன்சீர் பரவற் பாற்றோ? (10)

மணிவாசகர் :

இருமபுதரு மனத்தினையும் ஈர்த்துருக்கி, எழிற்பொன்னாய் இனிது மாற்றிக்,
கரும்புதரு சுவைபெருக்கிக், கனிவுவளம் திருவாசகம்தான் காட்டும்;
இரும்புவியிற் சிற்றின்பை இணையில்பெரும் பேரின்பாய் இயலச் செய்தே,
அரும்புலமைக் கோவையார், அருள்அனுப வத்தின்வளம் அமைந்து நிற்கும்! (11)

ஒன்பதாம் திருமுறை :

செய்யதிரு மாளிகைநற் றேவர், அருட் சேந்தனார், கருவூர்த் தேவர்,
மெய்உயர்கண் டராதித்தர், வேணாட்டார், காடநம்பி, சேதி ராயர்,
பொய்யில்புரு டோத்தமர், சீர்த் திருவாலி அமுதர்எனப் புகலும் சான்றோர்,
உய்யும்வகை புகழ்ந்திசைத்த திருவிசைப்பா, திருமுறையில் ஒன்பஃ தாகும். (12)

பத்தாம் திருமுறை :

கருமூலம் நாம்அனைவோம் கழன்றுய்யக் கயிலைநின்றும் போந்த சித்தர்,
திருமூல தேவர்அரும் திருமந்தி ரச்சிறப்பைத் தெரிந்து ரைத்தல்,
அருள்மூலம் இலாதார்க்கும் அமையுமோ? தமிழ்நூல்கள் அனைத்தி னுள்ளும்
பெருமூல நூல்என்னப் பிறங்குவது மூலர்நூல்; பிறிதென் சொல்கேம்? (13)

நலன்சிறந்த ஞானமுதல் நால்நெறியும் நவிற்றுவது; நானி லத்திற்
பலன்சிறந்த மந்திரங்கள் சக்கரங்கள் பயிற்றுவது; பரிந்தி ரங்கிக்
குலன்சிறந்த அறிவுரைகள் கொள்கைகள்தாம் கூறுவது; குறிக்கொண் டுய்யத்
திறன்சிறந்த நுண்பொருள்கள் தெருட்டுவது; திருமூலர் திருமந் திரம்! (14)

பதினொன்றும் திருமுறை :

ஆலவாய் அண்ணல், அருட்காரைக்கால் அம்மையார், காட வர்கோன்;
சீலமார் சேரமான் பெருமாள், நக் கீரரொடு, சீர்க்கல் லாடர்,
ஏலஉயர் கபிலரொடு பரணர், இளம் பிரான், அதிரா அடிகள், ஏத்தி
ஞாலமகிழ் பட்டினத்தார், நம்பியாண்டார் நவின்ற, பதினொன் றுரும்! (15)

பெருகுபல சிறப்புடைய நாற்பதுநற் பிரபந்தம் பிறங்கும் இஃதில்;
முருகனுக்கும்; விநாயகர்க்கும், முதன்மைமிகும் அடியவர்க்கும், முதல்வ னுக்கும்;
உருகுசுவை அமைந்தொளிரும் உலாமுதல்நூல் இருபத்தொன் றிதன்கண் உண்டு;
அரியதமிழ் நூற்பெருக்கில் பதினொன்றும் திருமுறைச்சீர் ஆற்ற நன்றும்! (16)

பன்னிரண்டாம் திருமுறை :

சுவைகள்என எட்டினையே சூழ்ந்துணர்தொல் காப்பியனுர் சொல்லிப் போந்தார் ;
நவையறுசீர் நூலினுக்கு நல்லமைதிச் சுவைஒன்றும் நலக்கச் சேர்த்தே,
உவகைதரும் நூற்சுவைகள் ஒன்பஃதென் றேபுலவோர் உரைத்துப் போந்தார்;
அவைகளின்மேல் அரியபக்திச் சுவையதனைச் சேக்கிழார் ஆக்கித் தந்தார்; (17)

''வரலாற்றின் உணர்வுசற்றும் வாய்த்திலது தமிழ்மக்கட்கு'' என்றே வாய்சோர்ந்(து)
உரையாற்றி மகிழ்வர்சிலர்; உண்மையது சிறிதெனினும், ஓர்ந்து ணர்ந்தே
நிரலாற்றிற் சேக்கிழார் நெடிதாய்ந்து வழங்குபெரு நூல்நி னைப்பின்,
திறனுற்றும் தமிழகத்தின் தேசியநற் காவியம், அஃ தேயாம் அன்றே? (18)

முடிவுரை :

திருமுறை நூல்களின் தெய்வநலம் சான்ற
பெருமைகள்தாம் எல்லையிலாப் பெற்றித்(து):—அருமைமிகும்
நல்ல மறுமலர்ச்சி நூல்கள்என நாம்அவற்றைச்
சொல்லலாம் உண்மை துணிந்து. (19)

இயற்கைஎழிற் கின்புறுதல், வாழ்வியலைத் தேர்தல்,
மயற்கையறும் மெய்யறிவு வானில்-உயர்ச்சியுறல்,
நல்லொழுக்கில் நின்றருளை நாடல், உடையவர்கட்(கு)
இல்லை திருமுறைபோல் இன்பு. (20)

மனக்கவலை மாற்றும் மருந்தாகும்; எல்லா
நினைப்பரிய தீக்குணமும் நீக்கும்:—தனக்கிணையில்
தெய்வத் திருமுறைநற் செந்தமிழ் நூல்களைப்போல்
வையத் துயர்ந்தனஇல் மற்று. (21)

கலைநிரம்பிக் கற்றற் கினிதாய், அறிவின்
நலம்நிரம்பிச் சொற்பொருள்கள் நன்றாய்:—விலைவரம்பின்று
உள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம் உவப்பிக்கும்
தெள்ளு திருமுறைநூற் சீர்! (22)

கந்தபுராணக் காப்பிய நலம்

'' திருக்குறள்மணி ''
திரு. க. த. திருநாவுக்கரசு அவர்கள், M.A., M.Litt.,
உலகத் தமிழ்ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-20.

(முற்றொடர்ச்சி)

புராண, காப்பியப் பண்புகள் :

கச்சியப்பர் பண்டைத் தமிழ்க் காப்பிய மரபினை அடியொற்றித் தம் நூலைப் படைத்து உள்ளார். எனினும், இடையிடையே புராணங்களுக்கு வடமொழியாளர் கூறும் இலக்கணங்களுள் சிலவற்றையும், கந்தபுராணத்தில் கூறியுள்ளதை நாம் காண முடிகிறது. அண்டத்தின் தோற்றம் பற்றிய செய்திகளை முதலில் அவர் அமைத்துள்ளார். சூரபன்மன் திக்கு விசயத்திற்குப் புறப்படும் முன்னர், தம்முடைய குருநாதரிடம் அவன் வெல்லக் கருதும் அண்டங்களின் அமைப்பையும் இயல்பையும் சொல்லுமாறு வேண்டுகிறான். சுக்கிராச்சாரியார், 'துங்கமா அண்டம் ஒன்றின் இயற்கையைச் சொல்லுகின்றேன் செங்கைசேர் நெல்லியென்னச் சிந்தையிற் காண்டி யன்றே' (2:11:4) என விவரிக்கத் தொடங்குகிறார். அண்டத்தின் அமைப்பு, பரப்பளவு, அதன் உறுப்புகள், அங்கு வாழ்வோர், அதைச் சார்ந்துள்ள மலைகள், கடல்கள், அவற்றிடையே யுள்ள தீவுகள், மாபெரும் நிலப்பரப்புகளான ஒன்பது கண்டங்கள், அவற்றை ஆண்ட ஆதிக்கவாசிகள், பதின் மண்டலங்கள், பதின் புவனங்கள் போன்ற பல செய்திகள் இப்படலத்தில் விரிவாகப் பேசப்படுகின்றன. ஆனால் அண்டத்தின் அழிவை, ஒடுக்கத்தைப் பற்றிய குறிப்பு ஒன்றும் அதில் இடம் பெறவில்லை.

அசுரர், முனிவர் முதலியோரின் தோற்றத்தைப் பரவலாக ஆசிரியர் குறித்துச் செல்லுகின்றார். அசுரரின் தோற்றத்தையும் ,அவர்களுடைய மரபின் பெருக்கத்தையும் அசுர காண்டத்தில் (2) அசுரர் தோற்றப் படலத்தில் (3) ஆசிரியர் முறைப்படுத்திக் கூறுகிறார். முனிவர்களின் தோற்றம், அவர்களுடைய ஏழு குலங்கள் பற்றிய செய்திகள், தட்ச காண்டத்தில் விளக்கப்படுகின்றன. உமை, தெய்வயானை, வள்ளி, பைரவர், காளி போன்றோரின் தோற்றம் பற்றிய கதைகள் நூல் முழுவதிலும் பரவலாக உள்ளன. முருகப் பெருமானின் திருவவதாரம், உற்பத்தி காண்டத்தில் மிக விரிவாகப் பேசப்படுகின்றது.

ஆனால், மனு முதலிய ஆதி அரசர்களைப் பற்றிய குறிப்புகள் ஒன்றும் இந்நூலில் காணப்படவில்லை. எனவே, 'மனுவந்தரங்கள்' எனும் புராண இலக்கணம் இந்நூலில் அமையவில்லை. இறுதியாக வரலாற்றுக் காலத்திற்கு முந்திய சூரிய குல சந்திர குல அரசருடைய மரபு வழிகளும் சுட்டப் பெறவில்லை. எனினும், சிபி, முசுகுந்தன் எனப்படும் பண்டைய அரசர்களின் புராணச் செய்திகள் சில சொல்லப்படுகின்றன. அவை யாவும், சங்க காலம் முதல் தமிழ் நாட்டில், அவ்வரசர்களைப் பற்றி வழங்கி வந்த பழங்கதைகளாகவே உள்ளன. இவ் வைந்திலக்கணப் பண்புகளை ஒருங்கு இணைத்து, நாம் நோக்குகின்றபொழுது தமிழ்க் கந்த புராணத்தில் கால் பங்கு கூட, ஏனைய பொதுவான புராண நூல்களின் ஐந்திலக்கணப் பண்புகள் இடம் பெறவில்லை என்பது புலனுகின்றது. இஃது ஒருவகையில் கந்தபுராணத்திற்குச் சிறப்பு அளிப்பதேயாகும் எனலாம்.

எனினும், காப்பியங்களில் காண இயலாத, 'மூர்த்தி, தலம், தீர்த்தம்' என்னும் மூவகை வழிபாட்டு முறைகள், நோன்புகள் போன்றவைகள் பிற்காலப் புராணங்களில் பெருஞ் சிறப்புடையனவாகப் பேசப்படுகின்றன. இச் செய்திகள்—கந்தபுராணத்தில் ஓரளவிற்கு முக்கியத்துவம் பெற்றுள்ளதைக் காணுகின்றோம். இவ்வகையில் வேண்டுமானல் இந்நூல் புராணப் பண்புகளை மிகுதியாக உடைய நூல் எனலாம்.

கந்தபுராணம் கதை பொதி பாடல்கள் பலவற்றைக் கொண்ட ஒரு பொருள் தொடர் நிலை நூல். இந்த அமைப்பில், இது ஒரு காப்பிய வடிவினை உடையதாகும். ஆறு பெரும் காண்டங்களும் பல்வேறு உட்பிரிவுகளும் உடையதாய், ''வற்று அருள் சேர் குமரேசன் வண்காதை தன்னைச்'' சொல்லோவியமாகக் கச்சியப்பர் தீட்டியுள்ளார்.

தன்னிகரற்ற தலைவன் :

குன்று தோறாடும் முருகப் பெருமானே, இக் காப்பியத்தின் தனிப் பெருந் தலைவராவர். அவர் ஒப்பாரும் மிக்காரும் இல்லா மாபெருந் தலைவராகத் தோன்றுகிறார். அவர் ''செத்துப் பிறக்கும்'' மண்ணக மாந்தர் அல்லர். அவர் தேவர் கோமான் இந்திரனை வெற்றி கொண்ட

வர்! அதனால் தேவசேனாபதியாகச் சிறப்புற்றவர். படைப்புக் கடவுள் பிரமனுக்கும், தம்மைச் சான்றோனாக்கிய தம் தந்தைக்கும், பிரணவத்தின் உட்பொருளை உணர்த்திய சாமிநாதன் அவர். சிறிது காலம் பிரமனைச் சிறையிலிட்டுப் படைப்புத் தொழிலைத் தாமே மேற்கொண்டு, தேவர்களும் அசுரர்களும் தம் ஆற்றலைக் கண்டு அஞ்சுமாறு தேவருலகை ஆட்சி புரிந்தவர். 'அவன் ஆயிரம் கோடி அண்டத்தில் உயிர்கட்கெல்லாம் நாயகன்' என்பர் கச்சியப்பர். அத்தலைவனைப் பால் மணம் மாறாப் பாலகனாகத் தப்புக் கணக்குப் போட்டிருந்த சூரபன்மனே,

கோலமா மஞ்ஞை தன்னிற்
குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாள் ;
பரிசிவை உணர்ந்திலேன் யான்!
மாலயன் தனக்கும், ஏனைய
வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகார ணமாய் நின்ற
மூர்த்திஇம் மூர்த்தி அன்றோ?

என வியக்கின்றான் எனில், அத்தலைவனுடைய ஒப்பற்ற தலைமைப் பண்பினை மதிப்பிட இயலுமோ? அறிவிலே சிறந்தவன் என்பதை 'ஞான நாயகன்' என்பதனாலும், தேவாதி தேவர்களுக்கு மட்டும் அல்லாமல், அகத்திய முனிவர் போன்றோர்க்கும் பிரணவத்தின் மெய்ப்பொருளை விளக்கியமையாலும் அறிகிறோம். தமிழ்ச் சங்கத்தின் தலைவனாக 'கந்தமலர் நீப முறை கண்டொறும் உலாவும் செந்தமிழ் வடாதுகலை சேர்ந்துழி யுலாவும் (1:14:5) சேந்தன்'' என்பதனாலும் இது வலியுறுகின்றது.

போரிலே பேராற்றல் வாய்ந்தவன் என்பதை அவனுடைய குழவிப் பருவ நிகழ்ச்சிகளே வெளிப்படுத்துகின்றன. ஆயிரத்தெட்டு அண்டங்களை அடக்கி யாண்ட பேராற்றல் மிக்க சூரபன்மனையும், அவன் மக்களையும், தம்பியரையும் கொன்று, தேவரைச்சிறைமீட்டு, அவர்களுக்கு அமைதியான இன்ப வாழ்வை அளித்த ஆறுமுகனுடைய அளப்பரும் அறிவுத் திறனையும், போர்த் திறனையும், அருள் திறனையும் கருதுகின்ற பொழுது, அவனே, தனிப் பெருந் தலைவன் என்னும் எண்ணம் தோன்றுகிறது. அவனுடைய பிறப்பும் வளர்ப்பும் புதுமையானவை ; அவனுடைய இளமைப் பருவத்து வீர தீரச் செயல்கள் வியப்பூட்டுபவை. அவனுடைய அரசியல் விரகும், வினைத் திட்பமும், சிந்தனையாற்றலும், 'வெற்றியின் திரு மகனும் வீரபாகுவை'த் தூதனுப்பி, பகைவரை அஞ்சி நடுங்குமாறு செய்த செயல்திறனும் ஒரு மாபெரும் தலைவனுடைய வியத்தகு ஆளுமையை நமக்கு நினைவூட்டுகின்றன. அப்பெருந் தலைவன் தெய்வயானையையும், வள்ளி நாச்சியாரையும் மணம் புரிந்து இல்லறத்தின் மாட்சியை உலகிற்கு இனிது உணர்த்தினான். கந்த வெற்பில் கவின் முடி தரித்தும், வீர சிம்மாசனத்து வீற்றிருந்தும் விண்ணுலகின் தனிப்பெருந் தலைவனாகச் செங்கோலோச்சிய வரலாற்றைக் கச்சியப்பர் கவின்மிகு சொற்களால் படம் பிடித்துக் காட்டுகிறார்.

நாற்பொருள் பயக்கும் பாங்கு :

அவுணர்களை ''சீலம் நீக்கிய அவுணர்'', ''உளத்தில் இரக்கம் நீங்கிய அவுணர்'' எனக் கச்சியப்பர் அறிமுகப்படுத்தி வைக்கிறார். அவர்களுடைய அண்ணல் சூரபன்மன். ''அறந்தலை நின்றிடா அரசன்'', ''அறத்துடன் அருளைக் கொன்றான்'' என்று, அசுரன் செய்த இமாலயக் குற்றத்தை, ஆசிரியர் பல இடங்களில் சுட்டிச் செல்கின்றார். குமரன் படையெடுத்து வந்துள்ள செய்தியை, ஒற்றரால் அறிந்த அசுரர் கோமான் அமைச்சரவையைக் கூட்டி, அவர்களுடைய ஆலோசனைகளைக் கருத்தோடு கேட்கின்றான். அப்பொழுது, உண்மையில் அவனுடைய நல்வாழ்வில் நாட்டம் கொண்ட, வெறும் போலி மானத்திற்கு ஆளாகாத அவனுடைய அருமை இளவல் சிங்கமுகன்,

பெறலருந்திரு வுடையநீ அறத்தினைப் பேணி,
முறைபு ரிந்திடாது ஆற்றலால் அமரரை முனிந்து
சிறையில்வைத்தனை! அதுகண்டு நின்வலி சிந்தி
இறுதி செய்திட வுன்னினன், யாவர்க்கும் ஈசன்!

என்று அறிவுறுத்துகின்றான். மற்றும், அறத்தின் பயனை, அசுரனின் தந்தையாகிய காசிப முனிவர் அறிவுறுத்துவதைக் காண்போம் :

தருமமென்று ஒருபொரு ளுளது ; தாவிலா
இருமையின் இன்பமும் எளிதில் ஆக்குமால்
அருமையில் வரும்பொருள் ஆகும்; அன்னதும்
ஒருமையி னோர்க்கலால் உணர்தற்கு ஒண்ணுமோ ?

இவை யாவும் 'அறநெறியே தவநெறி' தலைசிறந்த வாழ்க்கை நெறி' என்பதைப் போதிப்பனவாக அமைந்துள்ளன.

மாயை, தன்னுடைய மக்களான சூரனுக்கும், அவன் தம்பியர்க்கும் செய்த உபதேசத்தில், முதன்மை இடம்பெறுவது பொருளீட்டு தலையாகும். 'அறிவினையுடைய உயிர்கள் பிறவியால் அடையும் பயன் கல்வியும் செல்வமும் ஆகும். அவற்றுள், ஏதேனும் ஒன்றை அடையாத பிறப்புப் பேய்ப் பிறப்பைப் போன்றதாகும். ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, கல்வியைக் காட்டிலும் செல்வமே சிறந்தது. கலைகள் எல்லாவற்றையும் கற்றவராயினும், வறுமை அடைந்தால், பொருளைப் பெற வேண்டித் தம் பகைவரையும் பணிந்து நிற்க நேரிடும்'' எனும் கருத்தமைய,

பிறந்தநல் லுயிர்க்கெல்லாம் பெருமை நல்கிய
இறந்ததோர் பொருண்மையது இரண்டின் வன்மை யும்
அறிந்தவர் தெரிவரேல் அரிய கல்வியிற்
சிறந்தது திருவெனச் செப்ப லாகுமால்

அளப்பரும் விஞ்சையே யன்றி மேன்மையும்
உளப்படு தருமமும் உயர்ந்த சீர்த்தியும்
கொளப்படு கொற்றமும் பிறவும் கூட்டலால்
வளத்தினில் சிறந்தது மற்றென்று இல்லையே

என்று அறிவுறுத்துகின்றாள். இறுதியாக, ''நீங்கள் என் வயிற்றில் பிறந்ததால், அசுரர் ஆகிவிட்டீர்! உங்களுக்குத் தேவர்கள் பிறவிப் பகைவர்கள். அவர்களை வென்று சிறப்படைய வேண்டுமானால், 'செய்க பொருளை! அது செறுநர் செருக்கு அறுக்கும் கூரிய எஃகாகும்!' என்று வலியுறுத்துகிறார். இங்குப் பொருளின் சிறப்பும் ஆற்றலும் போற்றப்படுவதைக் காணுகின்றோம். பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளின் வளத்தால், அவுணர்கள் வாழ்ந்த வசதிமிகு வாழ்வையும் ஆசிரியர் அங்கங்கே சுட்டிச் செல்லுகின்றார்.

'மனித வாழ்வின் இலட்சியம் இன்பத்தைத் துய்ப்பதே' எனும் கருத்து, இந்நூலில் பல இடங்களில் சிறப்பாகப் பேசப்படுகின்றது. இறைவன் இல்லற வாழ்க்கையை மேற்கொள்ளுவதற்காக இரு முறை உமாதேவியை (இமய வல்லியாகவும், தாட்சாயணியாகவும்)த் திருமணம் செய்து கொண்ட செய்தி இக்காப்பியத்தில் சிறப்பிடம் பெறுகிறது. 'உலகுய்ந்திடவே எம்பிரான் மணம்புரிந்து' கொள்ளுகின்றான் எனும் கருத்தினை ஆசிரியர் நிலைநாட்டுகிறார்.

தேவ காண்டத்து இந்திரபுரிப் படலத்தில் வியாழ பகவான், இந்திரனுக்கு உலகப் பற்று உண்டாகுமாறு, உலோகாயதத்தின் அடிப்படைக் கொள்கைகளை எடுத்துரைக்கின்றார். அச்சமய நெறிப்படி முத்தி பெற்று இன்பம் அனுபவிப்போர் ஆடவர்களும், முத்தி இன்பத்தைத் தருபவர்கள் பெண்களும் ஆவர்.

யோகு செய்திடும்மேலையோர்
பெரும்பயன் உரைக்கில்
போகம் அன்றி ஒன்று இல்லைகாண்

என்று அவர் அறிவிக்கின்றார். ''பேரின்பம், வீடு பேறு'' என்பன யாவும் மயக்கும் மொழிகள். இம் மண்ணுலகில் நாம் காணும் பெண்ணே பேரின்பம்; அவள் தரும் இன்பமே வீடு பேறு; மற்றவை யாவும் கானல் நீராகும்'' என்று அறிவுறுத்துவதோடு அமையாமல், பெண்களை எவ்வெவ்வாறு கூடி மகிழ்ந்தால் பேரின்பம் கிடைக்கும், அவற்றிற்குரிய நெறி முறைகள், வழி வகைகள், கருவிகள் யாவை என்பதை 42விருத்தங்களில்காமசாத்திரத்தைப் பிழிந்து தருகின்றார் வியாழ பகவான்.

இங்கே பேசப்படும் நெறிமுறை கடந்த இன்பம் துய்த்தலை ஒரு புறம் ஒதுக்கிவிடலாம். அறநெறி பிறழாத நிலையில், அன்பின் ஐந்திணை அடிப்படையில் காதல் வழி நின்று, தலைவி தலைவன் இருவரும் கூடிப் பெறும் இன்பப் பேற்றினைத் தெய்வயானை வள்ளியம்மை திருமணப் படலங்களில் சிறப்பாக ஆசிரியர் விளக்குவதை நாம் புறக்கணிக்க இயலாது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதன்இலட்சியம், 'யான், எனது' எனும் அகப்புறப் பற்றுக்களைத் துறந்து, இறைவன் திருவடிகளை அடைக்கலமாக ஆன்மா அடைதலாகும். இதைப் பல நிலைகளில், பலவாறாக ஆசிரியர், மக்கள் பால் கொண்ட பெருங் கருணையால் எடுத்துரைத்து உள்ளார்.

ஆதலின் நமது சத்தி
அறுமுகன்; அவனும்யாமும்
பேதகம் அன்றால்; நம்போற்
பிரிவிலன் யாண்டும் நின்றான்;
ஏதமில் குழவிபோல்வான்,
யாவையும் உணர்ந்தான், சீரும்
போதமும் அழிவில்வீடும்
போற்றினர்க்கு அருளவல்லான்

எனக் கூறியுள்ளமையும் கருதத் தக்கது. இவை யாவும் பெரும் பெயர் முருகனின் வரலாற்றைக் கூறும் இந்நூல், 'அறம் பொருள் இன்பம் வீடென நான்கும் திறந்தெரிந்து அடைதற்கு வழிகாட்டும் வான்பொருளாக அமைந்துள்ள மாண்பை உணர்த்துகின்றன.

(தொடரும்)

சேக்கிழார் எடுத்த செஞ்சொற்கோயில்

'' சேக்கிழார் பாதசேகரர் ''

திரு. சி. சு. கண்ணுயிரம் அவர்கள், கோவை.

(முற்றொடர்ச்சி)

முருகப்பெருமான் :

சோமாஸ்கந்தரைத் தரிசித்த நாம் அம்பிகையின் கோட்டத்துக்குச் செல்வோம். வழியில் உள்ளது முருகப் பெருமானின் சந்நிதி. பெரும்பாலும் எல்லாக் கோயில்களிலும் சுவாமி அம்பிகை இருவர் கோட்டங்களுக்கும் இடையில் முருகப் பெருமானின் கோட்டம் அமைத்து, கோயில் முழுவதையுமே சோமாஸ்கந்த மூர்த்தமாகும். இதை இவ்வாறு தமது சொற் கோயிலும் அமைக்க விரும்புகின்றார் சேக்கிழார் பெருமான். அதற்குக் கண்ணப்ப நாயனார் சரிதம் கைகொடுக்கின்றது. நாயனாரின் பெற்றோர்கள் மகப்பேறு வேண்டிக் குறிஞ்சிக் கிழவனாகிய முருகப் பெருமான் சந்நிதியில் வரங்கிடக்கின்றார்கள். இச் செய்தியைக் கூறும் பகுதியைச் சேக்கிழார் பெருமான் இதற்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்.

வாரணச் சேவ லோடும்
வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிகள் தூக்கிச்
சுரும்பணி கதம்பம் நாற்றிப்
போரணி நெடுவே லோற்குப்
புகழ்புரி குரவை தூங்கப்
பேரணங் காடல் செய்து
பெருவிழா எடுத்த பின்றை

—கண்ணப்பர்.

துர்க்கை :

இனி நாம் நேரே அம்பிகையின் கோயிலுக்குச் செல்வோம். இங்கு முகப்பில் உள்ள சபா மண்டபத்தில் துர்க்கையின் சந்நிதியும், அம்பிகையின் அருமைத் தமையனாராகிய திருமாலின் சந்நிதியும் உள்ளன. முதலில் துர்க்கையின் சந்நிதியில் சேக்கிழார் பெருமான் நிறுவியுள்ள துர்க்கையின் மூர்த்தத்தைத் தரிசிப்போம்.

கோல முல்லையும் குறிஞ்சியும்
அடுத்தசில் லிடங்கள்
நீல வாட்படை நீலிகோட்
டங்களும் நிரந்து
கால வேனிலிற் கடும்பகற்
பொழுதினைப் பற்றிப்
பாலை யுஞ்சொல லாவன
உளபரல் முரம்பு.

—திருக்குறிப்புத்தொண்டர்.

திருமால் :

இங்கேயே சேக்கிழார் பெருமான் நிறுவியுள்ள பெருமாளும் சேவை சாதித்தல் காண்க.

மங்கை யர்க்குவாள் விழியிணை
தோற்றமான் குலங்கள்
எங்கும்; மற்றவ ரிடைக்கிடை
மலர்க்கொடி எங்கும்;
அங்கண் முல்லையின் தெய்வம் என்று
அருந்தமிழ் உரைக்கும்,
செங்கண் மால்தொழும் சிவன்மகிழ்
திருமுல்லை வாயில்!

—திருக்குறிப்புத் தொண்டர்,

அம்பிகை சந்நிதி :

இப்பொழுது நாம் மகா மண்டபத்துள் நுழைந்து, அர்த்த மண்டபத்துக்கு அப்பால் கருவறையுள் எழுந்தருளியுள்ள அம்பிகையை வணங்குகிறோம். ஆனால் அவளோ இறைவனைப் பூசித்து அவனிடம் நமக்காக வரங் கேட்பதைச் சேக்கிழார் பெருமான் காட்டுகின்றார்.

''மாறி லாதஇப் பூசனை என்றும் மன்ன
எம்பிரான் மகிழ்ந்து கொண்டருளி
ஈறி லாதவிப் பதியினுள் எல்லா அறமும்
யான்செய அருள்செய வேண்டும்;
வேறு செய்வினை திருவடிப் பிழைத்தல் ஒழிய
இங்குளார் வேண்டிய செயினும்
பேறு மாதவப் பயன்கொடுத் தருளப் பெறவும்
வேண்டுமென் றனள்பிறப் பொழிப்பாள்''

—திருக்குறிப்புத் தொண்டர்.

சண்டீசர் :

அம்பிகையின் சந்நிதியினின்றும் நீங்கிய நாம், நேரே சண்டீசர் சந்நிதிக்குச் சென்று, சிவ நிர்மாலியங்கள், பிரசாதங்கள் ஆகிய வற்றை அவருக்குச் சமர்ப்பித்து, மீண்டும் அவற்றை அவரிடமிருந்து பிரசாதமாகப் பெற்றுக் கொண்டு, சிவதரிசனப் பலனை அருளும்படி பிரார்த்திப்போம். சேக்கிழார் பெருமானே இங்கு முன்னின்று நமக்குத் தரிசிப்பிக்கின்றார்.

அண்டர் பிரானுந் தொண்டர்தமக்கு
அதிபன் ஆக்கி, அனைத்தும்நாம்
உண்ட கலமும் உடுப்பனவும்
சூடு வனவும் உனக்காகச்,

சண்டீ சனுமாம் பதந்தந்தோம்
என்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்''

—சண்டேசுரர்

நவக்கிரகங்கள்:

நவக்கிரகங்கள் மிகப் பிற்காலத்து மக்களால் சிவாலயங்களில் பிரதிஷ்டை செய்யப் பெற்றவை. இந் நாளில் அவற்றை வணங்குவோர் கூட்டம் பெருகி வருவதை நாமறிவோம். சேக்கிழார் சுவாமிகளும் தாமெடுத்த செஞ்சொற்கோயிலுள் நவக்கிரகப் பிரதிஷ்டை செய்துள்ளார். அதைத் திருஞானசம்பந்த நாயனார் புராணம் கூறும் பகுதியில் செய்துள்ளார். மங்கையர்க்கரசியாரும், குலச்சிறை நாயனாரும் ஞானப் பிள்ளையாரை மதுரைக்கு வர அழைப்பு விட்டுள்ளனர். பிள்ளையார் அவர்கள் அழைப்பை ஏற்று அங்குச் செல்ல முடிவு செய்துவிடுகிறார். அதனை உடனிருந்த திருநாவுக்கரசு சுவாமிகளிடம் கூறுகின்றார். ஆனால் அப்பர் சுவாமிகளோ ''நாளும் கோளும் தீய'' என்று கூறிப் பிள்ளையார் மதுரை செல்வதைத் தடுக்க முயல்கின்றார். அதற்குப் பிள்ளையார் நவக்கிரகங்கள் ஒன்பதும் சிவனடியார்களுக்கு நன்மையே செய்வன என விளக்கும் ''கோளறு பதிகத்தை''ப் பாடி அரசுகளிடம் அனுமதி பெறுகின்றார். இப்பகுதியைக் கூறும் போக்கில், சேக்கிழார் பெருமான் நவக்கிரகப் பிரதிஷ்டை செய்துவிடுவதைப் பாருங்கள்.

அரசருளிச் செய்கின்றார், ''பிள்ளாய்! அந்த
அமண்கையர் வஞ்சனைக்கோர் அவதி இல்லை
உரைசெய்வ துளதுறுகோள் தானுந் தீய;
எழுந்தருள உடன்படுவ தொண்ணு''தென்னப்
''பரசுவது நம்பெருமான் கழல்கள் என்றால்
பழுதணையா'' தெனப்பகர்ந்து, பரமர் செய்ய
விரைசெய் மலர்த் தாள்போற்றிப் புகலிவேந்தர்
வேயுறுதோ ளியைஎடுத்து விளம்பி னாரே.

—சம்பந்தர்.

ஆயிரங்கால்மண்டபம்-'சிற்பங்கள்':

இனி, நாம் கோயிலில் நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம் போன்றவை இருந்தால், அங்குச் சென்று, அவற்றிலுள்ள சிற்பங்களைப் பார்த்து மகிழலாம். சேக்கிழார் சுவாமியும் தமது செஞ்சொற் கோயிலுள் ஓர் மண்டபம் எடுத்துள்ளார். அதுஞான சம்பந்தப்பெருமானின் சரிதப் பகுதி. அம்மண்டபத்துக்கு 1,256 கால்கள். அவை செய்யுட்கள் என்ற பெயரில் உள்ளன. அவை அனைத்திலும் சிற்பச் செல்வங்கள். சில தூண்களில் பூம்பாவை என்னும் பெண் உயிர் பெற்று வரும் பகுதி ஒவ்வோரங்கமாக மிக நுட்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. அதன் இறுதிக் காட்சியை மட்டும் ஈண்டுக் காண்போம்.

கற்பகம் ஈன்ற செவ்விக்
காமரு பவளச் சோதி
பொற்றிரள் வயிரப் பத்திப்
பூந்துணர் மலர்ந்த போலும்,
நற்பதப் பொலிவு காட்ட
ஞாலமும் விசும்பும் எல்லாம்
அற்புதம் எய்தத் தோன்றி
அழகினுக் கணியாய் நின்றாள்

—சம்பந்தர்.

ஞான பைரவர் :

இனி, நாம் ஆலய தரிசன விதிப்படி ஞான பைரவர் சந்நிதியில் சென்று வணங்கி, வழிபாட்டை முடித்துக் கொள்வோம். பெரும்பாலும் இவரது சந்நிதி கோயிலில் வடகிழக்கு மூலையில் இருக்கும். பெரிய ஆலயங்களில் சுவாமி கோயிற் பகுதியிலோ வேறு இடங்களிலோ இருப்பதுண்டு. இவர் எங்கிருப்பினும் இறுதியிலேயே வழிபடத் தகுந்தவர். இரவில் எல்லாச் சந்நிதிகளிலும் பூசை முடித்துத் திருக்காப்பிட்டதும், பைரவர் சந்நிதியில் சாவிகளை வைத்து அவரைப் பூசித்துப் போவர். பிறகு மறுநாள் காலை வரை எக்காரணங் கொண்டும் எச்சந்நிதியும் திறக்கப்படா. கோயில் முழுவதும் பைரவர் காவலில் இருக்கும். பெரிய புராணக் கோயிலிலும் இவர் சந்நிதியை இருப்பிடம் தேடிச் சென்று நாம் வணங்குவோம். அது திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்துள் இருக்கின்றது. இப் பைரவர் கரிய நிறத்தினர். ஆடையில்லா உடலினர், நஞ்சு ஒழுகும் பற்களை உடைய நாகத்தைக் கச்சாக அணிந்து, அஞ்சத் தக்க திரிசூலத்தைக் கையில் ஏந்தி இடைவிடாது திரிந்து காவல் காப்பவர் என்று, இவரை நமக்கு அறிமுகப்படுத்துகின்றார், சேக்கிழார் பெருமான்.

அஞ்சு வான்கரத் தாறிழி மதத்தோர்
ஆனை நிற்கவும் அரையிருட் டிரியும்
மஞ்சு நீள்வது போலும்மா மேனி
மலர்ப்ப தங்களில் வண்சிலம் பொலிப்ப,
நஞ்சு பில்கெயிற் றரவவெற் றரையின்
நாம மூன்றிலைப் படையுடைப் பிள்ளை
எஞ்ச லின்றிமுன் திரியவும்; குன்றம்
எறிந்த வேலவன் காக்கவும் இசையும்!

—திருக்குறிப்புத் தொண்டர்.

திருவைந்தெழுத்து :

இறுதியாகப் பைரவரை வணங்கிய பின், சந்நிதியில் பலி பீடத்தருகில் மும்முறை வீழ்ந்து வணங்கி, அங்கமர்ந்து இயன்ற அளவு, பஞ்சாட்சரத்தை விதிப்படி செபித்து வீடு திரும்ப வேண்டுவது, ஆலய தரிசன விதியின் இறுதிப் பகுதி. இவ்வாறு திருவைந்தெழுத்தைச் செபிப்பதைத் தமது செஞ்சொற் கோயிலின் இறுதிப் பகுதியாகிய வெள்ளானைச் சருக்கத்தில் சேக்கிழார் பெருமான் அமைத்து நிறைவு செய்கின்றார். அதன் கதைப் பகுதியைப் பார்ப்போம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது நண்பராகிய சேரமான் பெருமாள் நாயனாருடன்

அவரது தலைநகரான கொடுங்கோளூரில் தங்கியுள்ளார். ஒரு நாள் அருகில் உள்ள திருவஞ்சைக்களம் சிவாலயத்தில் வழிபடுகின்றார். அப்பொழுது அவர் பூவுலகுக்கு வந்த வேலை முற்றுப் பெற்றுவிட்டது. இறைவன் அவரை மீண்டும் கயிலைக்கு அழைத்து வர, இந்திரன் முதலிய தேவர்களை வெள்ளானையுடன் அங்கு அனுப்புகின்றான். கோயிலினின்றும் வெளிவரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளை அவர்கள் எதிர்கொள்ளுகின்றார்கள். வெள்ளையானை மேலேறிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், தமது உயிர்த் தோழரை நினைக்கின்றார். அப்பொழுது நீராடிக் கொண்டிருந்த சேர மன்னர், இந்த நினைவலைகளால் தாக்கப் பெற்று உண்மையை அறிகிறார். வெளி வந்து அருகில் நின்ற ஓர் குதிரையில் ஏறித் திருவஞ்சைக் களத்துக்கு விரைகின்றார். அவர் நெருங்கு முன்பே வெள்ளானை சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தாங்கிக் கொண்டு, தேவர்கள் சூழ விண்வெளியில் செல்லத் தொடங்கி விடுகிறது. சேர மன்னர் குதிரையின் காதில் திருவைந்தெழுத்தை விதிப்படி ஓதுகின்றார். அதுவும் அவரைச் சுமந்த நிலையில் வானவெளியில் எழுந்து சென்று சுந்தரமூர்த்தி சுவாமிகளை வெள்ளானையுடன் வலம் வந்து முன் செல்கின்றது. இருவரும் கயிலையை அடைந்து வீட்டுலகில் இன்புறுகின்றார்கள்.

விட்ட வெம்பரிச் செவியினில் புவிமுதல்
வேந்தர்தாம் விதியாலே
இட்ட மாஞ்சிவ மந்திரம் ஓதலின்
இருவிசும் பெழப்பாய்ந்து
மட்ட லர்ந்தபைந் தெரியல்வன் றொண்டர்மேல்
கொண்டமா தங்கத்தை
முட்ட வெய்திமுன் வலங்கொண்டு சென்றது
மற்றதன் முன்னாக

—வெள்ளானைச் சருக்கம்

சுந்தரமூர்த்தி சுவாமிகளும், சேரமான் பெருமாள் நாயனாரும், அவ்விருவரையும் தொடர்ந்து சேக்கிழார் பெருமானும் வீட்டுலகம் சென்று இன்புறுகின்றார்கள். தேவாரமும், பதினோராம் திருமுறையும் பெரியபுராணமும் இல்லாத அவ்வீட்டுலகில் அவர்கள் இருந்துவிட்டுப் போகட்டும். அவை மூன்றும் கூடி இன்பமளிக்கும். நமது இவ்வுலக வீட்டுக்கு இனி நாம் போகலாம் தானே!

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

திருவிடைக்கழி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில், 12—3—78 அன்று, தருமையாதீன குருமகா சந்நிதானம் சீலத்திரு. சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அவர்களின் திருமுன்னிலையில், சேந்தனூர் அருணகிரிநாதர் தெய்வத்திருவுருவச் சிலைகள் நிறுவப்பெற்றபோது, துணை ஆணையர் திரு. ஆர். தண்டபாணி, ஆக்கூர் திரு. அகோரம் ஐயர், திருக்கடவூர் திரு. கே. கனகசபைப்பிள்ளை, பேராசிரியர் திரு. அ. மங்கலமுடையார், செயல் அலுவலர் திரு. எஸ். கே. மீனாட்சிசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ளுதல்.

(முற்றொடர்ச்சி)

செங்கற்பட்டு மாவட்டக் கோயில்கள் பற்றிய குறிப்புகள்

ந. ரா. முருகவேள்,
M.A., M.O.L.

திருக்கச்சிமேற்றளி :

இது காஞ்சிபுரத்தின் ஒரு பகுதியாகிய பிள்ளையார் பாளையத்தின் நடுவில் இருக்கின்றது. திருமால் தளி என்பது, திருமேற்றளி என வழங்குகின்றது. திருமால் ஒரு காலத்தில் சிவ சாரூபம் பெற விரும்பித் தவம் புரிந்தனர். அப்போது அவருக்குச் சிவபெருமான் வெளிப்பட்டு ''வைவசுவத மனுவந்தரத்தில், இருபத்தெட்டாம் கலியுகத்தில், சீர்காழியில் திருஞான சம்பந்தன் தோன்றுவான். அவன் காஞ்சிக்கு வந்து எம்மைப் புகழ்ந்து போற்றித் திருப்பதிகம் பாடுவான். அதனைக் கேட்பதனுல் நுமக்குச் சிவசாரூபம் எய்தும்'' என்று அருள் செய்தார். அங்ஙனமே திருமால் சிவசாரூபம் பெற்று மகிழ்ந்த தலம் இது. அப்பர், சுந்தரர், தேவாரப்பதிகம் பெற்ற சிறப்புடையது.

செல்வியைப் பாகங்கொண்டார்
சேந்தனை மகனுக் கொண்டார்
மல்லிகைக் கண்ணி யோடு
மாமலர்க் கொன்றை சூடிக்
கல்வியைக் கரையிலாத
காஞ்சிமாநகர் தன்னுள்ளால்
எல்லியை விளங்க நின்றூர்
இலங்குமேற் றளிய னூரே. —அப்பர்.

நொந்தா வொண்சுடரே
நுனையே நினைந்திருந்தேன்
வந்தாய் போயறியாய்
மனமே புகுந்துநின்ற
சிந்தாய் எந்தைபிரான்
திருமேற்றளி யுறையும்
எந்தாய் உன்னையல்லால்
இனியேத்த மாட்டேனே. —சுந்தரர்.

அனேகதங்காவதம் :

இது பெரிய காஞ்சிபுரம் புத்தேரித் தெருவின் மேற்குக் கோடியில், கைலாசநாதர் கோயிலுக்குப் போகும்வழியில், அதற்குத் தென்கிழக்கே காற் கல் தொலைவில் உள்ளது. அனேகபம் என்பது யானை. யானை முகத்தையுடைய விநாயகப் பெருமான், அனேகபேச்சுரன் எனத் தமது பெயரினுல் இவ்விடத்து, இலிங்கம் நிறுவி வழிபட்டு அருள் பெற்ரூர். இறைவனின் அருளால் இரணியபுரம் என்னும் இடத்தில் இருந்த அசுரர்களைக் கொன்று, அவர்கள்பால் இருந்த ஆற்றலாகிய வல்லபை என்னும் சக்தியை மணந்தார். திருஞான சம்பந்தப் பெருமான் பாடிய திருப்பதிகம் பெற்ற அனேகதங்காவதம் என ஒரு தலம் வடநாட்டில் இருத்தலால், வேறுபாடு அறிவிப்பதற்கு இதனைக் கச்சி அனேகதங்காவதம் என வழங்குவர். இத்தலத்திற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகம் ஒன்றுண்டு. இக்கோயிலிலேயே இசை உலகில் அண்மைக் காலத்தில் பெரும்புகழ் பெற்று விளங்கியிருந்த நாயனுப்பிள்ளை என்னும் காஞ்சிபுரம் சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், நாள்தோறும் இறைவனை வழிபட்டுத் தங்கியிருந்து இசைப் பயிற்சி செய்து, அதன்கண் பெரும் கலைத் திறன் எய்தப் பெற்றூர் என்பர். ''பீடுபெறப் பெரியோரது இடம், கலிக்கச்சி அனேகதம் காப்பான் இடம்'' எனவரும் தேவாரத் திருமொழியை, இந்நிகழ்ச்சி மெய்ப்பித்ததாகப் பெரியோர்கள் கூறுவர்.

''தேன்நெய்புரிந்துழல் செஞ்சடை எம்பெரு
மானதிடம், திகழைங் கணையக்
கோனை யெரித்தெரி யாடியிடம், குல
வான திடம், குறையா மறையாம்
மானையிடத்த தொர்கை யனிடம், மதம்
ஆறுபடப் பொழியும் மலைபோல்
யானை யுரித்த பிரான திடம், கலிக்
கச்சியனே கதங்கா வதமே.'' —சுந்தரர்.

கயிலாசநாதர் கோயில் :

இது காஞ்சிபுரத்திலுள்ள கோயில்களிலேயே அனைவராலும் அறியப்பெற்ற, புகழ்மிக்க சிறந்த கோயிலாகும். இஃது அனேகதங்காவதத்திற்கு மேற்கில் காற்கல் தொலைவில் உள்ளது. திரிபுராசுரர்களை அழித்தற்பொருட்டுத் திருமால் தமது கூருக ஆதிபுத்தன் என்னும் ஒருவனைப் படைத்து, அவனை நாரத முனிவருடன் அனுப்பி, ''நீவிர் இருவரும் சென்று திரிபுர அசுரர்களின் சிவபக்தியைச் சிதைத்தால், அவர்கள் தமது தவமும் வலிமையும் குன்றுவர். அவர்களைச் சிவபெருமான் அழிப்பர்'' என்று கூறி அனுப்பினர். அவ்வாறே அவ்விருவரும் செய்ததனுல் திரிபுராசுரர்கள், சிவபெருமானுல் சிரித்து எரிக்கப் பெற்றனர். சிவபக்தர்களாக இருந்த திரிபுராசுரர்களைக் கெடுத்து அழியச் செய்த பாவம், நாரத முனிவரையும், ஆதிபுத்தனையும் பற்றியது. அவர்கள் காஞ்சியை அடைய, இரும்பு மலைபோல் இருந்த தமது பாவம், பருத்தி மலைபோல் மெலிவடைந்தது கண்டு, அக்காஞ்சி நகரின் ஒரு பகுதிக்குப் ''பருத்திக் குன்றம்'' எனப் பெயரிட்டு, அங்கு இருந்து கொண்டு, அதற்கு வடகிழக்கில் சிறப்பு நலம் அமைந்த இக்கோயிலை அமைத்து வழி பட்டுத் தவம் புரிந்தனர். சிவபெருமான் வெளிப்பட்டு, ''எம் அடியவர்களைப் பொய்ந்

நூல் போதித்தாயினும், பொருளாசை காட்டியாயினும் மயக்குகின்றவர்கள், நரகில் வீழ்ந்து வருந்துவர். கற்ப கோடி காலத்தும் நீங்காத பாவத்தை அடைவர். நீவிர் அத்தகைய பாவம் புரிந்துள்ளீர்கள். ஆதலின் இத்தலத்தில் வலஞ்செய்யப் புகும் வாயிலையும், வெளிவரும் வாயிலையும், நாம் ஒரு சுருங்கையாகச் செய்வோம். அதில் புகுந்து நீவிர் என்றும் நம்மை வலம் செய்துகொண்டு இங்கு வழிபட்டு வருவீர்களாயின், இறுதியில் நுமக்கு முக்தியளிப்போம்'' என்று கூறி அருள்புரிந்தனர். அதனால் நாரத முனிவரும் ஆதிபுத்தரும் இங்கு வழிபட்டனர் என்பது வரலாறு.

இது காஞ்சியில் உள்ள வரலாற்றுப் புகழ் மிக்க, சிற்பத் திறன் செறிந்த பெருங் கோயிலாகும். இராஜசிம்மன் (கி.பி. 680—705) என்னும் பல்லவ அரசன் கட்டுவித்தது. திருநின்றவூர்ப் பூசலார் நாயனருக்கு அருள்செய்ய, இறைவன் அரசனின் கனவில் தோன்றிப் பிறகு தள்ளி வைத்துக் கொள்ளுமாறு கூறியது, இக்கோயில் கும்பாபிடேகத்தையே யாகும். கைலாசநாதர் கோயில் ''திருக்கயிலையின் அமைப்பினையும் அளவினையும் அருளால் அறிந்து, அதற்கு ஏற்பக் கட்டப்பட்டதே யாகும்'' என்று அருட்டிரு விபுலானந்த அடிகளார் விளக்கியுள்ளார். சிற்பக் கலைத் திறனுக்கே ஒரு பெரும் நிலைக்களமாக, இக்கோயில் விளங்குதலை ஆராய்ந்து வியந்து அறிஞர்கள் பாராட்டியுள்ளனர். பல்லவர் மரபைப் பழி வாங்க உறுதி பூண்டு வெற்றி கொண்ட இரண்டாம் விக்கிரமாதித்தன் (கி.பி. 733—746) என்னும் சாளுக்கிய மன்னர், இக்கோயிலைக் கண்டு மிகப் பெரிதும் வியந்து, இதனை அழிக்கச் சிறிதும் மனம் வராமல், ஏராளமான நன்கொடைகள் வழங்கிப் போற்றி மகிழ்ந்து சென்றார் என வரலாறு கூறுகின்றது. இதனால் இக்கோயிலின் சிற்பக் கலைச் சிறப்பை யாவரும் உணரலாம்.

கைலாசநாதர் கோயிலில் நிறையக் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவை கி.பி. 8ஆம் நூற்றாண்டு முதல் 13ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தை ஆண்ட பல்லவர் சோழர் கல்வெட்டுகளாக இருக்கின்றன. அவற்றுள், இக்கோயிலைக் கட்டிய இராசசிம்மன் (680—705) கல்வெட்டுகளும், அவன் மகனான மூன்றாம் மகேந்திரன், அவன் மனைவி ரங்கபதாகை முதலியோர் கல்வெட்டுகளும் உள்ளன. பல்லவரை வென்று தொண்டை நாட்டை ஆண்ட முதற் பராந்தகன், இராசராசன் (985—1014), இராசேந்திரன் (1012—1044), முதற் குலோத்துங்கன் (1070—1120) ஆகியவரின் கல்வெட்டுகள் பலவாகக் காண்கின்றன. சோழர்காலத்தில் இக்கோயில், மாடவீதிகள், வெளிச்சுற்று, மடவளாகம், தேர் வீதி, மடங்கள் முதலியவற்றையும், அளவிடற்கரிய செல்வத்தையும் பெற்றிருந்தது என்று அக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

திருஅட்டபுயகரம்:

இது செங்கற்பட்டு அரக்கோணம் கிளை இருப்புப் பாதையில், காஞ்சிபுரம் நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவில், ஆடிசன்பேட்டைத் தேரடிக்கு அருகில் உள்ளது. ஆதிகேசவப் பெருமாள், மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், அலர்மேல் மங்கைத் தாயார். ககனஆகிருதி விமானம், கஜேந்திர புஷ்கரிணி. சரபன் என்னும் அசுரனுடன் போர் செய்யப் பெருமாள் எட்டு புயங்களைத் தரித்த கோலம், கஜேந்திரனுக்குப் பிரத்தியட்சம், பேயாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம், அஷ்டபுஜம், அஷ்டபுயங்கம் எனவும் இது வழங்கும். 'அஷ்டபுஜக்கிருகம்' என்பது அட்டபுயகரம் என மருவி வழங்குகின்றது.

''திரிபுரம் மூன்றெரித் தானும் மற்றை
மலர்மிசை மேலய னும்வியப்ப,
முரிதிரை மாகடல் போல்முழங்கி,
மூவுல கும்முறை யால்வணங்க,
எரியன கேசர வாளெயிற்றோடு
இரணிய னாக மிரண்டுகூறு,
அரியுரு வாமிவ ரார்கொலென்ன
அட்ட புயகரத் தேனென்றாரே''

''கலைகளும் வேதமும் நீதிநூலும்
கற்பமும் சொற்பொருள் தானும், மற்றை
நிலைகளும் வானவர்க் கும்பிறர்க்கும்
நீர்மையி னாலருள் செய்து, நீண்ட
மலைகளும் மாமணி யும்மலர்மேல்
மங்கையும் சங்கமும் தங்குகின்ற,
அலைகடல் போன்றிவ ரார்கொலென்ன
அட்ட புயகரத் தேனென்றாரே,''

''மன்னவன் தொண்டையர் கோன்வணங்கும்
நீள்முடி மாலை வயிரமேகன்,
தன்வலி தன்புகழ் சூழ்ந்தகச்சி
அட்ட புயகரத் தாதிதன்னை,
கன்னிநன் மாமதிள் மங்கைவேந்தன்
காமரு சீர்க்கலி கன்றி, குன்றா
இன்னிசை யால்சொன்ன செஞ்சொல்மாலை
யேத்தவல் லார்க்கிடம் வைகுந்தமே''.

—திருமங்கையாழ்வார்.

திருத்தண்கா :

இது காஞ்சிபுரம் நிலையத்தில் இருந்து 2 கல் தொலைவில் உள்ளது. விளக்கொளிப் பெருமாள் கோயில் என வழங்கும். சிலர் விளக்கடி கோயில் எனத் தவறாக வழங்குவர். விளக்கொளிப் பெருமாள், தீபப்பிரகாசன், திவ்வியப் பிரகாசன். மேற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம். மரகதவல்லித் தாயார், ஸ்ரீகர விமானம், சரசுவதி தீர்த்தம், சரசுவதி தேவிக்குப் பிரத்தியட்சம். வேதாந்த தேசிகர் என்னும் வைணவ சமயப் பெருஞ் சான்றோர் திருவவதாரம் செய்த தலம்.

திருப்பரமேச்சுவர விண்ணகரம்:

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. வைகுண்டப் பெருமாள் கோயில் என வழங்கும். பரமேச்சுவர வர்மன் என்னும் பல்லவ மன்னர் அமைத்த விஷ்ணு கோயில் ஆதலின், இதங்குப் பரமேச்சுவர விண்ணகரம் என்று பெயராயிற்று. விண்ணகரம் என்பது, விஷ்ணுகிருகம் என்பதன் மரூஉ ஆகும். இக்கோயிலில் பல்லவ வரலாற்றுச் சிற்பங்கள் நிரம்பிக் காணப்படுகின்றன. பரமபத நாதன்—மேற்கே திருமுக

மண்டலம். வீற்றிருந்த திருக்கோலம். வைகுந்தவல்லித் தாயார்—குமுதவிமானம். கயிரவ தீர்த்தம். மேல் தளத்தில் சயனக் கோலமும், அதற்கு மேல் தளத்தில் நின்ற திருக்கோல உருவமும் உள்ளன. சனகாதிகளுடைய சாபம் அடைந்த வைகுந்த உலகத்தின் துவாரபாலகர்களாகிய சயர், விசயர் என்னும் இருவரும், வல்லவன் வில்லவன் என்னும் அரச குமாரர்களாய் உதித்து அரசாட்சி செய்து வருங்கால், இங்கு மகாவிஷ்ணுவைப் பூசித்து அருள்பெற்றனர் என்பது வரலாறு. திருமங்கையாழ்வார் மங்களா சாசனம்.

“சொல்லுவன் சொற்பொருள் தானவை யாய்ச்
சுவையூறொலி நாற்றமும் தோற்றமுமாய்,
நல்லரன் நான்முகன் நாரண னுக்கிடந்
தான்தடஞ் சூழ்ந்தழ காயகச்சி,
பல்லவன்வில்லவன் என்றுல கில்பல
ராய்ப்பல வேந்தர் வணங்குகழல்
பல்லவன், மல்லையர் கோன்பணிந்த பர
மேச்சுர விண்ணக ரமதுவே.”

“பார்மன்னு தொல்புகழ்ப் பல்லவர் கோன்
பணிந்தபர மேச்சுர விண்ணகர்மேல்,
கார்மன்னு நீள்வயல் மங்கையர் தந்தலை
வன்கலி கன்றிகுன் றுதுரைத்த,
சீர்மன்னு செந்தமிழ் மாலைவல்லார்திரு
மாமகள் தன்னரு ளால், உலகில்
தேர்மன்ன ராயொலி மாகடல் சூழ்கெழு
நீருல காண்டு திகழ்வர்களே.”

திருவேளுக்கை :

இது காஞ்சிபுரம் நிலையத்தில் இருந்து 2 கல் தொலைவில் உள்ளது. “வேள் இருக்கை” என்னும் இரு சொற்கள் வேளுக்கை என்று மருவியது. வேள்—விருப்பம். இறைவன் விரும்பி எழுந்தருளி இருக்கும் இடம் என்பது பொருள். முகுந்த நாயகர் கோயில் என வழங்கும். கிழக்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம். கனக விமானம்—கனக தீர்த்தம். முசுகுந்த அரசனுக்கும் பிருகு முனிவருக்கும் பிரத்தியட்சம், பேயாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களா சாசனம்.

சிறந்தவென் சிந்தையும் செங்கண் அரவும்,
நிறைந்தசீர் நீள்கச்சி யுள்ளும்,—உறைந்ததுவும்,
வேங்கடமும் வெஃகாவும் வேளுக்கைப் பாடியுமே,
தாம்கடவார் தண்டுழா யார்.

அன்றிவ் வுலகம் அளந்த அசைவேகொல்,
நின்றிருந்து வேளுக்கை நீணகர்வாய்,—அன்று
கிடந்தானைக் கேடில்சீ ரானை, முன் கஞ்சைக்
கடந்தானை நெஞ்சமே! காண்.

விண்ணகரம் வெஃகா விரிதிரைநீர் வேங்கடம்,
மண்ணகரம் மாமாட வேளுக்கை,—மண்ணகத்த
தென்குடந்தை தேனார் திருவரங்கம் தென்கோட்டி,
தன்குடங்கை நீரேற்றான் தாழ்வு.

—பேயாழ்வார்.

திருப்பாடகம் :

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. பாண்டவர் தூதர் கோயில் என வழங்கும். கண்ணபிரான் பாண்டவர்கள் பொருட்டுத் துரியோனனிடம் அத்தினாபுரிக்குத் தூது சென்ற போது, அவன் வஞ்சகமாக அமைத்த ஆசனத்தில் இருந்து விசுவரூபம் எடுத்த நிலையில், மிகவும் பெருமை தோன்ற இருக்கும் தலம். பாடு—பெருமை, பாடு அகம்—பாடகம். பாண்டவ தூதர். கிழக்கே திருமுக மண்டலம், வீற்றிருக்கும் திருக்கோலம். உருக்குமிணி, சத்தியபாமை. பத்திர விமானம், மச்ச தீர்த்தம், ஜனமேஜய மகாராஜனுக்கும், அரீத மகாமுனிக்கும் பிரத்தியட்சம், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

“நன்றிருந்து யோகநீதி நண்ணுவார்கள் சிந்தையுள்
சென்றிருந்து தீவினைகள் தீர்த்ததேவ தேவனே,
குன்றிருந்த மாடநீடு பாடகத்தும் ஊரகத்தும்,
நின்றிருந்து வெஃகணைக்கி டந்ததென்ன நீர்மையே?

“நின்றதெந்தை யூரகத்திருந்த தெந்தை பாடகத்து,
அன்றுவெஃக ணைக்கிடந்த தென்னிலாத முன்னெலாம்
அன்றுநான்பி றந்திலேன் பிறந்தபின்ம றந்திலேன்:
நின்றதும் இருந்ததும்கிடந்ததும்மென்நெஞ்சுளே.”

—திருமழிசையாழ்வார்.

“கல்லார் மதிள்சூழ் கச்சி நகருள்
நச்சிப் பாடகத்துள்,
எல்லா வுலகும் வணங்க இருந்த
அம்மான், இலங்கைக்கோன்
வல்லா ளாகம் வில்லால் முனிந்த
எந்தை, விபீடணற்கு
நல்லா னுடைய நாமம் சொல்லில்
நமோநா ராயணமே.”

—திருமங்கையாழ்வார்.

திருநீரகம்:

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. ஜகதீசப் பெருமாள் சந்நிதியென வழங்கும். ஜகதீசன், கிழக்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம். நிலமங்கைவல்லி நாச்சியார், ஜகதீச விமானம். அக்குரூர தீர்த்தம், அக்குரூரர்க்குப் பிரத்தியட்சம். இது உலகளந்த பெருமாள் கோயிலின் உள்ளேயுள்ள திவ்விய தேசங்களுள் ஒன்று. என்றும் பதினாறுக நீண்ட ஆயுள் பெற்ற மார்க்கண்டேயர் பிரளயக் காட்சியைக் காண வேண்டித் தவம் புரிந்து அவ்வாறு அருள் பெற்றது.

“நீரகத்தாய்! நெடுவரையி னுச்சி மேலாய்!
நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி
ஊரகத்தாய், ஒண்துறைநீர் வெஃகா வுள்ளாய்!
உள்ளுவா ருள்ளத்தாய், உலக மேத்தும்
காரகத்தாய்! கார்வானத் துள்ளாய்! கள்வா!
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய், பேராதென் நெஞ்சி னுள்ளாய்!
பெருமான்உன் திருவடியே பேணி னேனே.”

நிலாத் திங்கள் துண்டம் :

இது காஞ்சிபுரம் ஏகாம்பரசேுவரர் கோயிலில் உள்ளது. “நிலாத் திங்கள் துண்டத்தான்” எனத் திருமங்கையாழ்வாரால் (2,059) மங்க

ளாசாசனம் செய்யப்பட்டுள்ளது. மேற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், நேரொருவர் இல்லாத் தாயார். புருஷ சூக்த விமானம், சந்திர புஷ்கரிணி, சிவனுக்குப் பிரத்தியட்சம்.

திருவூரகம் :

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. உலகளந்த பெருமாள் கோயில் என வழங்கும். மாவலிச் சக்கரவர்த்தியிடம் சென்று மூவடி நிலம் கேட்டுத் திரிவிக்கிரம அவதாரம் எடுத்து மூவுலகங்களையும் அளந்த நிலை. உலகளந்த பெருமாள். மேற்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம், அமுதவல்லி நாச்சியார், சார சீகர விமானம்—சேட தீர்த்தம். உரகம் என்னும் ஆதிசேடனுக்குப் பிரயத்தியட்சம். உரகம் என்னும் சொல் நீண்டு ஊரகம் என்று மருவியது. ஊரகம் என்னும் இந்த ஒரு திவ்விய தேசத்திலேயே திருநீரகம், திருக்காரகம், திருக்கார்வானம் என்னும் வேறு மூன்று திவ்விய தேசங்களும் கூட இருக்கின்றன.

திருவெஃகா :

இது சிறிய காஞ்சிபுரத்தில் உள்ளது. யதோக்தகாரி சந்நிதி என வழங்கும். இத்தலத்து எம்பெருமானுக்கு வேகாசேது என்று வடமொழியில் பெயர். அதன் பகுதியாகிய ''வேகா'' என்பது ''வெஃகா'' என்று ஆயிற்று. பெருமாள் சரசுவதி தேவிக்குத் தாம் சொல்லிய படி அருள் செய்தமையினுலும், திருமழிசை யாழ்வாரின் சீடராகிய கணிகண்ணர் என்பவர் ''பைந்நாகப்பாய் சுருட்டிக் கொள்'' என்றும், ''பைந்நாகப்பாய் படுத்துக் கொள்'' என்றும் சொல்லியவண்ணம் கேட்டு நடந்து அருள் புரிந்தமையினுலும், இவருக்குச் ''சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' எனப் பெயர் ஏற்பட்டது என்பர். பொய்கையாழ்வார் அவதரித்த தலம். பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், மங்களாசாசனம்.

கூந்த லார்மகிழ் கோவல னுய் வெண்ணெய்
மாந்த முந்தையில் கண்டு மகிழ்ந்துபோய்,
பாந்தள் பாழியில் பள்ளி விரும்பிய,
வேந்த னைச்சென்று காண்கஃடும்வெப காவுளே.

முளைக்கதிரைக், குறுங்குடியுள் முகிலை,மூவா
மூவுலகும் கடந்தப்பால் முதலாய் நின்ற
அளப்பரிய ஆரமுதை, அரங்கம் மேய
அந்தணனை, அந்தணர்தம் சிந்தை யானை,
விளக்கொளியை, மரகதத்தைத், திருத்தண் காவில்
வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு,
வளர்த்ததனுல் பயன்பெற்றேன் வருக! என்று
மடக்கிளியைக் கைகூப்பி வணங்கி னுளே.

—திருமங்கையாழ்வார்.

வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும், அஃகாத
பூங்கிடங்கில் நீள்கோவல் பொன்னகரும்,—நான்
கிடத்தும்
நின்ருன் இருந்தான் கிடந்தான் நடந்தானே,
என்ருல், கெடுமாம் இடர்.

—பொய்கையார்.

பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும், ஐந்து
நெருப்பிடையே நிற்கவும்நீர் வேண்டா,—விருப்பு
டைய
வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலர்தூய்க் கை
தொழுதால்,
அஃகாவே தீவினைகள் ஆய்ந்து. —பேயாழ்வார்.

நாகத் தணைக்குடந்தை வெஃகா திருவெவ்வுள்,
நாகத் தணையரங்கம் பேரன்பில்—நாகத்
தணைப்பாற் கடல்கிடங்கும் ஆதி நெடுமால்,
அணைப்பார் கருத்தனு வான். —திருமழிசையார்.

திருக்காரகம்:

இது காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயிலின் தெற்குப் பிராகாரத்தில் உள்ள திவ்விய தேசம். கருணுகரன், தெற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், பத்மாமணி நாச்சியார், வாமன விமானம், அக்ராய தீர்த்தம், காரக முனிவருக்குப் பிரத்தியட்சம், திருமங்கை யாழ்வார் மங்களா சாசனம்.

திருக்கார்வானம் :

இதுவும் காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயிலுக்குள்ளே உள்ளது. நவநீத சோரன், கமலவல்லி நாச்சியார், மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், புஷ்கல விமானம், கௌரி தடாகம், பார்வதிக்கும் மகாபலி அசுவத்தாமன் ஆகியோருக்கும் பிரத்தியட்சம், திருமங்கையாழ்வார் (2059), மங்களா சாசனம்.

திருக்கள்வனூர்:

இது காஞ்சிபுரம் காமாட்சியம்மை கோயிலுக்குள் இருக்கின்றது. ஆதிவராகப் பெருமாள். மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், அபயநாயகி நாச்சியார், வாமன விமானம், நித்திய புஷ்கரிணி, அசுவத்த நாராயணனுக்குப் பிரத்தியட்சம். பூமியைச்சுருட்டிப் பாதாளத்துக்கு எடுத்துச் சென்ற இரணியாக்கனை வதைத்துப் பூமியை மீட்டருளிய நிலை. திருமங்கையாழ்வார் மங்களா சாசனம்.

திருப்பவளவண்ணம்:

காஞ்சிபுரத்தில் உள்ளது. பவளவண்ணப் பெருமாள்—பவளவல்லி நாச்சியார். பிரவாள விமானம்—சக்கர தீர்த்தம்—மேற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம்—அசுவினி தேவர்களுக்குப் பிரத்தியட்சம். திருமங்கை யாழ்வார் மங்களா சாசனம் (2,060), இக்கோயிலுக்கு அருகில் பச்சைவண்ணர் கோயில் இருக்கின்றது.

''வங்கத்தால் மாமணிவந் துந்து முந்நீர்
மல்லையாய்! மதிள்கச்சி யூராய்! பேராய்,
கொங்கத்தார் வளங்கொன்றை யலங்கல் மார்வன்
குலவரையன் மடப்பாவை யிடப்பால் கொண்
டான்,
பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின் மேலாய்!
பனிவரையி னுச்சியாய்! பவள வண்ணு,
எங்குற்ருய் எம்பெருமான்! உன்னை நாடி
ஏழையேன் இங்ஙனமே உழிதருகேனே!''

—திருமங்கையாழ்வார்.

1) கோவிந்தவாடி :

இது காஞ்சிபுரத்திலிருந்து 10 கல் தொலேவில் உள்ளது. இதை அடைவதற்குக் காஞ்சிபுரம்—அரக்கோணம் இருப்புப் பாதையிலுள்ள திருமாற்பேறு நிலேயத்திலிருந்து ஒரு கல் தொலேவு நடத்தல் வேண்டும். இங்குள்ள தட்சிணுமூர்த்தி கோயில் முக்கால் ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. கோயில் கோபுரம் 22 அடி உயரமும், 14 அடி அகலமும் கொண்டது. இக்கோயிலேக் கைலாசநாதர் கோயில் என்றும் கூறுவர். கருவறையிலுள்ள இலிங்கம் இரண்டரை அடி உயரமும், மூன்று அடி அகலமும் கொண்டது. 5 அடி உயரமுள்ள பெருமாள் சிலே ஒன்றும், இரண்டு அம்மன் சிலேகளும், அண்மையில் அகழ்ந்தெடுக்கப் பெற்றன. இரு வேளே பூசை. உட்பிராகாரத்துச் சுவரில் ஒரு கல்வெட்டு உள்ளது. 200 ரூபா மதிப்புள்ள நகைகள் உள்ளன. 18.46 ஏக்கர் நிலம் உள்ளது. இதன் ஆண்டு வருவாய் ரூ. 1,000. சில வாகனங்கள் உள்ளன. வியாழக்கிழமைகளில் பக்தர்கள் மிகுதியாக வந்து, பூசைகளும் அருச்சனேகளும் செய்கிருர்கள். ஒரு நிர்வாக அதிகாரியும் 5 அறங்காவலர்களும் உள்ளனர்.

2) புரிசை

காஞ்சிபுரத்திலிருந்து 12 கல் தொலேவு. திருமாற்பேறு நிலேயத்திலிருந்து 5 கல் தொலேவு. இங்குள்ள கரியமாணிக்கப் பெருமாள் கோயில் 300 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பெற்றது. பரப்பு 800 சதுர அடி. பெருமாள், நின்ற கோலத்தில் உள்ளார். பட்டாசாரியர் ஒருவர் தினமும் இரண்டு வேளே பூசை செய்கிருர். 200 ரூ. மதிப்புள்ள பழமையான நகைகள் உள்ளன. 33.93 ஏக்கர் நிலங்கள் உள்ளன. இதன் மூலம் ஆண்டு வருவாய் ரூ. 1,000 கிடைக்கிறது. மார்கழி திருப்பாவை விழாவும், சித்திரையில் அனந்தாழ்வார் சாத்துமுறையும் நிகழ்கின்றன. அப்போது சுவாமி ஊர்வலமாக எழுந்தருள்வார். அனந்தாழ்வார் திருநட்சத்திரத்திற்கும் சாத்துமுறைக்கும் ஓர் அறக்கட்டளே நிறுவப் பெற்றுள்ளது. திருக்கார்த்திகை விழாவும் நடைபெறுகிறது. மூன்று அறங்காவலர்கள் உள்ளனர்.

3) புதுப்பாக்கம் :

இஞ்சம்பாக்கம் நிலேயத்திலிருந்து, ஒரு கல் தொலேவில் இவ்வூர் அமைந்திருக்கிறது. இங்கு ஒரு சிவன் கோயில், ஒரு பெருமாள் கோயில், இரண்டு விநாயகர் கோயில்கள், இரண்டு அம்மன்கோயில்கள் உள்ளன. இவைகள் அனேத்தும் 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பெற்றவை. ஒவ்வொரு கோயிலும் 2 சென்ட் பரப்பில் கட்டப்பெற்றுள்ளது. அம்மன் கோயில்களில் பரம்பரைப் பண்டாரம் ஒருவர் பூசை செய்கின்ருர். மற்ற கோயில்களுக்குப் பரம்பரைக் குருக்கள் ஒருவர் பூசை புரிகின்ருர். இவர்களுக்கு இனம் நிலங்கள் வழங்கப்பெற்றுள்ளன. இக்கோயில்களில் சில வாகனங்களும் ஒரு தேரும் உள்ளன. விநாயகர் கோயிலில் விநாயகர் சதுர்த்தசியும், சிவன் கோயிலில் சிவராத்திரியும், பெருமாள் கோயிலில் புரட்டாசி சனிக்கிழமைகள், வைகுண்ட ஏகாதசி ஆகியவைகள் கொண்டாடப்படுகின்றன. அம்மன் கோயிலுக்கு ஆடி மாதத்தில் மூன்று நாட்கள் விழா நடைபெறுகின்றது. இரண்டு அறங்காவலர்கள் உள்ளனர்.

4) கூரம்

இஞ்சம்பாக்கம் நிலேயத்திலிருந்து 2 கல் தொலேவில், கூரம் கிராமம் உள்ளது. ஆதி கேசவப் பெருமாள் கோயில் மிகவும் பழமையானது. இவ்வூர் வைணவப் பெருமக்களுக்கு மிகவும் புனிதமானது. இங்கேயுள்ள கூரத்தாழ்வார் கோயில் என்பது, 700 ஆண்டுகளுக்கு முற்பட்டது. 30 ஆண்டுகளுக்கு முன்னர், செட்டியார் ஒருவர் கோயிலே விரிவுபடுத்தியுள்ளார். கோயில் 4,000 சதுர அடிப் பரப்பு உடையது. ஒரு கோபுரமும், 2 பிராகாரங்களும், மூன்று கருவறைகளும், 50க்கு மேற்பட்ட தூண்களும் உள்ளன. கருடகம்பம் என்னும் தூண் 35 அடி உயரம் உள்ளது. கார்த்திகை மாதத்துக் கார்த்திகையில் இத்தூணின் மீது விளக்கு ஏற்றப்படுகிறது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில், இராமாநுச நூற்றந்தாதியில் ஏழாம் பாடலில், கூரத்தாழ்வாரைப் பற்றி,

மொழியைக் கடக்கும் பெரும்புகழான்,
வஞ்ச முக்குறும்பாம்
குழியைக் கடக்கும்நம் கூரத்தாழ்வான்
சரண் கூடியபின்,
பழியைக் கடத்தும் இராமாநுசன்
புகழ்பாடி, அல்லா
வழியைக் கடத்தல், எனக்குஇனி
யாதும் வருத்தம் அன்றே''

என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. இராமாநுசரின் சீடர்களுள் ஒருவரும், ''திருமறுமார்பன்'' என்னும் இயற்பெயர் கொண்டவரும் ஆகிய ''ஆழ்வான்'' என்பவர், கூரம் என்னும் இவ்வூரில் தோன்றியவர் ஆதலால், கூரத்தாழ்வார் என்று வழங்கிச் சிறப்பிக்கப் பெற்ருர்.

5) பெரியகரும்பூர் :

இது இஞ்சம்பாக்கம் நிலேயத்திலிருந்து ஒரு கல் தொலேவில் உள்ளது. இங்குள்ள கச்சாலீசுவரர் கோயில், 150 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. இக்கோயிலின் பரப்பு 225 சதுர அடி. குருக்கள் ஒருவர் ஒரு வேளே பூசை செய்து வருகிருர். அவரது மாத ஊதியம் ரூ. 25. விநாயகர் சதுர்த்தசி விழா, சிவராத்திரி விழா ஆகிய இரண்டு மட்டுமே ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றன. மூன்று நியமன அறங்காவலர்கள் உள்ளனர். இவ்வூரிலேயே சுந்தர விநாயகர் கோயில் என்னும் மற்ருெரு கோயிலும் உள்ளது. இக்கோயிலும் 150 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. கோயிலின் பரப்பு 1,200 சதுர அடி. விநாயகர் அமர்ந்த நிலேயில் உள்ளார். இதற்கு 6 ஏக்கர்

நன்செய் நிலங்கள் உள்ளன. குருக்கள் ஒருவர் தினமும் காலையில் பூசை செய்கின்றார். அவருக்கு மாத ஊதியம் ரூ. 25. நிலங்களின் மூலம் ஒன்றரை வண்டி நெல் கிடைக்கின்றது. பெருச்சாளி வாகனம், சிங்க வாகனம், நான்கு கேடயங்கள் ஒரு விமானம் ஆகியவை உள்ளன. இவைகள் 100 ஆண்டுகளுக்கு முன்பு மரத்தால் செய்யப் பெற்றவை. விநாயகர் சதுர்த்தி, திருவாதிரை மாசிமகம் ஆடி மாதத்தில் ஊரணி பொங்கல் ஆகிய விழாக்கள், ஒவ்வோர் ஆண்டும் நடைபெறுகின்றன. இரண்டு நியமன அறங்காவலர்கள் உள்ளனர்.

6) சிறுவள்ளூர் :

இது காஞ்சிபுரத்திற்கு 7 கல் தொலைவில் உள்ளது. இங்குள்ள அகத்தீசுவரர் 3.07 கோயில் ஏக்கர் பரப்புடையதாய், இரண்டு பிராகாரங்களைக் கொண்டுள்ளது. இலிங்கம் சுயம்பு. அது இரண்டடி உயரமும் இரண்டரை அடி அகலமும் கொண்டுள்ளது. இங்கு அகத்தியர் வழிபட்டதாக ஐதிகம். இரண்டு வேளை பூசை நடைபெறுகிறது. பொன் முலாம் பூசிய கழுத்தணிமாலை உள்ளது. 28.20 ஏக்கர் நிலங்கள் உள்ளன. மூன்று அறங்காவலர்கள் உள்ளனர். பிரம்மோற்சவம் ஆண்டுதோறும் நடைபெறுகின்றது.

7) நீர்வள்ளூர் :

காஞ்சிபுரத்திலிருந்து 12 கல் தொலைவில் உள்ளது. இவ்வூரில் இஉள்ள இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் 250 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பெற்றது. இதனை வீற்றிருந்த பெருமாள் கோயில் என்றும் வழங்குவர். இது வடகலையார் கட்டிய கோயில். முன் மண்டபத்தின் உட்சுவரில் அண்மைக் காலத்துக் கல்வெட்டு ஒன்று உள்ளது. கோயிலின் பரப்பு 30 சென்ட். கோயில் ஒரே ஒரு பிராகாரம் கொண்டது. முன் மண்டபம் 8 தூண்களுடனும், உள்மண்டபம் நான்கு தூண்களுடனும் அமைந்து ஒரு கருவறையுடன் விளங்குகின்றது. மூலவர் அமர்ந்த நிலையிலும், உற்சவர் நின்ற நிலையிலும் விளங்குகின்றனர். தாயார் இருவரும் பெருமாளின் மடி மீது இல்லாமல் தனியாக அமர்த்தப்பட்டுள்ளனர். பரம்பரை உரிமையில்லாத பட்டாச்சாரியர் இரு வேளை பூசை செய்து வருகின்றார். ரூ. 700 மதிப்புள்ள அணிகலன்கள் உள்ளன. மூலவர் உற்சவர் வெள்ளி முடிகள், பொன்னாலும் வெள்ளியாலும் செய்த பூணூல்கள், வெள்ளியால் அமைந்த சங்கு சக்கர அஸ்தம் என்பவை குறிப்பிடத்தக்கவை. கோயில் நிலங்களின் மூலம் 40 மூட்டை நெல் கிடைக்கிறது. அவற்றுள் 12 மூட்டை நித்திய பூசைகள் பிரசாதத்திற்கும், 21 மூட்டைகள் கோயில் ஊழியர்களுக்கும், எஞ்சிய 7 மூட்டை நெல் கார்த்திகை மார்கழி மாதப் பூசைகளுக்கும் உபயோகப்படுத்தப்படுகின்றது. தைப் பூசம் சாத்து முறைகள் ஆண்டு தோறும் நடத்தப் பெறுகின்றன. ஐந்து அறங்காவலர்கள் இக்கோயிலை நிருவகித்து வருகின்றனர்.

8) திருப்புட்குழி :

இது சென்னையிலிருந்து 50 கல் தொலைவிலும், காஞ்சிபுரத்திலிருந்து 8 கல் தொலைவிலும் உள்ளது. திருப்புட்குழி என்ற பெயரில், இங்கு ஓர் இருப்புப் பாதை நிலையமும் உள்ளது. இவ்வூரில் உள்ள விஜயராக்வப் பெருமாள் கோயில், சுந்தர பாண்டியன் காலத்தில் கட்டப் பெற்றுள்ளது. இங்குப் பல கல்வெட்டுக்கள் உள்ளன. பிற பெருமாள் கோயிலில் இருப்பதைப் போல் அல்லாமல், இங்குத் தாயார் சந்நிதி பெருமாளின் வலப் பக்கத்தில் உள்ளது. இராவணன் பஞ்சவடியில் இருந்து சீதையைக் கவர்ந்து சென்ற போது, சடாயு சீதையை மீட்பதற்காக இராவணனை எதிர்த்துப் போர் இட்டார். அப்போது இராவணன் சடாயுவினுடைய இறக்கைகளைத் தன் வாளால் வெட்டி வீழ்த்தி விட்டான். இராமபிரான் இங்கு வந்த போது சடாயுவைச் சந்தித்தார். சடாயு இராமபிரானுக்குச் சீதையை இராவணன் கவர்ந்து சென்ற செய்தியைத் தெரிவித்து உயிர் நீத்தார்.

இராமன் சடாயுவாகிய புள்ளை ஒரு குழியில் வைத்து இங்குத் தகனம் செய்தார். அதனால் இதற்குத் திருப்புட்குழி என்னும் பெயரமைந்தது. இது 108 வைணவ திவ்விய தேசங்களில் ஒன்று. திவ்வியப் பிரபந்தத்தில், 1115, 2674 (117) ஆகிய இரண்டு பாசுரங்களில் இத் தலம் குறிப்பிடப் பெற்றுள்ளது. இங்குதான் இராமாநுசர் யாதவப் பிரகாசர் என்பவரிடம் தமது இளமையில் வேதாந்த பாடம் கற்றார். இக் கோயிலில் காலை மாலை இரு வேளை பூசை நடைபெறுகின்றது. தென் கலையைச் சேர்ந்த பரம்பரைப் பட்டாச்சாரியர் பூசை செய்து வருகின்றார். ரூ. 5,000 மதிப்புள்ள பழைய அணிகலங்கள் உள்ளன. மற்றும் ரூ. 1,000 மதிப்புள்ள வெள்ளிப் பாத்திரங்கள் உள்ளன. கோயிலுக்கு 36.57 ஏக்கர் நிலங்கள் உள்ளன. அதன் ஆண்டு வருவாய் ரூ. 700. உண்டியல் மூலம் ரூ. 300 கிடைக்கும். 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட குதிரை வாகனம் ஒரு பல்லக்கு முதலியன உள்ளன. மாசி மாதத்தில் பிரம்மோற்சவம் நடைபெறுகின்றது. அப்போது குதிரை வாகனம் செய்து தந்த தச்சரின் சமாதிக்கும், சுவாமி எடுத்துச் செல்லப் பெறுகின்றார். ஆவணியில் பவித்திரோற்சவம், தை அமாவாசையில் தெப்போற்சவம், பங்குனியில் சீராம நவமி ஆகியவைகள் நடைபெறுகின்றன. மூன்று அறங்காவலர்கள் உள்ளனர்.

9) தாமல் :

காஞ்சிபுரத்திலிருந்து 10 கல் தொலைவில் உள்ளது. இது ஒரு இருப்புப் பாதை நிலையம். இங்கு வராகேசுவரர், மற்றும் தாமோதரப் பெருமாள் கோயில்கள் உள்ளன. அவைகள் முதன்மைச் சாலையின் அருகில் உள்ளன. இந்தச் சிவ விஷ்ணு கோயில்கள் இரண்டுமே, உள்ளூர் மக்களால் 200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டன. இவற்றிற்கு முறையே குருக்கள் பட்டாச்சாரி ஆகியோர், இரு வேளை பூசை செய்து வருகின்றனர். மூன்று அறங்காவலர் உள்ளனர்.

10) பெரும்பாக்கம் :

காஞ்சிபுரத்திலிருந்து உந்தூர்திகள் மூலம் இக்கோயிலுக்குச் செல்லலாம். இங்கே உள்ள சீநிவாசப் பெருமாள் கோயிலுக்கு 13 ஏக்கர் 4 சென்ட் நிலங்கள் உள்ளன. கோயிலில் பூசை ஏதும் நடைபெறவில்லை. நிலத்தில் கிடைக்கும் நெல் விளைவிலிருந்து திருப்பதியில் ஏழைகளுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப் படுகின்றன. இக்கோயில் அற நிலையத்துறையின் கண்காணிப்பில் உள்ளது.

11) முசரவாக்கம் :

இது காஞ்சிபுரத்திலிருந்து 9 கல் தொலைவில் உள்ள ஒரு நிலையம். உந்தூர்தி வசதிகள் உள்ளன. ஆதிகேசவர் என்னும் பெருமாள் கோயிலுக்கு, 18.48 ஏக்கர் நிலங்கள் உள்ளன. பரம்பரைப் பட்டாச்சாரியர் பூசை செய்து வருகின்றார். கோயில் அறநிலையத் துறை ஆட்சியின் கீழ் உள்ளது. சக்தீசுவர சுவாமி என்னும் பெயருடைய சிவன் கோயிலுக்குப் பரம்பரைக் குருக்கள் பூசை செய்து வருகின்றார். இதற்கு 8.04 ஏக்கர் நிலங்கள் உள்ளன. கோயிலின் நிர்வாகம் அண்மையில் அறநிலையத் துறையால் எடுத்துக் கொள்ளப் பெற்றது.

12) வேடல் :

இது காஞ்சிபுரத்திலிருந்து 4 கல் தொலைவில் உள்ள ஒரு நிலையம். இங்குள்ள பொன்னியம்மன் கோயில் 2 சென்ட் பரப்பில், 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. பரம்பரைப் பண்டாரம் ஒருவர், மாத ஊதியத்துடன் தினமும் பூசை செய்து வருகின்றார். கோயிலுக்கு 0.33 ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளது. அதன் ஆண்டு வருவாய் ரூ. 100. ஆவணி மாதத்தில் இதற்கு விழா நடைபெறுகிறது.

13) ஆற்றுப்புத்தூர் :

இது காஞ்சிபுரத்திற்கு அருகில், சென்னையிலிருந்து சுமார் 39 கல் தொலைவில் உள்ளது. 1899ஆம் ஆண்டில், 50 சென்ட் நிலப் பரப்பில், திரு ஆ. வேலு முதலியார் என்பவர், இங்கு உள்ள சுப்பிரமணிய சுவாமி கோயிலைக் கட்டினார். பரம்பரை யல்லாத சிவாச்சாரியர் ஒருவர் இரண்டு வேளை பூசை செய்கின்றார். அவருக்கு மாதச் சம்பளம் ரூ. ஐம்பதும், பூசைச் செலவுகளுக்காக ஆண்டுக்கு 375 மரக்கால் நெல்லும் தரப்பெறுகின்றன. கோயிலைக் கட்டிய அன்பர் இதற்கு ரூ. 250 மதிப்புள்ள சில நகைகளை அளித்திருக்கின்றார். 24.83 ஏக்கர் நன்செய் நிலங்களும், 82.41 ஏக்கர் புன்செய் நிலங்களும் உள்ளன. இதன் ஆண்டு வருவாய் ரூ. 950. யானை, மயில், பூதம்ஆகிய வாகனங்களும், சூரியப் பிரபை, சந்திரப் பிரபை, பல்லக்கு தேர் முதலியனவும் மரத்தால் செய்யப்பெற்றுள்ளன. ஆண்டு தோறும் ஐப்பசி மாதம் சஷ்டி உற்சவமும், சூர சம்மார விழாவும் நடைபெறுகின்றன. பரம்பரை அறங்காவலர் இதனை நிர்வகித்து வருகின்றார்.

14) ஆலப்பாக்கம் :

இது செங்கற்பட்டிலிருந்து ஏழு கல் தொலைவில் உள்ளது. இங்கேயுள்ள கோயிலை, சுந்தரராஜப் பெருமாள் கோயில் என்றும், அழகு சுந்தரப் பெருமாள் கோயில் என்றும் கூறுவர். உள்ளூர்ப் பிராமணர்களால், இக்கோயில் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. 10 ஆண்டுகளுக்கு முன்பு திருப்பணிகள் செய்யப் பெற்றன. கோயிலின் பரப்பு 20 சென்ட். சுந்தரராஜப் பெருமாள் நின்ற கோலத்தில் உள்ளார். தாயாரின் பெயர் ஆனந்த வல்லி. பரம்பரை யல்லாத பட்டாச்சாரியர் தினமும் காலையில் பூசை செய்கின்றார். அவரது மாத ஊதியம் ரூ. 50. பத்து ஏக்கர் நிலங்கள் உள்ளன. 32 மூட்டை நெல் கிடைக்கின்றது. இங்கு பங்குனி உத்திர விழா மட்டுமே நடைபெறுகிறது. தனி அறங்காவலர் ஒருவர் இக்கோயிலை நிர்வகித்து வருகின்றார்.

15) சிங்கடிவாக்கம் :

இஃது ஒரு ரயில் நிலையம். காஞ்சிபுரத்திலிருந்து 9 கல் தொலையில் உள்ளது. உந்து வண்டிகளும் மாட்டு வண்டிகளும் இங்குச் செல்லும். கோயிலின் பரப்பு 2 ஏக்கர். இங்குள்ள திருமாலீசுவரர் கோயில் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. 60 ஆண்டுகளுக்கு ஒரு முறையாக இரண்டு முறையும், அண்மையில் 32 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் கும்பாபிஷேகங்கள் நடைபெற்றிருக்கின்றன. இலிங்கம் சுயம்பு. திருமாலீசுவரர், திரிபுரசுந்தரி, முருகன், விநாயகர் உற்சவ விக்கிரகங்கள் உள்ளன. இங்கு இலிங்கத்தின் நெற்றியில் நாமம் போன்ற தழும்பு உள்ளது. உழவர் ஒருவர், தம் வயலை உழுது கொண்டிருந்தபொழுது, இவ் இலிங்கத்தை நிலத்தின் கீழிருந்து கண்டெடுத்தார் என்றும், அப்போது நிலத்தின் கீழிருந்த இலிங்கத்தின் மீது கல்ப்பைக் கொழுவின் முனை பட்டு, இலிங்கத்தின் நெற்றியில் நாமம் போன்ற வடு ஏற்பட்டது என்றும், அதனால் இவருக்குத் திருமால் ஈசுவரர் என்ற பெயர் வழங்கப் பெற்றது என்றும் உள்ளூர் மக்கள் கூறுகின்றனர். பரம்பரைக் குருக்கள் ஒருவர் இரண்டு வேளை பூசை செய்கின்றார். ஆண்டு ஒன்றுக்கு 3 வண்டி நெல், அவருக்குத் தரப்படுகின்றது. கோயிலுக்கு நன்செய்யும் புன்செய்யுமாக 19 ஏக்கர் நிலங்கள் உள்ளன. அவற்றின் மூலம் ஆண்டு வருவாய் ரூ. 475 கிடைக்கின்றது. விநாயகர் சதுர்த்தி ஆருத்ரா சிவராத்திரி ஆகிய விழாக்கள் ஆண்டுதோறும் நடைபெறுகின்றன. ஐந்து நியமன அறங்காவலர் உள்ளனர்.

தொடரும்



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில், அறநிலைய ஆணையர் திரு எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் நடைபெற்ற பாவை விழாவில், காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் அவர்கள் உரை நிகழ்த்துதல்.

சென்னை சைதாப்பேட்டை அருள்மிகு காரணீசுவரர் கோயிலுக்குத் தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் வருகை தந்து, ''திருக்கோயில்'' ஆசிரியர் மொழிபெயர்ப்புச் செய்ய, உரை நிகழ்த்துதல். உடனிருப்பவர் தவத்திரு வேதாத்திரி சுவாமிகள் அவர்கள்.



சென்னைக் கோடம்பாக்கம் வடபழனியாண்டவர் திருக்கோயிலின் துவாரபாலகர்க்கு வெள்ளிக் கவசம் சாத்தும் விழாவில், ஆணையர் திரு கே. எம். பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., அவர்களும், துணை ஆணையர் திரு ஆர். அர்ச்சுனன், பி.ஏ., அவர்களும், செயல் அலுவலர் திரு லிங்கமராஜா, எம்.ஏ., கோயிலின் சிவாச்சாரியார் ஆகியோர் பங்கேற்றல்.



கும்பகோணம் வட்டம், அதிராமங்கலம் அருள்மிகு வனதுர்க்கா பரமேசுவரி கோயிலின் இராஜ கோபுரக் கால்கோள் விழாவில், திருப்பனந்தாள் காசி மடத்தின் தலைவர் தவத்திரு முத்துக் குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல். (26-2-1978).

சோளிங்கபுரம் அருள்மிகு யோகநரசிம்ம சுவாமி கோயிலின், பழைய தாயார் சந்நிதியில் சுதர்சன ஆழ்வார் யந்திரப் பிரதிஷ்டை மற்றும் திருப்பணித் துவக்க விழாவின்போது, ஸ்ரீமத் நாராயண இராமாநுஜ ஜீயர் சுவாமிகள், திருப்பணி நன்கொடையாக ரூ. 3,003க்கான காசோலையைத் துணை ஆணையர் திரு ஆர். அர்ச்சுனன் அவர்களிடம் வழங்குதல். உடனிருப்பவர்கள், உதவி ஆணையர் திரு ஆர். வேலாயுதம், மற்றும் செயல் அலுவலர் திரு எல். சங்கரகுத்தாலம் ஆகியோர் ஆவர். (12-2-78)

வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
... கோட்டம், சென்னை-600002.